V211, 1'C
N52
109154

# கொடை வளம்

கு. ராஜவேலு, எம். ஏ.

# கொடை வளம்

கு. ராஜவேலு, எம். ஏ.

குழந்தை அகம்
41, சீனிவாசப் பெருமாள் சந்நிதி 2-வது தெரு
சென்னை – 14

முதற் பதிப்பு : 1952

உரிமை ஆசிரியர்க்கு

M. I. P. PROJECT
Microfilmed.

109154

44370

விலை ரூபா : 2

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை – 14

M. I. P. PROJECT
Microfilmed.

# நான்முகம்

உலகை அணி செய்யும் ஆறுகள் அளவற்றன. எனினும் அவையெலாம் பொன்னியைப் போன்று மாந்தர்க்குப் பெரிதும் பயன்படுவன அல்ல. மலையெனப் பெயர் கொண்டு இம் மண்ணுலகில் நிமிர்ந்து நிற்பனவும் பல. அவையனைத்தும் வான்தோய் இமயம்போல் உயர்ந்து தோன்றுவன அல்ல. இவ்வாறே மக்களெனப் பிறந்தார் இம் மாநிலத்தில் பலராவர். அவரெல்லாரும் காவிரி போன்று பிறருக்குப் பயன்படுவது மில்லை; இமயம் போன்று சிறந்த வாழ்வு வாழ்வதுமில்லை.

சங்க காலத்திலே பொய்யாக் காவிரி போன்றும், நிலை தளராப் பனிமலை போன்றும் வாழ்ந்த பெரியோர் எண்ணிலர். அவர்களுள் எழுவரைப் புலவர்கள் சிறப்பித்துக் "கடையெழு வள்ளல்கள்" எனப் பாராட்டியுள்ளனர். அன்னவரில் பறம்பிற் கோமான் பாரியைத் தவிர்த்து ஏனையர் அறுவருடன் குமணனின் வரலாற்றையும் இக் "கொடை வளம்" கூறும். பாரியைப்பற்றித் தனியே "வள்ளல் பாரி" என்னும் நூல் எழுதப்பட்டுள்ளமையால் அவனுடைய பீடு நிறைந்த பெருவாழ்வு இதில் இடம் பெறவில்லை.

பழுமரமாய், ஊருண் கேணியாய், மருந்தாகித் தப்பா மரமாய் வாழ்ந்த இவ் வள்ளல்களின் வரலாற்றால் தமிழகத்தின் பண்பும் நாகரிகச் சிறப்பும் உயர்வும் குன்றின் மேலிட்ட விளக்குப் போல் குவலய மெங்கும் ஒளி வீசி விளங்கும்.

தமிழ் இலக்கியத்தின் அணையா விளக்குகளாக ஒளிரும் சங்க இலக்கியங்கள் ஊழியையும் வென்று வாழ்வதாக! வாழ்க தமிழ்!

சென்னை
31-5-1952

கு. ராஜவேலு

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | அதியர் கோமான் | ... | 5 |
| 2. | மாவேள் ஆய் | ... | 32 |
| 3. | கொல்லிப் பொருநன் | ... | 55 |
| 4. | நளிமலை நாடன் | ... | 68 |
| 5. | முல்லைவேலி நல்லூரான் | ... | 80 |
| 6. | முள்ளூர் மன்னன் | ... | 96 |
| 7. | முதிரத்துக் கிழவன் | ... | 108 |


# அதியர் கோமான்

"துஞ்சா முழவின் அருவி ஒலிக்கும் மஞ்சுசூழ் சோலை மலைகள்" சூழ்ந்த சேர நாட்டின் ஒரு பகுதியைக் கோல்கோடாது ஆண்டவன் அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் அருந்திறல் வேந்தனாவன். இவனுடைய தலைநகரம் தகடூராகும். இவ்வணி நகரின்கண் மலைகளின் கூட்டத்தையொத்த மாடங்கள் வானுற விளங்கின. மலர் நிறைந்த செருந்தி முதலிய மரங்கள் செறிந்த காட்டிடத்து, ஆயரும் மறவரும் அணிதிகழ எடுக்கும் விழா மன்றத்தையொத்து அஞ்சியின் நெடுமனையின்கண் உள்ள பரந்த முற்றம் பல்புகழோடு விளங்கியது.

எந்நாளும் இரவலர்க்கு அடையாத நெடுங்கதவமுடைய அவன் நெடுங்கடைக்கண் நின்று பாடும் புலவரையும், பாணரையும், விறலியரையும் அருகாத அன்புள்ளங் கொண்டு அவர்களின் பாசி அன்ன உடை களைந்து, திருமலர் அன்ன புத்தாடை கொடுத்துப் பின்னர்த் தேறலை அருந்தச்

செய்து அவர்களைக் களிப்பின் ஆழ்த்திக் களைப்பைப் போக்குவன். அப்பால் வெள்ளியாலாகிய அழகிய கலத்திலே அமிழ்தம்போன்ற ஊன் சோற்றையும், துவையலோடே அருந்தச் செய்வன். இங்ஙனம் பன்னாள் அவன் அரண்மனையில் விருந்துண்டு தங்கள் கல்வி நலத்தால் அவன் ஆகத்தையும் அகத்தையும் குளிர்வித்துத் தத்தம் நாடு செலக் கருதின், யானையும் தேரும், வேங்கைப்பூவைப் போன்ற செந்நெல்லும் நெற்போரோடே கொடுத்து அவர்களை வழி அனுப்புவன். நெடுமான் அஞ்சியின் நீண்ட புகழை அறியாதவரே, "எம் பசியைப் போக்குவதற்கு வழியும் அறிந்து மழை பெய்யாதாயிற்றே" என்று எண்ணி எண்ணி உள்ளம் குழைவர். இரவலர்பால் ஈரநெஞ்சம் மிகவுடைய இக்காவலன் வீரத்திலும் இணையற்று விளங்கினான். "வாணுதல்விறலி, என்னோடு பொருவாருமுளரோ நும்முடைய நாட்டின்கண்" என்று அவன் நாட்டினின்றும் வரும் இழையணிந்த விறலியை எவரும் வினவ முடியா வண்ணம் ஆண்மைபெற்று விளங்கினான். காற்றால் எறியப்பட்ட முழவின் தெளிந்த ஓசையைக் கேட்டாலே, அது போர்ப்பறையென மாறாக உணர்ந்து உளம் மிக மகிழ்ந்து வெம்போருக்குக் கிளர்ந்தெழுவான். ஒருநாள் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன் முப்பது நாளில் செய்த தேர்க் காலைப்போன்று திண்ணிய உடலை உடையவனாக இருந்தான். அமைதி நிலவுங்காலையில் அவன் அருந்திறலை அறிவது மிக அரிய செயல். மனையின் இறைப்பில் செருகப்பட்ட தீக்கடைக் கோலைப்போன்று அவனுடைய மறம் புறத்தே தோன்றாது கரந்திருக்கும். போர்க்களம் புகுந்துவிட்டாலோ அத்தீக்கடைக்கோலைக் கடைந்தவுடன் வெளிப்படும் தீயேபோன்று கனன்று சீறிப்பாயும் திறல் உள்ள



வன். இங்ஙனம் பேராண்மை மிக்க இவ் விறல்வேந்தனின் ஆணையை எதிர்நோக்கிக் காத்துக்கிடந்தனர் ஆயிரமாயிரம் மழவர் என்னும் மாவீரர்கள். இவர்கள், அடிக்குங் கோலைக் கண்டு அஞ்சாது மேன்மேலும் சீறிப்பாயும் சினமிக்க பாம்பு போன்ற இயல்புடையவர்கள்.

சிங்கத்தின் தலைமையில் சினப்புலி ஆயிரம் ஆயிரமாகத் திரண்டு கிளர்வதைப் போன்று, அதியமானின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மழவர்கள் பகைவர்கள்மேல் படையெடுத்துச் சென்றனர். சென்றவிடமெல்லாம் வெற்றி முரசு கொட்டி ஆர்த்தனர். ஆண்டில் இளையவன் என அதியனை எள்ளி நகையாடிய அரசர்களெல்லாம் செருக்கடங்கி, வாயடங்கி வாழ்ந்தனர். முழங்கால் அளவு நீரிலே, மலைபோன்ற யானையையும் இழுத்து வீழ்த்தும் முதலையையொப்பத் தகடூர் வேந்தன் தன் மைந்தறியாது பேசிய மன்னர்களின் படையை அழித்துப் பணிவித்தான். அவர்களும் தலைவணங்கித் திறை தந்து உய்ந்தனர்.

நெடுமானஞ்சியின் மண் தேய்த்த புகழும், விண் தோய்ந்த வீரமும் அக்காலை வாழ்ந்து வந்த அனைவரின் செவிகளிலும் எட்டின. நல்லிசைப் புலவர்கள் அவன்நாளோலக்கத்தைக் கண்டு களிப்புக்கடலில் மூழ்கினர். ஒளவையார் என்னும் புலவர் பெருமாட்டியும் அஞ்சியின் பரந்த இசையைக்கேட்டு, காடும், குன்றும், நாடும் பின்னொழிய அவன் கடிநகர் அடைந்து அவன் பெருமையினைப் பாடினர். பரிசிலரைக் கண்டவுடன் விரைந்து வந்து பரிசில் பல நல்கும் பண்பினனாகிய அதியமான் ஒளவையாரின் அரிய வரவறிந்தும் யாது காரணத்தாலோ பரிசில் நல்காமல் காலம் கடத்தினான். இச்செயல் ஒளவையாருக்குப் பெரிய ஏமாற்றத்

தையும் குழப்பத்தையும் ஈந்தது. சோற்றுக்காக வாழும் வாழ்க்கை தம்முடையதன்று என்பதை அதியர் கோமானுக்கு அறிவுறுத்த அவாவினார். பரிசிலர்க்கு அடையாத அவன்வாயிலை எண்ணினார். பசித்துவந்த பாவலர்க்குப் பசியாற ஊன் சோறும், தேறலும் அவன் பெருமனை வழங்குவதையும் உன்னினார். உண்டியின் பொருட்டுத்தானா அவர் இவ்வளவு தூரம் நடந்துவந்தார்? அதியமானைப் பற்றிப் பலர் கூறியதும் அவர்நினைவில் வந்தது. புலவரின் உள்ளம் அறியாத அவ்வள்ளலின் கடிமனையின்கண் மேலும் தங்குதல் தம் சான்றாண்மைக்கும் புலமைக்கும் ஒலாத செயல் என எண்ணி அவ்விடம்விட்டு அகலச் சித்தமானார்.

செல்லுமுன் தம் செலவினை வாயில்காப்போனிடம் செப்பிச் செல்லல் வேண்டுமென நினைந்து அவனிடம் சில சொல் கூறினார்: "வாயிலோயே, வாயிலோயே! வள்ளண்மையுடையோரின் செவியிடத்தே, விளங்கும் சொற்களை வித்தித் தாம் நினைத்த பரிசிலை விளைக்கும் பரிசிலர்க்கு அடையாத வாயிலோயே! விரைந்து செல்லும் மாவினையுடைய நெடுமானஞ்சி தன் தரத்தை அறிந்திலனோ? அன்றி என் தரத்தையாவது அறியான் கொல்லோ? அறிவும் இசையும் உடன் பொருந்தினோர் இவ்வுலகினின்றும் நீங்கிட உலகம் வறுமை வாய்ந்துவிடவில்லை. ஆதலால் எம்முடைய யாழ் முதலிய கலங்களை யாங்கள் சுருக்கிக் கட்டினோம். மழுவையுடைய தச்சச் சிறுவன் காட்டில் நுழைந்தால், அவன் கைவன்மைக்குப் பஞ்சமேற்படாவாறு போன்று, எத்திசைச் செல்லினும் அத்திசையில் எமக்குச் சோறுகிட்டும்" எனப் பொருள்படும் பாடலைப் பாடினார்:



"வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்னறி யலன்கொல் என்னறி யலன்கொல்
அறிவும் புகழு முடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே அதனால்
காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"*

வாயிற் காப்போன் இப்பாட்டின் மூலம், அருந்தமிழ்ப் புலமை சான்ற ஔவையாரின் உள்ளம் புண்பட்ட செயலை அறிந்து, விரைந்து சென்று தன் காவலனிடம் கழறினான். அதுகேட்ட அதியன் மனங்கவன்று விரைந்துவந்து ஔவையாரிடம் அவர் மனம் பொருந்தும் வகையில் ஆறுதல்மொழி பல கூறித் தேற்றி அழைத்துச் சென்றான். புலவர் பெருமாட்டியும் காவற்கடம் பூண்ட காவலனுக்கிருக்கும் கணக்கற்ற கடமைகளை எண்ணிய வண்ணமே ஒருவாறு உள்ளம் தேறினார். அன்றுதொட்டு அவனிடம் கொண்ட அன்பு வளர்பிறைபோல் நாளும் வளர்ந்து கனிந்தது. இன்னாதவனைப் போல் முதற்கண் தோன்றிய அப்பெருவள்ளல் புலவர் விரும்பும் பெற்றி அனைத்தும் உள்ள இனியோன்தான் என்பதைக் கண்டறிந்து சாலவும் விம்மிதம் எய்தினார்.

*புறம் : 206

இவ்விருவரின் நட்பால் தமிழகம் மிக்க நலம் பெற்றது. ஔவையாரின் அரிய நட்பால் அதியன் செயற்கரிய வினை பல செய்து முடித்தான்.

“ செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு ”*

என்னும் இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாக இருவர் நட்பும் இத்தமிழக வரைப்பின்கண் விளங்கியது.

விருந்து புறத்திருக்கும்பொழுது, சாவா மருந்து கிட்டினும் தனியே உண்டல் தகாது என்றதெல்லாம் இலக்கியத்தளவே என்பதைப் பொய்யாக்கியது அதியனின் ஒரு விந்தைச் செயல். அவனுடைய நட்பு மாசற்றது, தன்னலமற்றது, வானினும் உயர்ந்தது, கடலினும் பரந்தது என்பதை அவனுடைய செயல் உலகுக்கே எடுத்துக் காட்டியது.

ஒரு பெருமலையின் விடரின்கண்ணே சிறு இலையினையுடைய நெல்லியின் கனியொன்று அதியனுக்குக் கிட்டியது. அக்கனி கிட்டுவது அருமையினும் அருமை. அக்கனியினை உண்டவர் பலகாலம் வாழ்வர். மாந்தரின் வாழ்நாளை பன்னெடுங்காலம் வாழவைக்கும் அக்கனி கிடைத்தும் அக்காவலன் அதை உண்டான் அல்லன். உண்டு பன்னெடுங்காலம் வாழ்ந்து பாரினை ஆண்டு பலன் துய்க்கலாம் என்ற ஆசையும் கொண்டான் அல்லன். என்னே அவனது நெஞ்சப்பாங்கு !

மனிதர் இயற்கையாகவே பெரு நசையுடையவர். போதுமென்ற பொன்னனை மனம் வாய்ப்பது சாலவும்

*குறள் : 781



அரிது. “ அகிலமெல்லாம் கட்டி ஆளினும் நேசித்து ரச வாத வித்தைக்கு அலைந்திடுவர். நெடுநாள் இருந்தபேரும் நிலையாகவே இருந்து காயகல்பம் தேடி நெஞ்சு புண்ணுவர்.” மாந்தர் இயல்பு இது. ஆனால் அதியமானின் கற்றுணர்ந்த உள்ளமோ வேறுவிதமாய் எண்ணியது. “ மன்னனும் மாசறக் கற்றோரும் சீர்தூக்கில் மன்னனிற் கற்றோர் சிறப்புடையர் ” எனக் கருதியது அவன் சீரிய சிந்தை. மாநிலம் புரக்கும் மன்னர்கள் பன்னெடுங்காலம் வாழ்வதால் மாந்தர்க்கு உறும் பயன் யாது? போர்க்களத்தில் அவர்கள் கொல்லும் மாந்தரின் தொகை எத்துணை? விலங்குகளின் தொகை எவ்வளவு? உயிர் போகாது துன்ப வேதனையால் ஓலமிடும் உயிர்கள் எத்துணை? அவர்களைச் சார்ந்தோர் படும் துயர வாழ்க்கையை எண்ணத்தான் முடியுமா?

கசடறக் கற்று, அதற்குத்தக நடக்கும் புலவர் ஒருவர் உயிருடன் இருந்தால் அதனால் மாநிலம் எய்தும் மாண்புறு செயல்களை எண்ணினான். உலகில் அமைதியும், அன்பும், இன்பமும் வளர அவர்கள் இடையருது செய்யும் இலக்கியத் தொண்டை எண்ணும்பொழுதே அவன்மனம் பூரித்தது. வெறுக்கத்தக்க அல்லவை செய்யும் வேந்தரை நல்ல நெறிப் படுத்தியும், செருக்கு மிக்குக் கோல்கோடிய காவலரின் எதிர்நின்று அறிவுரை கூறி அவர்களை அறநெறிப் படுத்தியும் வாழும் புலவர்களின் வாழ்வே மேலானது என எண்ணினான். தன் உயிரைவிடத் தன் கெழுதகை நட்புக்குரிய ஔவையாரின் உயிர் பலமடங்கு மேலானது என அம்மேலோனின் கருத்தில் தோன்றியது. ஔவையாரை அன்புடன் வரவழைத்தான். அரிதிற் பெற்ற அந்நெல்லிக்

கனியின் அருமையை முதலில் அவர்க்கு அறிவியாமலே அவர் அதை உண்ணும்படி செய்தான்.

அந் நெல்லிக் கனியை அவர் உண்டதும், அதன் இயல்பை அவர்க்கு விளங்க உரைத்தான். அதுகேட்ட ஔவையாரின் உள்ளம் படபடத்தது. அவனது அன்பின் எல்லையை எண்ணிப் பார்க்கவும் அவரால் இயலவில்லை. எவ்வளவு பெரிய செயலை அவன் எளிதாகச் செய்துவிட்டான்! அவன் மனிதன்தானா? மனிதன் ஒருவனால் செய்து முடிக்கக் கூடிய செயலா அது? மாண்புடைய அம் மன்னனை மதிசூடிய மாதொரு பாகனோடு சேர்த்து அவர் உள்ளம் உள்ளியது. உள்ளம் உருக உடல் எல்லாம் சிலிர்க்க அவர் வியந்து நின்றார்.

“போர்க்களத்தில் தப்பாத வெற்றியுடையவனே! தடக்கையில் வாளையும் ஏந்தி, தடந்தோளில் வீரவளையையுமணிந்து, ஆரவாரத்தைச் செய்யும் தேறலையுடைய அதியர் கோனே! மாற்றாரைக் கொல்லும் வீரச் செல்வத்தினையுடைய செல்லாச் செல்வனே! பொன்னாரம் பூண்ட அஞ்சியே! பால்போலும் பிறையணிந்த திருமுடியினையும், நீலமணிபோலும் கழுத்தினையுமுடைய பெரியோனைப்போன்று நீயும் நிலைபெற்று வாழ்வாயாக! பெருமானே, பெரிய மலையின் விடரகத்து அரிய உச்சிக்கண் கொள்ளப்பட்ட சிறிய இலையையுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெறுதற்கரிதென்று கருதாது அதனால் பெறும் பேற்றினையும் எமக்குக் கூறாது நின்னுள்ளே அடக்கிச் சாதல் ஒழிய எமக்கு அளித்தனையே” என்றார்.

**“பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**



ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந் தனையே”*

என்று இரக்கமும் விம்மிதமும் படக் கூறினார்.

இவ்வுரை கேட்ட அதியன், அத் தீங்கனியினைத் தின்னத் தகுதியுடையவர் தீந்தமிழ்ப் பாடல் வல்ல ஔவையாரே என்பதை விளக்கி அவர்தம் பாநலத்தின் சுவையினை அளவிலா உவப்புடன் பாராட்டினான்.

அதியனின் புகழுரை கேட்டு ஔவையாரின் உள்ளம் உணர்ச்சிப் பெருக்கால் கிளர்ச்சியுற்றது. அதியனின் ஆரா அன்பே தம் பாடல்களைப் புகழ்ந்து கூறுவதற்குக் காரணமாக இருக்கலாம் என எண்ணினார். “சின்னஞ் சிறு குழந்தைகளின் முற்றா மழலைச் சொற்கள், யாழோசையைப் போன்று கேட்பவர்க்கு இன்பம் செய்யா; காலத்தோடும் கூடியிரா; பொருளும் பொருந்தியிரா. எனினும் அச் செங்கனிவாய்க் குழவிகளின் தந்தையர்க்கோ அவை குழலினும் யாழினும் இனியவையாக இருக்கும். ஏடுகள் எடுத்தியம்பா இன்பக் கதைகளாக அவை சுவையூறும் அல்லவா? அவை போன்றே, அரண் பலகடந்த அஞ்சியே! உன் அருளால் என் சொற்களும் உனக்கு உயர்வாகத் தோன்றுகின்றன” என்று செப்பினார்.

பரிசில் கொடுப்பதற்காகக் காலம் சிறிது நீண்டமை பற்றிக் கவன்ற உள்ளத்தோடு சென்ற ஔவையாரை இங்ஙனம் நெடுமான் அஞ்சி அன்பு பாராட்டினான். உலகில் தமிழ் இலக்கியம் உள்ளவரை அவனது அளப்பரிய அன்பை அவனியால் மறக்க முடியாது. நிலைபெற்ற இறைவனைப்

*புறம் : 91

போல் அவன் நீண்ட புகழும் நிலைத்து நின்று, காலத்தையும் வென்றுவிட்டது. இனியும் அது விளங்கும்.

கடை எழுவள்ளல்களுள் ஒருவனும் ஈகையில் ஒப்பற்று விளங்கிய அதியமான்நெடுமானஞ்சி பகையை வென்று வாகை சூடுவதிலும் வல்லவனாக விளங்கினன். “சேரமானின் உறவினன்; பனைமாலையை யுடையவன். வெட்சிப் பூவையும், வேங்கைப் பூவையும் அணிவோன். அரசர் எழுவர்க்குரிய ஏழிலாஞ்சனையையும் தன் முன்னோர்களிடமிருந்து உரிமையாகப் பெற்றவன். இவனுடைய மரபின் முன்னோர்களே இத் தமிழ் நாட்டிற்குக் கரும்பினைக் கொண்டு வந்தவர்களாவர்” என்பன போன்ற பழம் பெருமையிலே அமைதியும் இன்பமும் அடைய அதியமானின் நெஞ்சம் ஒருப்படவில்லை.

இளமையில் எய்திய வெற்றிகளால் அவன்மனம், போர்க்களத்தை மேன்மேலும் விரும்பிநின்றது. விழவுக் களத்தில் விளையாடும் சிறுவரைப் போன்று அமர்க்களத்தில் நேராரை வென்று வெற்றிமுரசு கொட்டினன். புலவர்களாலும் புகழ்ந்து பாடமுடியா வண்ணம் அவன் இரு பெரும் போர்களில் தன் ஆண்மையைக் காட்டி அடையாரை வென்று அடிப்படுத்தினன். தன்னுடன் பகைத்த, ஒலிக்கும் முரசினையுடைய ஏழு மன்னர்களோடும் மாறுகொண்டு மறக்களம் புகுந்தான். அவ் வெழுவரையும் தன் படையுடன் எதிர்நின்று பொருது வென்று தன் ஆற்றல் தோன்ற விளங்கினன். அக்காலை அவனது வீரம் புலவர்களால் பாடுதற்கரியதாக இருந்தது.

அடுத்து அவன் செய்த போரும் அத்தகைத்தே. மலையமான்மீது மாறாச் சினம் கொண்டு அவன் கோவலூரை



நோக்கி விரைந்தான். அழித்தற்கரிய அவனுடைய அரண் பலவற்றையும் கடந்து அவனுடன் பெரும்போர் உடற்றினன். வெற்றி தோல்வியை அளந்தறிவது அரிதாக விளங்கியது. இரு புறத்து வீரர்களும் தத்தம் தோள்வலியும் வாள்வலியும் வேல்வலியும் காட்டி, கரிமாவும் கடுஞ்சின வேழமும் உடன்றாற் போன்று போரிட்டனர். இரு வேந்தர்களும், அம்பொடு வேல் நுழையும் வழியெலாம் தம் மார்பினைக் காட்டிப் பொருதனர். பகைவரின் வீரமும் திறனும் அவற்றால் போரைப் பலநாள் நடத்துவதும் அதியனின் சினத்தை மிகுவித்தது. தன்னுடைய பாய்ச்சலில் அகப்படாது தப்பிய மானை மீண்டும் தாக்கப் பாயும் கொடு வரி போன்று, பன்மடங்கு சீற்றத்துடன் பாய்ந்தான். மலையனை வென்று ஆர்த்தான். எனினும் அவன் சினத்தீ அடங்கவில்லை. அழகிய கோவலூரையும் அழித்துப் பொடியாக்கி மாறாத சினத்தோடும், சிவந்த கண்ணோடும், குருதி வடியும் விழுப் புண்ணோடும் காட்சி கொடுத்தான். இவ் வரிய வீரத்தின் வெற்றியைப் பரணர் ஒருவரால்தான் பாட முடிந்தது என்று ஔவையார் கூறுகின்றார் :

“ இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணிச்
சென்றமர் கடந்துநின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க் கரியை இன்றும்
பரணன் பாடினன் மற்கொல் மற்றுநீ
முரண்மிகு கோவலூர் நூறிநின்
அரண்அடு திகிரி ஏந்திய தோளே ”*

என்னும் வரிகளால் ஔவையார் தம் கோமானின் இரு பெருங் கொற்றத்தையும் குறித்துப் பாராட்டியுள்ளார்.

*புறம் : 99

பகைவரை நோக்கிச் சிவந்த அதியனின் கண்கள் தன் அன்பான மகனின் திருமுகத்தைக் கண்டபோதும் மாறவில்லையாம். "போர்க்களத்தினின்று திரும்பி வருகின்றான் அதியன். அவனுடைய கையிலே வேல் ஒளிர்கிறது. காலிலே வீரக் கழலை அணிந்திருக்கின்றான். உடம்பு முழுவதும் வியர்வை. அவனுடைய கழுத்தின்கண்ணே ஈரம் புலராத புண்ணினின்று குருதி இன்னும் வடிந்துகொண்டே உள்ளது. வெள்ளிய பனந்தோட்டையும், வெட்சி மலரையும், வேங்கைப்பூவுடனே விரவிக் கட்டிய கண்ணியை, தன் சுருண்ட கரியமயிர் பொலிவு பெறும் வண்ணம் சூடியுள்ளான். புலியொடு பொருத வலிய யானையைப் போன்று இன்னமும் சினம் நீங்காதவனாக இருக்கின்றான். பகைவரை வெகுண்டு பார்த்த அவன்கண்கள் தன் மகனின் திருமுகத்தைக் கண்டும் சிவப்பு மாறாமலிருக்கின்றன."

இக் கருத்தமைந்த பாடலால் ஔவையார் அதியமானின் ஆறாச் சினத்தை நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். தனக்குப்பின் அரசு கட்டில் ஏறப் பிறந்த ஆண்குழந்தையைக் கண்ட பின்னரும் அவன்செங்கண்கள் சீற்றம் தணிந்து தம் செந்நிறம் மாறவில்லையெனில் அவனுடைய வெகுளியின் தன்மையை எங்ஙனம் எடுத்தியம்பக் கூடும்?

வெம்போரில் வெகுண்டெழும் இவன் மறத்தன்மையை அறிந்து இவனிடம் பகைத்தற்கு அனைவரும் அஞ்சினர். அதனால் இவனுடைய போர்யானைகள் போகக் கண்டால் பகைவர் தம் மதிற் கண்ணுள்ள பழைய வாயிற் கதவங்களையும், கணைய மரங்களையும் நீக்கிப் புதியன இடுவார்களாம். அஞ்சியின் குருதிக்கறை படிந்த குதிரைகளைக் கண்டதும், பகைவர்கள் வேலமுள்ளாற் காட்டுவாயில்களை



அடைப்பர் என்றும், அவன்வேலைக் கண்டதும் அவர்கள் கிடுகைக் காம்புடனே கைநீட்டுச் செறிப்பரென்றும் அவன்வீரரைக் கண்டால் தூணியகத்து அம்பை அடக்கிக் கொள்வரெனவும் ஔவையார் பகைவர்களின் அச்சத்தை விளக்கி, அஞ்சியின் கூற்றமொத்த ஆண்மையினை வருணித்துள்ளார்.

இங்ஙனம் பகைவர் துளக்குறும் வண்ணம் சீறியெழும் அதியன் பாவலர்க்கு எளியனாய் இருப்பதை எண்ணும்பொழுது ஔவையாருக்கு வியப்பு மேலிட்டது. நீர்த்துறைக்கண் படியும் பெரிய களிற்றின் வெள்ளிய கொம்புகளை ஊர்ச்சிறுவர்கள் கழுவும்போது அவர்க்கு அது யாதொரு ஊறும் செய்யாது இனியதாய் எளியதாய் இருக்கும். அதைப் போன்று இவ் வேல்வேந்தன் பாவேந்தர்க்குக் காட்சிக் கெளியனாய் கடுஞ்சொல்லன் அல்லனாய் இருந்தான். அவன் பகைவர்க்கோ, அவ் யானை மதம் பிடித்ததைப் போன்று இன்னாதவனாக இருந்தான். புலவரிடை அவன் தண்ணீரைப் போன்றவன்; புல்லாரிடையே கொடியோனாய் விளங்கித் தன் கடமையைச் செய்து வந்தான்.

நீங்காத நட்புப் பூண்டு அவனுடன் வதிந்து வந்த ஔவையார் அவனுடைய நல்ல பண்பினை நாளும் உணர்ந்து நனிமிக மகிழ்ந்தார். ஒருநாள் சென்றாலும், இருநாள் சென்றாலும், பலநாட்கள் தொடர்ந்து சென்றாலும், தலைநாள் போன்ற நட்புடன் நடந்துவரும் அவனது பெருங்குணத்தை எண்ணியும், பகைவரை அடக்குவதில் அவன் காட்டிய மைந்தை மாறிமாறி எண்ணியும் தம் புலமைத் திறனால் அவனைப் பாடி மகிழ்வித்தார். ஆண்டுகள்

சில கடந்தன. அதியனின்மகனும் தந்தையின் அரசியல் சூழ்ச்சித் திறங்களை யெல்லாம் உடன் இருந்து அறிந்து வந்தான்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை நாட்டைச் சோழர் மரபினில் தோன்றிய தொண்டைமான் அக்காலத்தில் செங்கோலோச்சிவந்தான். அவனும் இரவலர்க்குப் பொன்னும் மணியும் புனைதேரும் களிறும் மாவும் கணக்கின்றிக் கொடுத்தான். பாணர்க்குப் பொற்றாமரைப் பூவும் விறலியர்க்குப் பொன்னரிமாலையும் தந்து மகிழ்வித்தான். புலவர்களைப் பேணி இயற்றமிழையும், பாணர்களுக்குப் பரிசில் நல்கி இசைத்தமிழையும், விறலியர்க்குப் பொன் ஈந்து நாடகத்தமிழையும் வளர்த்தல் அக்காலத்து அரசர்களின் இயல்பு.

தொண்டைமானின் நல்லாட்சியில் ஆறலைகள்வரும் கொடியோரும் இலர் எனவும், “உருமும் உரறாது, அரவுந் தப்பா, காட்டு மாவும் உறுகண் செய்யா” என்றும் அவனைப் பாடி வாழ்த்திய புலவர்கள் வருணித்துள்ளனர். இவ்விதம் நல்ல உள்ளமும் வல்ல நெஞ்சமும் உடைய தொண்டைமானுக்கும் நெடுமான் அஞ்சிக்கும் யாது காரணத்தாலோ பூசல் ஏற்பட்டது. அஞ்சியின்மீது படையெடுத்து அவனை முறியடிக்க ஆவன செய்துவந்தான் தொண்டைமான்.

தன்னுடைய ஒற்றர்மூலம் அதியமான் தொண்டைமானின் செயல்களை உணர்ந்து போருக்கு ஆயத்தமானான். அதனைக் கண்ட ஔவையார், போரை ஒழிக்கக் கருதி அதியனின் தூதுவனாகத் தம்மைக் காஞ்சி நகரத்திற்குச் செல்ல அனுமதி கேட்டார். அதியனோ தன் இயல்புக்கேற்றவண்ணம் அமர்க்களம் புகவே எண்ணினான். அவ



னுடைய உள்ளத்தை அறநெறி பல எடுத்துக்கூறி மாற்றிய பின்னர், அதியனின் அரசியல் தூதுவராக அவர் தொண்டைமானிடம் சென்றார்.

ஔவையாரைக் கண்ட அத் தொண்டையர்கோன் அளப்பரிய மகிழ்ச்சிகொண்டு வரவேற்று, உபசரித்து, அவருடன் அளவளாவினான். தன்னுடைய படைக்கலப் பெருமையை ஔவையாருக்குக் காட்டி அதன் மூலம் அதியனை அச்சுறுத்த எண்ணியது அவன் நெஞ்சம். ஔவையாரின் அயர்ச்சியும் வழிநடை வருத்தமும் நீங்கிய பின்னர் ஒரு நாள் அவன் அவரைத் தன்னுடைய படைக்கல இல்லத்திற்கு அழைத்துச் சென்று அவர்க்கு அவைகளை எல்லாம் பெருமிதம் தோன்றக் காட்டியும், விளக்கியும் வந்தான். ஔவையாரும் அவன்படைக்கலப் பரப்பைக் கண்டு வியந்தார். அதியனின் வென்றிச் சிறப்பைத் தொண்டைமான் மனம் நோகாதவண்ணம் எடுத்தியம்பி, போரை விரும்பிய அவன்உள்ளத்தை மாற்ற அவர் தம்முடைய அறிவையும் புலமையையும் பயன்படுத்தினார்.

“மன்னுயிர் புரக்கும் மன்னா! காவலையுடைய இந்த அகன்ற கோயிலின்கண் உள்ள உன்னுடைய படைக்கலங்கள் அழகுற மயிற்பீலி அணியப்பெற்று, மாலையும் சூட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன. திரண்ட வலிய காம்பும் அழகாகச் செய்யப்பட்டு, நெய்யும் பூசப்பெற்றுப் பளபளப்புடன் திகழ்கின்றன. ஆனால் அதியனின் படைக்கலங்களோ, பகைவரைக் குத்துவதால் அவைகளின் கங்கும் நுனியும் முரிந்து, பழுதுபார்க்கும் பொருட்டு நாளும் கொல்லனின் பணிக்களரியிலே குவிந்து கிடக்கும்” என்று பொருள்படும் பாடலைப் பாடினார் :

“ இவ்வே, பீலி அணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொற்றுறைக் குற்றில மாதோ என்றும்
உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எங்கோமான் வைந்நுதி வேலே.”*

காஞ்சி மன்னனின் கலங்களைப் புகழ்ந்து பாடுவது போல் பாடி, அவன் படைக்கலங்கள் போரிலே பயிலாதவை யென்று மறைமுகமாகக் கூறியும், தம் கோமானின் படைக் கலங்கள் கங்கும் நுனியும் முரிந்து கொல்லன் உலைக் களத்தில் கிடக்கின்றன என்பதன் மூலம் அவன் வேலினைப் பழிப்பதுபோற் காட்டி, அவை நாளும் போரிலே பழகியவை என்பதையும் மாற்றரசனுக்கு நன்கு விளக்கினர். நீ போர் பல செய்து பழகாதவன், அதியமானே போரையே தன் வாழ்வாகக் கொண்டவன் என்பதை அவனுக்கு மறைமுக மாகக் காட்டித் தம் வேந்தனின் பீடுசால் பண்பினை அவன் நெஞ்சிற் பதியும் வண்ணம் கூறினர்.

ஔவையாரின் உரைகேட்டு, அமைதியுடனிருந்த தொண்டைமானை, மேலும் நல்லுரை பல கூறி அதியமா னுடன் போர் செய்தல் தகாது என்று உணரும் வண்ணம் கூறித் தெருட்டினர். அரசியல் அறிவும், தூதுக்குரிய பண்பும், ஆழ்ந்த அறிவும், சிறந்த புலமையும் கொண்ட ஔவையாரின் வாக்கால் தமிழ்நாட்டில் பெரும்போர்

*புறம் : 95



ஒன்று நடவாது போயிற்று. இந் நல்ல செய்தியை அதியமான் நெடுமான் அஞ்சியிடம் கூறுதற்காக ஔவை யார் தொண்டைமானிடம் விடைபெற்று விரைந்து தகடூர் வந்து சேர்ந்தார். செய்தி உணர்ந்த அதியன் ஔவையா ரின் ஆற்றலையும் அவர்தம் விழுமிய நட்பையும் எண்ணி உவகை மிகக் கொண்டான்.

நெடுமான் அஞ்சியின் இசைப்பெருமை தமிழகம் எங்கும் பரவியிருந்த காரணத்தால், பரிசிலர்கள் அவனைத் தேடி நாளும் பலராக வருவாராயினர். வந்தவர்க்கெல்லாம் இல்லையென்னாது அவன் வழங்கிய வண்ணமே இருந்தான். மாமலையில் தோன்றிய ஆறு, காடும் நாடும் அலைந்து திரிந் தும் ஆறுதல் அடையாது இறுதியில் அலை விளையாடும் ஆழ் கடலுடன் கலந்து அமைதி அடைவது போன்று, வறுமை யிற் சிக்கித் தடுமாறிய புலவரும் பாணரும் விறலியரும் அதியமானை அடைந்து அவன் அருள்வலியால் அமைதி அடைந்தனர்.

இன்மையென ஒரு பாவியால் இறுகப் பற்றப்பட்ட பெருஞ்சித்திரனார் என்னும் பெரும்புலவர் தம் நல்குரவைப் போக்கும் நல்ல வள்ளல் அஞ்சி ஒருவனே எனக் கருதி அவனை வந்தடைந்தார். பெருஞ்சித்திரனாரின் வரவறிந்த வள்ளல் என்ன காரணத்தாலோ அவரை வந்து நேரிற் காணவில்லை. ஆனால் புலவர் பரிசிலை நாடியே வந்திருப்பார் என்று உணர்ந்து அவர்க்குரிய பரிசிலைப் பிறர்வாயிலாக அனுப்பினான்.

பரிசில் கொடுக்கக் காலந்தாழ்த்தியமைக்காக ஔவை யார் முதன்முதலில் தன்பால் வருத்தமுற்றுச் சென்றது அவன் நினைவில் இருந்தமையால், பெருஞ்சித்திரனாரைக்

காக்கவைப்பின் அவரும் அங்ஙனே தன்மீது வெறுப்புக் கொண்டு ஏக நேரும் என ஒருகால் எண்ணி அவ்வாறு செய்தான் போலும்! ஆயின் அவனுடைய செயல் புலவருக்குப் பெரிதும் சினத்தையும் வருத்தத்தையும் கொடுத்தது. தம்மைக் காணாமலே அவன் அனுப்பிய பரிசிலை அவர் துச்சமென எண்ணினர். தம்முடைய கொடிய வறுமையையும் மறந்தார்.

"குன்றுகளும் மலைகளும் பல பின்கழிய அவனைக் காணவேண்டும் என்ற ஆசையால் வந்தேன். வந்த என்னைக் காணாமலே எனக்குரிய பரிசிலை அனுப்பிய அவன் எங்ஙனம் என்னை அறிந்தான்? என்னை அழைத்துப் பாராமலே தந்த இப்பொருளைப் பெற்றுக்கொள்வதற்கு நான் வாணிகப் பரிசிலன் அல்லன். பரிசிலரின் புலமையையும் தகுதியையும் அறிந்தபின் தினையளவு விரும்பிக் கொடுப்பினும் அதையே யான் பெற்றுக்கொள்வேன். இது எனக்கு வேண்டா" என்று நீங்கினர்.

"குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற என்னயந்து அருளி ஈதுகொண்டு
ஈங்கனஞ் செல்க தானென என்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே"*

என்ற அழகிய பாடலால் பெருஞ்சித்திரனார் அதியனிடம்

*புறம் : 208



அளவற்ற ஆர்வத்தோடும் நம்பிக்கையோடும் வந்தவர் எல்லையற்ற ஏமாற்றத்தோடும் இடுக்கணோடும் சென்றனர் என்பதை நன்கு உணர முடிகிறது.

இந்நிகழ்ச்சியின் போதோ அன்றி இதற்குப் பின்னரோ அதியமானின் அரசியல் வானிலே இடியும் மின்னலும் ஓயாது முழங்கின. இரவில் விளங்கிய முழுமதியைப் போன்று கொடைத்திறத்தில் அவன் விளங்கியதும் காய்கதிர்ச்செல்வனைப் போன்று அரசியல் வானிலே அவன் வெற்றி முழக்குடன் கடமையைச் செய்ததும் இலக்கியச் செய்திகளாகும்வண்ணம் பகைவர் அவன்மேல் சீறிப் பாய்ந்தனர்.

"உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்னும் பழமொழிக்கிணங்க, சேரமானின் உறவினனாகிய அவனைச் சேரமானே பெரும்படைகொண்டு எதிர்த்தான் என்பதைப் பதிற்றுப்பத்து என்னும் சங்க நூலின் வாயிலாக அறியலாம். அந்நூலின் எட்டாம் பத்திலுள்ள பதிகமும் எட்டாவது பாடலும் இச் செய்தியை அறிவிக்கின்றன.

"பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன்தேவி யீன்றமகன்
கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற் றானை யதிக மானோடு
இருபெரு வேந்தரையும் உடனிலை வென்று
முரசுங் குடையுங் கலனுங் கொண்டு
உரைசால் சிறப்பின் அடுகளம் வேட்டு"

என்பது பதிற்றுப்பத்தின் பதிகமாகும்.

" வெல்போ ராடவர் மறம்புரிந்து காக்கும்
வில்பயில் இறும்பில் தகடூர் நூறி
பேஎ மன்ற பிறழநோக் கிஅவர்
ஓடுறு கடுமுரண் துமியச் சென்று
வெம்முனை தபுத்த காலை "

என்பது எட்டாம் பத்தின்கண் உள்ள எட்டாவது பாடலின் அடிகளாகும்.

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையின், " ஆட்டு மந்தை போன்ற குதிரைப் படையும் ஆநிரை போன்ற யானைப் படையும்" தகடூரை முற்றுகை செய்தன. தறுகண் மிக்க அதியனின் மழவர்கள் அரண்களைக் காத்து நின்றனர். அரணுக்குள்ளிருந்த நெடுமானஞ்சியின் வீரம் மேலும் கொழுந்து விட்டெரியும் வண்ணம் ஒளவையார் அவனுக்கு வீரமொழி பல ஊட்டினார்.

" வெண்காந்தட் பூவும், காட்டுமல்லிகையும் கமழும் மலைச் சாரலிலே மறப்புலி சீறினால் அதை எதிர்த்து நிற்கும் மான்கூட்டமும் உளவோ ? விண்ணகத்தே கதிரவன் தன் ஒளிக்கதிர்களைப் பரப்பி எழுந்தால் திசையின்கண்ணே இருளும் உருவுடன் நிற்குமோ ? சுமை மிகுதியால் வண்டியின் பார் அச்சொடு பொருந்தி நிலத்தின்கண் சகடம் புதையினும் மணல்பரக்க இழுத்துச் செல்லும் வலியுடைய பெருமிதப் பகட்டுக்குத் துறையுமுண்டோ ? கணைய மரத்தை ஒப்பக் கைகளையுடையவனே ! மழவர் தலைவனே ! நீ போர்க்களம் புகுந்தால் உன் மண்ணகத்தைக் கைக்கொண்டு ஆரவாரஞ் செய்யும் வீரர்களும் உண்டோ " என்பன போன்ற ஒளவையின் வீரமுழக்கம் கேட்டுப் பெரும்படையினுடன்



வந்த பெருஞ்சேரலிரும் பொறையைக் களத்திற் காணக் கடுகிச் சென்றான்.

விண்ணதிரப் போர்முரசு முழங்கியது. வாள் வீரர்களும் வேல் வீரர்களும் வைத்த கண் வாங்காமல் வீரப் போர் புரிந்தனர். களிறுகள் பிளிறிய வண்ணமே எதிரிகளின் படைகளைக் கலக்கி மிதித்தன. குதிரைகளும் சாரி செய்த வண்ணம் பகைவர்களின் மார்புகள்மீது தம் குளம்புகளெல்லாம் இரத்தம் தோயப் பறந்து சென்றன. வீரர்களின் ஆர்ப்பொலியும், களிறுகளின் பிளிறல் ஓசையும், குதிரைகளின் கனைப்பொலியும், இறந்த வீரர்களின் துன்பம் நிறைந்த ஓலமும், போர்வீரர்களுக்குக் கிளர்ச்சி யூட்டும் பலவகை முரசுகளின் முழக்கமும் சேர்ந்து கடல் ஒலியும் சிறிது எனும்படி செய்தன.

வேந்தர்கள் இருவரும் எரிமலைபோல் கொதித்துக் கடல்அலை போல் சீறிப் பாய்ந்து போர்புரிந்தனர். பகைத் தவரை எல்லாம் மிதித்து அழித்துப் பெரும் புகழ் எய்திய தன்னையும் இப்பொறையன் எதிர்த்தானே! பெருவேந்தன்—முடிவேந்தன் – எனும் செருக்கல்லவா அவனை இங்ஙனம் தூண்டியது எனப் பெருஞ் சினங்கொண்டு அதியன் இரும்பொறையின் யானைகளை யெல்லாம் களத்தில் வெட்டி வீழ்த்தினான்.

இயற்கையின் திருவிளையாடல்கள் பெரிதும் விந்தைக் குரியன. மந்திரக்காரர்களின் கோலைவிட மிக்க வன்மை வாய்ந்தது இயற்கை. இயற்கையின் பகுதிகள் பெரும்பாலும் தம்தம் நெறிப்படியே என்றும் இயங்குவன. அவை தம் விதியினின்றும் மாறுவதுமில்லை. தம் கடமையைச் செய்வதில் எந்நாளும் சலிப்படைவதுமில்லை. காலையில்

தோன்றி மாலையில் மறையும் கதிரவன், இரவிடைத் தோன்றி இருள் போக்கும் வெண்ணிலா, ஓயாது சுழலும் தென்றல் இவைகள் இயற்கையின் ஆணைவழியே என்றும் பிறழாது இயங்குபவை. நீர் தண்ணென்றிருப்பதும், நெருப்பு வெம்மையாய் இருப்பதும், ஆறுகள் பள்ளம் நோக்கிப் பாய்ந்து ஓடிப் பெரும்பள்ளமாகிய இருங் கடலில் கலப்பதும் எவ்வளவு விந்தைக்குரிய செயல்கள் !

இவ்வளவு பெருமையும் வன்மையும் வாய்ந்த இயற்கை, மனிதனுக்கும் பல வரம்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அவன் தன் மடமையினால் அதன் மௌனமொழியை உணர்வதில்லை. உணரும் பெற்றி வாய்ந்த சிலரும் தம்முடைய தன்னலத்தால் அதைப் பொருட்படுத்துவதில்லை. இதன் பயன், குழப்பமும் அமைதியின்மையும் போரும் பூசலுமாய் உலகில் உருக்கொண்டு மனித இனத்தை அழித்துக்கொண்டிருக்கிறது.

பைந்நாகம் பலவற்றைப் பிடித்து ஆட்டும் பாம்பாட்டி என்றைக்காவது ஒருநாள் ஏதாவது ஒரு பாம்பினால் தீண்டப்பட்டே உயிர்விடுவான். கொடிய விலங்குகள் பலவற்றை அடித்துப் பழக்கும் ஆள், அடங்காத விலங்கு ஒன்றால் அறையப்பட்டே இறுதியில் ஆவி நீப்பான். இது இயற்கையின் சட்டம். இதை உணராதவன் மன்னனாயிருந்தாலும் மாஞாலம் போற்றும் புகழ்வாய்ந்த மாண்புடையோனாய் இருப்பினும் இயற்கையின் தண்டனையினின்று எவ்வகையிலும் தப்பமுடியாது.

வரையாது இரவலர்க்கு வழங்கி, வள்ளல் எனப் பெரும் புகழ் நிறுவிய அதியமான் நெடுமானஞ்சியையும் இயற்கை வறிதே விட்டுவிடவில்லை. பகைவர்கள் பலர்மீது



படையெடுத்துச் சென்று அவர்களின் அரண்பல கடந்து, படைகளை அழித்து, அவர்களின் நாடுகளையும் பாழாக்கிப் புலவரின் புகழ்மாலையைச் சூடிய அவனை அழிக்கவும் அவன் வீரர்களைக் கொன்று அணி நகரத்தைப் பொடியாக்கவும் வல்ல பகைவன் பெருஞ்சேரல் இரும்பொறையாக வந்தான். அதியனின் ஆண்மை மிக்க போரினால் அவன் வெற்றிமாலை சூடவில்லை. அவன் வரைபோன்ற மார்பிலும் முகத்திலும் விழுப்புண்பட்டுக் குருதி வடிந்தது.

பாவலர்க்குப் பனிநிலவாய் பகைவர்க்குச் சுடுகதிராய் விளங்கிய அதியனுடன் பலகாலம் உடனிருந்து பழகிய ஔவையார் இம் முறையும் அவனைப் போர்க்களத்தில் தனியே விட்டுவிட்டுப் போய்விடவில்லை. தம் வேல்வேந்தனின் மார்பிலும் முகத்திலும் குருதி வடியும் விழுப்புண்ணைக் கண்டதும் அவரது நெஞ்சமும் குருதி வடித்தது. அதியனின் சோர்வைப் போக்கி அவனுக்குப் புத்துணர்வையும் புதிய ஊக்கத்தையும் கொடுக்கும் வண்ணம் அவன் வென்றியினை விளக்கிப் புகழ்ந்தார். இப்போரிலும் எங்ஙனம் அவன் பகைவரின் மார்புகளைத் துளைத்து விழுப்புண் பலவற்றை உண்டாக்கினான் என்பதை விரித்துரைத்தார். எனினும் அவருடைய அகமனம் எதிரப்போகும் பெருந்தீமையைச் சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருந்தது. அதனால் அவர்சிந்தையையும் மீறிச் சில அவலச் சொற்களை அவர்வாய் சிந்தியது.

“ திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது ”

என்று விழுப்புண்பட்டு நிற்கும் தம் கெழுதகை நண்பனை நோக்கிக் கூறினார்.

இயற்கையும் தன் எண்ணத்தை முடிப்பதற்குப் பெரிதும் முடுகியது. அதியனின் ஆண்மையும் அவன் மழவரின் வீரமும் நகரின் அரணும் பயன்படாது போயின. சேரமான் பெருஞ் சேரல் இரும்பொறை அதியனைத் தன் வேலால் எறிந்து வீழ்த்தி வெற்றி முழக்குடன் பற்றலர் குறுகற் கரிய அவன் நகருக்குள் நுழைந்தான்.

மாரிக்காலத்து மழையென ஔவையாரின் கண்கள் நீரை வடித்தன. ஆறாத் துயரத்தால் அவர் அழுது புலம்பினார். ஆண்டகையும் இறந்துபடுவதா என நொந்து வருந்தினார். உலகியலை எண்ணியும், உயர்ந்தோனின் வாழ்நாளை எண்ணியும் உள்ளம் மிகக் கவன்றார். இரத்தம் வடிக்கும் அவருடைய கற்பனை உள்ளம் ஒரு நிலையின்றித் தவித்தது. "குளிர்ந்த நீரையுடைய துறையின்கண் மணம் வீச மலர்ந்த பகன்றைமலர் பிறரால் சூடப்படாது வறிதே வாடிக் கழிந்ததைப் போன்று தம்மிடமுள்ள பொருளைப் பிறர்க்கு ஈயாமலே இறந்தொழியும் பலரையுடையது இப் பாருலகம். இத் தன்மைத்தான நிலவுலகில் அதியன் எவ்வளவு பயன்பட வாழ்ந்தான். சிறிது மதுவைப் பெற்றால் அதை எமக்குத் தருவான். பெரிய அளவில் கிடைத்தாலோ அம் மதுவை யாம் உண்டு பாட எஞ்சியதை அவன் நுகர்வான். அந்தோ அது கழிந்ததே! சோறு அனைவர்க்கும் பொது எனும் பேருண்மையைத் தெளிந்த அவ் விறல் வேந்தன் சிறு அளவில் அது கிடைப்பினும் பெரிய அளவில் அது இருப்பினும் பலரோடு சேர்ந்துண்பான். ஐயோ! அதுவும் கழிந்துவிட்டதே! என்பொடு ஊன் தடி உளதாகிய இடமெல்லாம் எமக்குத் தந்து அம்பொடு வேல்பட்டு உருவும் போர்க்களமெல்லாம் தான் நிற்பான். நரந்தம் நாறும் தன் கையால் புலவு நாறும் என் தலையை அருளுடன் தடவிக்



கொடுப்பான்! அதுவும் கழிந்ததே! அவன் மார்பிற் பாய்ந்த வேல் அவனைமட்டுமா அழித்தது! இல்லை. இல்லை. அது, பெரும்பாணரின் மண்டையைத் துளைத்து ஊடுருவிச் சென்று, இரப்போர் ஏந்திய கையையும் பிளந்து, சுற்றத்தாரின் புல்லிய கண்ணிற் பாவை ஒளி மழுங்க அழகிய சொல்லையும் நுண்ணிய ஆராய்ச்சியையுமுடைய புலவரின் நாவிலே சென்றன்றோ வீழ்ந்தது? இனிப் 'பாடுவாருமில்லை; பாடுபவருக்கு ஒன்று ஈவாரும் இல்லை'" என்று கல்லும் புல்லும் கடுவிலங்கும் கரைந்துருகும் வண்ணம் அவனைப் பாடினார்:

"சிறியகள் பெறினே, எமக்கீயு மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயு மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கு மன்னே
நரந்தம் நாறும் தன்கையால்
புலவுநாறும் என்தலை தைவரும் மன்னே
அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல்நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றுஅவன்
அருநிறத்து இயங்கிய வேலே
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ [லைப்
இனிப், பாடுநரு மில்லைப், பாடுநர்க்கொன்று ஈகுநரு மில்

பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்குஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே " *

என, உடல்வாடி உள்ளம் சாம்பி "எந்தாய்! பற்றுக் கோடாக நின்று என்னைத் தாங்கிய தகையோய்! நீ எங்கே உள்ளாய்" என்று கன்றுபிரி காராவினைப் போன்று கரைந்தழுதார்.

அதியனின் முன்னே அஞ்சி கைகட்டி வாய்பொத்தி அவன் ஏவல் பார்த்து நின்றோரும் சுற்றத்தினரும் அவனுக்குரிய இறுதிச் சடங்கைச் செய்யத் துவங்கினர். கரிய புறத்தையுடைய விறகால் அடுக்கப்பட்ட ஈமத்தின்கண் அவனது பொன்னுடலை வைத்தனர். அருவிபோல் நீரொழுகும் கண்ணுடனே தன் தந்தைக்கு நெருப்பு வைத்தான் பொருட்டெழினி.

அக்கொடுஞ் செயல் கண்ட ஔவை "அந்தோ, கொடிய நெருப்பே, நீ எந்தையின் உடலை எரிக்காது போயினும் எரித்துப் பிடிசாம்பலாக்கினும், அவனுடைய ஞாயிறு போன்ற புகழை உன்னால் என்றைக்குமே எரிக்க இயலாது. அதியனே! அருங்கனி கொடுத்த பெருவள்ளலே! புலவர் மிடிதீர்த்த மாரியே! உன்னையன்றிக் கழிகின்ற காலையும் மாலையும் இனி எனக்கும் இல்லாது போகட்டும். வெற்றி விளக்காகிய உனக்கு இவர்கள் நடுகல் நட்டு, நாரால் அரிக்கப்பட்ட மதுவை நீ அருந்துவாய் எனச் சிறிய கலத்தின் கண்ணே உகுக்கின்றனர். உயர்ந்தோங்கும் மலை சூழ்ந்த

*புறம் : 235



நாடு முழுவதும் கொடுத்தாலும் பிறர் கொடுத்துக் கொள்ளாத பண்பினையுடைய நீ இப்புல்லிய மதுத்துளிகளையா நுகர்வாய்? எந்தாய் நீ யாண்டுள்ளாய்! என் வாழ்நாளும் வீழக் கடவதாக" என்று கண்ணீர் விட்டுக் கதறினார்:

" இல்லா கியரோ காலை மாலை
அல்லா கியர்யான் வாழு நாளே
நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத்து உகுப்பவுங் கொள்வன் கொல்லோ
கோடுயர் பிறங்குமலை கெழீஇய
நாடுடன் கொடுப்பவுங் கொள்ளா தோனே "*

என்று ஔவையார் அகங் கரைந்து பாடிய இக் கையறு நிலைப் பாட்டு அனைவரின் கண்ணிலும் நீர் வடியச் செய்யும். தமிழகம் முழுவதும் இசையுடன் வாழ்ந்து, இரவலர்க்கு இல்லையெனது அளித்து மேம்பட்டு விளங்கிய அம் மேலோனின் வாழ்வும் இறுதியுற்றது. ஆனால் அவன் ஈட்டிய பெரும் புகழும் நாளும் வளர்த்த நல்ல அறமும் உலகம் உள்ள அளவும் அவனை மறவா வண்ணம் செய்துவிட்டன.

*புறம் : 232

# மாவேள் ஆய்

இயற்கையோடு இயைந்து இன்ப வாழ்வு நடாத்திய பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் அவ்வியற்கையைப் போன்றே செம்மையான நெறியில் நின்று ஒழுகினர். சீரிளந் தென்றலும், வெங்கதிர்ச் செல்வனும், விரிநிலா மதியமும், கடுங்குரல் முகிலும், இன்னார் இனியார் எனக் கருதாது எல்லார்க்கும் ஒப்ப ஒழுகும் பான்மைபோல் சங்க காலத்துப் பெருமக்களும் மாந்தருக்குள் ஏதும் வேறுபாடு கருதாது வாழ்ந்துவந்தனர். இரப்பவர் எவ்வம் நோக்கிப் புரப்பவர் அறம்பல செய்தனர். ஈயுங்காலை அவர்தம் இயல்பு நோக்காது தத்தம் தகுதியறிந்து களிறும் மாவும் கலனும் மணியும் கலின்பெறு தேரும் ஈந்தனர். உயிர்க்குலமெல்லாம் ஒன்றென எண்ணி ஒப்புரவுடன் தம் நாளைக் கழித்தனர். செல்வத்தைப் பற்றிய அவர்தம் கருத்தும் கொள்கையும் இக்காலத்தவர்க்கும் சால வியப்புடையனவாகும். /

"நெடிய மொழிதலுங் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்



புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வஞ் செல்வ மென்பதுவே"*

என அவர்கள் செல்வத்தின் மதிப்பை அறிந்து நன்கு வரையறை செய்து வாழ்ந்தனர்.

இதனால் இருப்பதைக் கரவாது இரப்பவர்க்குக் கொடுத்து இன்பம் துய்த்தனர். சங்க இலக்கியங்களில் இவ் வியல்பு படைத்த வள்ளல்களை வாயாரப் புகழ்ந்து சான்றோர்கள் பாடியுள்ளனர். இவர்களுடைய பாடல்களிலிருந்து அந்நாளில் வள்ளல்களுக்கெல்லாம் வள்ளல்களாய் வாழ்ந்த ஏழு பெரு வள்ளல்களை நாம் அறிய முடிகிறது. மலைக்கண் எழுந்த மாமதியம்போல் அவர்களின் வாழ்வு அந்நாளில் பெரும் புகழுடன் அனைவரும் அறியத்தக்கதாய் விளங்கியது. அவ்வெழுவரிலே ஒருவனாய் விளங்கியவனே "மோசி பாடிய ஆய்" அண்டிரன். உலகமெலாம் மகிழத்தக்க இன் சொல்லைத் தன் இயல்பாகக்கொண்டு ஒழுகி அனைவரையும் அன்பால் பிணித்து வாழ்ந்துவந்தான். தாலமி (Ptolemy) என்னும் யவனப் பேராசிரியர் தம்முடைய குறிப்பில் தென்னாட்டைப் பற்றிய பழைய செய்திகள் பலவற்றையும் குறித்துப் போந்துள்ளார். சங்க நூல்களில் யவனர்கள் அந்நாளில் சேரநாட்டுத் துறைமுகப் பட்டினங்களாகிய தொண்டி முசிறி முதலிய துறைகளில் வந்திறங்கி மிளகு முதலியவற்றைக் கொள்முதல் செய்ததோடு அமையாது உள் நாடுகளிலும் வாணிபம் செய்ததாகச் செய்திகள் உள்ளன. இதனை,

*நற் : 210.

“யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி”*

என்னும் அடிகளால் நன்கு அறியலாம். இச்செய்தியை உறுதிப்படுத்தும் முறையில் தாலமியின் குறிப்புகள் அமைந்துள்ளன. ஆயின் நாடும் தாலமியின் குறிப்பிலே இடம் பெற்றுள்ளது. இவனது நாட்டை அவர், ஆவி நாடெனக் குறித்துள்ளார். இதிலிருந்தும் ஆய் குடியின் பழமை நன்கு விளங்குகிறது.

மாவேள் ஆய் இருந்து ஆண்ட நிலம், இசையொடு விளங்கிய பொதிய மலையும் அதைச் சார்ந்த நாடுமாகும். ஆய்குடி என்னும் ஊர் அவனது அணிநகராக விளங்கியது. அவனது உயர்மலை, பல்வளமும் மிக்கது; மாவும் பலாவும் மணங்கமழ் வேங்கையும் சுரபுன்னையும் ஆரமும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அம்மலையின் உச்சியிலே கொண்டலின் கூட்டங்கள் படிந்து கிடந்தன. கொழுங் கொடிகள் ஒன்றோடொன்று பின்னிப் பூத்துக் குலுங்கின. பொன்னும் மணியும் மின்னி ஒளியைப் பரப்பின.

கவிரம் எனும் மலைப்பகுதியின்கண் அழகிய மலர்கள் நிறைந்த சுனைகள் பல இருந்தன. இச்சுனைகளிலே சூர் மகளிர் உறைவதாக அக்கால மக்கள் கருதிவந்தனர் என்பதை,

தெறுஅது, ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பிற்
கவிரம் பெயரிய உருகெழு கவாஅன்

* அகம் : 149.



ஏர்மலர் நிறைசுனை யுறையும்
சூர்மகள் மாதோ என்னுமென் நெஞ்சே*

என்ற அகநானூற்றுப் பாடலின் மூலம் அறியலாம். இவனுடைய ஆளுகைக்குட்பட்ட காட்டிலே யானைகளின் கூட்டம் நிறைந்திருந்தது. கொடுவரி முதலாய பல வல்விலங்குகளும் இருந்தன. கானவர்கள் வேட்டையாடித் தறுகண் புலியைக் கொன்று அதன் தோலைக் கொணர்ந்தனர். நீர்த்துறைகளினருகே நின்று காட்டுப் பன்றிகளைத் தம் கூரம்புகளால் எய்து அதன் தசையை உணவிற்காகக் கொண்டுவருவர். மலையின் விடரகத்தே உள்ள சந்தனக் கட்டைகளை வெட்டிச் சுமையாகக் கொணர்வர்.

திங்கட் செல்வன் தன்னுடைய முல்லை மலர் போன்ற வெள்ளிய ஒளியால் அணி செய்யும் இராப்போதில் இக் குறவர் மக்கள் மூங்கிற்குழாயின் கண்ணே வார்த்துவைத் திருந்த முதிய மதுவை நுகர்ந்து, தம்முடைய சிறிய மனையின் கண்ணே வேங்கை மலர்ந்து மணம் பரப்பும் இனிய முற்றத்தின்கண் மகிழ்ச்சி பொங்கக் குரவைக்கூத்து ஆடுவார்கள். இவ்வண்ணம் துன்பங் காணாது ஆயின் நல்லாட்சியின் நிழலிலே அவனுடைய குடிகள் பாதுகாவலான வாழ்க்கையில் திளைத்தனர்.

பொதுமன்றத்தின் கண்ணே ஓங்கி வளர்ந்திருக்கும் பலாவின் கிளைகளிலே பாணர்கள் தங்கள் முழவினைத் தொங்க விட்டிருப்பார்கள். அம் முழவினைப் பலாப் பழமென்று தவறாகக் கருதிய மந்திகள் அவைகளைத் தட்டும். உடனே

* அகம் : 198

தெள்ளிய ஓசை அவைகளினின்றும் எழும். அம் மன்றப் பலாவின் கிளைகளிலே உறையும் அன்னச் சேவல், மந்திகள் தட்டியதால் எழும் ஓசையைக் கேட்டு அதற்கு மாறாக ஒலிக்கும். இவ்வாறு காண்பார்க்கு இன்பம் பல கொடுக்கும் இயற்கைவளன் நிறைந்த அவனது மலையை ஆடுமகள் குறுகினல்லது பீடுகெழு மன்னரால் குறுகவே முடியாது.

இங்ஙனம் மலையும் பெருவளனும் அமையப் பெற்ற ஆய் அண்டிரன் பெருவள்ளலாகத் திகழ்ந்தான். தேர்வண் பாரிக்குக் கபிலரும், அடுபோர் அண்ணல் அதியனுக்கு ஔவையாரும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனுக்கு மாங்குடிமருதனாரும் வாய்த்ததைப் போன்றும் அவர்களின் அருங்குணங்கள் பலவற்றையும் அன்னார் எடுத்தோதியதைப் போன்றும் தேர்வேள் ஆய்க்கும் புலமை முற்றிய உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் சான்றோர் நண்பராய் வாய்த்து ஆயின் அரிய வள்ளன்மையும், அடுபோர்த்திறனையும் மிக அழகாகப் பாடியுள்ளார். வாழ்க்கையெனும் கொடுங்கடலின்கண்ணே வறுமையெனும் அலைகளால் அங்குமிங்கும் அலைக்கப்பட்டு, உள்ளமும் உயிரும் வாடிய இரவலர்க்கெல்லாம் எங்ஙனம் பெரும் புணையாக நின்று அண்டிரன் அவர்களைக் கரையேற்றினான் என்பதை அவனுடன் இருந்து பலநாள் பயின்று அவனுடைய பெருங்குணங்களை உணர்ந்த மோசியார் கவிதை நலம் சொட்டச் சொட்ட அவனைப் புகழ்ந்துள்ளார்.

சான்றோர்கள் சூழ்ந்திருக்க வீற்றிருக்கும் ஆயின் நாளோலக்கம் மிக்க அழகும் சிறப்புமுடையது. புன்னையின் பெரிய கிளைகளிலே புதிதாக வந்து தங்கிய வெண்குருகின் ஆர்ப்பைப் போன்று வள்ளல்களுள் ஒருவனாகிய ஆய்



அண்டிரனின் மகிழ்ச்சியுடைய நாளவையின்கண் பாடி வரும் பரிசிலர்க்கு அவன் ஈந்த பண்ணமைந்த தேர்க் கூட்டம் ஒலிக்குமென்பதை,

“ கருங்கோட்டுப் புன்னை குடக்குவாங்கு பெருஞ்சினை
விருந்தின் வெண்குருகு ஆர்ப்பின் ஆஅய்
வண்மகிழ் நாளவைப் பரிசில் பெற்ற
பண்ணமை நெடுந்தேர்ப் பாணியின் ஒலிக்கும் ”*

என்னும் நற்றிணை அடிகள் நன்கு விளக்கும்.

தன் சீர்கெழு நாட்டையும் ஏர்மிகு குன்றையும் பாடி வருவார்க்கு ஆய் யானைகளைப் பரிசிலாக அளித்தான். ஏனைய வள்ளல்களைவிட ஆய் பரிசிலர்க்கு யானைத் தொகுதிகளை நிறையக் கொடுத்தான் என்பதைப் புலவர்கள் மிகப் பாராட்டியுள்ளனர். காரிக்கண்ணனார் என்னும் புலவர் வானத்திலே விளங்கும் கார்மேகங்களுக்கு உவமை கூறும்பொழுது அவை “வியப்புடை இரவலர் வருஉம் அளவை அண்டிரன் புரவெதிர்ந்து தொகுத்த யானை போல” இருந்தன எனக் கூறுகின்றார். அரும்புலவர்க்கும் பெரும்பாணர்க்கும் அவன் அளித்த யானைக் கொடையின் மிகுதியை அளவிடல் அரியசெயலாகும். மோசியார் ஆயின் இப் பெருமையைப் பலவிதமாகப் பாடிச் சிறப்பித்துள்ளார்.

வானத்தின்கண் உள்ள விண்மீன்கள் அனைத்தும் பூத்தாலும் அவை அண்டிரனின் கொடைக்கு உவமையாகா. வானத்திலே கருநிறமே தெரியாவண்ணம்

*நற் : 167

விண்மீன்கள் இடையீடின்றி நின்று விளங்கினால் அதுவே அவனது யானைக் கொடைக்கு உவமையாகலாம் என்று அவர் கூறியுள்ளார்.

முடிதரித்த வேந்தர்கள் மூவருடனும் உடன் உறைந்து காலங் கழித்த மோசியார் ஆயின் அரும்புகழ் கேட்டு அவனைக் காண வந்தார். புலவரைக் கண்ட புரவலன் ஆற்றை அணைக்க எதிர்கொள்ளும் அலைகடலே போன்று உவகை மீதூரச் சென்று வரவேற்று இன்சொல் பல கூறி இருக்கச் செய்தான். பின்னர், தன் தகுதிக்கு ஏற்பப் புலவருக்கு அண்ணல் யானையும் அணிதேரும் ஆடுநடைப் புரவியும் அணிகலன் பலவும் குன்றமெனக் குவித்துக் கொடுத்தான். அதுகண்ட புலவர் மிக்க மலைப்புற்றுப் பரிசில் பெறும் கருத்துடன் தாம் வரவில்லையென்றும் அவனுடைய அரும்புகழ் கேட்டு அவனைக் காணவே வந்ததாகவும் செப்பினார். தம்முடைய கருத்தைப் பாணன் ஒருவனின் கூற்றாக வைத்துப் பாடினார்.

“மலைகெழு நாடனே, மாவேள் ஆயே! புலி வழங்கும் உயர்ந்த மலையின் கண்ணே ஏறுதற்கரிய பிளவினிடை உள்ள சிறு வழியிலே என் விறலியுடன் வந்தேன். வழி நடை வருத்தத்தால் அவள் உடலும் வளைந்தது. கால்களும் மெல்ல அடியிட்டு நடந்தன. எனினும் அதைப் பொருட்படுத்தாது வளைக்கைவிறலி என் பின்னே வர, வரிப் பாடலை இயக்கி அது நானிலந்தோறும் மாறிமாறி ஒலிக்கும் வண்ணம் செய்து படுமலைப்பாலை நிலைபெற்ற என் சிறிய யாழை ஒரு மருங்கில் அணைத்தவண்ணமே தளர்ந்த நெஞ்சமுடன் உன் தலைமை பொருந்திய நல்ல புகழை நினைத்துவந்தேன். என்னுடைய இறைவனே, மன்றத்



தின்கண் பாணரைக் கண்டால் அணி அணியாக யானையை சாய்த்துக் கொடுக்கும் மலைநாடனே! யான் வேண்டியது யானையுமன்று; குதிரையுமன்று; அணிகலன்கள் பூட்டப் பட்ட குதிரைகளால் ஈர்க்கப்படும் தேருமன்று. பாணரும் புலவரும் கூத்தரும் தம் பொருளென நின்பொருளை வளைத்துக்கொள்வாராயின் அவர்பால்நின்று மீண்டும் பொருளைக் கைக்கொள்ளுதலைத் தெளியாத பயன் பொருந்திய உரிமையோடு கூடி அமைவதாக நின் வாழ்நாட்கள். பகைவரது முரணை வென்ற வலியையும் யாவரும் ஒப்பப் புகழும் நாட்டையுமுடையாய்! யான் வந்தது நின்னைக் காண்டல் வேண்டிய மாத்திரையே” என்ற கருத்தமைத்த பாடலின் மூலம், ஆயின் அரும்புகழை அவ்வேந்தனும் உளம் மகிழும் வண்ணம் பாராட்டிச் சிறப்பித்தார்.

“ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர்வீழ்க்கும்” இயல்பு வாய்ந்தது. உறையூர் மோசியாரும், பொதியமலை ஆயும் ஒருவரை ஒருவர் மிக விரும்பினர். ஒருவர் உரையில் மற்றவர் வியந்தனர். பெரும் புலமை வாய்ந்த மோசியார் ஆயின் அரும்பண்புகளை உணர்ந்து மிக்க மகிழ்ச்சி யடைந்தார். “மாண்புடைய இம்மன்னனை முதலில் நினைக்கவேண்டிய உள்ளம் அதற்கு மாறாகப் பிற மன்னர்களை எண்ணியதே. அத்தகைய என் உள்ளம் அமிழ்ந்து போவதாக. இப்பெரியோனின் பெரும் புகழை முதலிற் பாடாது மற்றையோரைப் பாடியதற்காக என் நாவும் கருவியால் பிளக்கப்படுவதாக. இவனுடைய நல்லிசையைக் கேட்காது பிறருடைய புன்சொல்லைக் கேட்ட என்னுடைய செவி, பாழடைந்த ஊரின்கண் உள்ள கிணறு நாளடைவில் தூர்ந்துபோவதைப் போன்று

தூர்வதாக. நரந்தம் பூவையும் நறிய புல்லையும் மேய்ந்த கவரிமான் குவளைப்பூவையுடைய சுனையின் பனிநீரைக் குடித்து அதன் பக்கலிலே உள்ள தகரமரத்தின் தண்ணிழலின் கண்ணே தனது பிணையுடனே வதியும் கவினிய இடங்களையுடைய வடதிசைப் பக்கமுள்ள இமயமலையும் தென்திசைக் கண்ணே ஆய்குடியும் இல்லெனில் இவ்வுலகம் என்னாகும்? அனைத்தும் தலைகீழாக அல்லவா மாறித் தடுமாறும்" என்று அவன் அன்பில் பிணிப்புண்ட அவ் வரும்புலவர் அவனைப் பாராட்டினார்:

"முன்னுள் ளுவோனைப் பின்னுள் ளினேனே
ஆழ்கவென் னுள்ளம் போழ்கவென் நாவே
பாழூர்க் கிணற்றிற் றூர்கவென் செவியே
நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனைப் பருகி யயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்றோ யிமயம்
தென்றிசை ஆஅய் குடியின் றாயிற்
பிறழ்வது மன்றோ இம்மலர்தலை யுலகே"*

என்னும் பாடலால் ஆயை அவர் வான்தோய் இமயத்தோடு ஒருங்கு வைத்துப் பாடி அவனது புரத்தல்தன்மையை இப் பூவுலகம் அறியச் செய்தாரெனினும், ஆயின் பெரும்பண்புகள் எவ்வண்ணம் உயர்வும் சிறப்பும் உடையனவாய் இருந்திருந்தால் புலவர் இவ்வண்ணம் பாடியிருப்பார் என்பதையும் இப்பாடல் மலையிடை யிட்ட விளக்குப் போல் தெரிவிக்கிறது.

*புறம் : 132.



அறத்தாறு பட்ட ஆயின் மனத்தை மறப்போரிலும் ஈடுபடும் வண்ணம் சில செயல்கள் நடந்தன. ஈகையில் ஒப்புயர்வற்றுத் திகழ்ந்ததைப் போன்றே அவன் போரிலும் மேம்பட்டு விளங்கினான். அவன் செய்த போர்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது கொங்கருடன் அவன் மாறுபட்டுச் செய்த அமர் ஆகும். பரந்த வேற்படையுடன் கொங்கர் ஆயை அமரிற் காண அடர்த்துவந்தனர். இருவருக்கும் பெரும்போர் நடந்தது. இறுதியில் ஆயின் போர்வலிக்கு ஆற்றாத கொங்கர்கள் புறங்கொடுத்தனர். ஆயும் பகைவர்களைப் பின்பற்றிச் சென்று மேற்கடற்கரை வரைக்கும் அவர்களை வெருட்டிச் சென்றான். இனி உய்யும் நெறியில்லை என்று உணர்ந்த பகைவர் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணிக் கையிலேந்திய வேலை வீசியெறிந்து விட்டு ஓடினர். ஆயும் அதற்குமேல் அவர்களைப் பின்தொடரவில்லை. படைக்கல மில்லாது வெறுங் கையராய் உள்ள பகைவர்களின்மீது சினங்கொண்டு மலைவது போரிலும் பின்பற்ற வேண்டிய அறச்செயலுக்கு மாறுபடுவதாகும். அறத்திற்கு அன்பு துணையாய் இருப்பதைப் போன்று மறத்திற்கும் பெருந்துணையாய் அது நிற்பதை ஆய் அறிந்தவனாதலால் உயிர்மேல் ஆசைகொண்டு படைக்கலங்களையும் வீசியெறிந்து ஓடும் அப்பற்றலர்பால் ஈரநெஞ்சம் ஓடியவனாய் வாளா இருந்துவிட்டனன். புலவர்களோ பகைவர்கள் அஞ்சி எறிந்த வேலின் பெருந்தொகையைக் கண்டு அதையே ஆய் பரிசிலர்க்குக் கொடுக்கும் அண்ணல் யானையோடு பொருந்துமா என ஆய்ந்து எவ்வகையினும் அது பொருந்தாது என்று ஆயின் கொடைத் திறனை உயர்த்திப் பாடினர்.

அகவாழ்விலும், புறவாழ்விலும் ஆயின் உள்ளம் எங்ஙனம் அரியதிறனுடன் இயங்கியது என்பதைக் கண்ணாரக் கண்ட மோசியார் களிப்பு மிக அடைந்தார். "விளங்குமணிக் கொடும்பூண் ஆயே! பன்னீராண்டுக்கு ஒருமுறை தானே பிடி ஈனும்? அவ்வாறு இருக்கும்பொழுது நீ எவ்வாறு இரவலர்க்கெல்லாம் எண்ணிலடங்கா அண்ணல் யானையைக் கொடுக்கின்றாய்? உன்னுடைய நாட்டிலே உள்ள இளம்பிடி ஒரு சூலில் பத்துக் கன்றுகளை ஈனும் பெற்றி வாய்ந்ததோ" என ஒருகால் ஆயை வினவினார்.

அறஞ் செய்வார் பலரின் உள்ளம் பெரும்பாலும் மறுமை இன்பத்தையே கருதி நிற்கும். ஆயும் ஒருகால் அவ்வின்பத்தைக் கருதித்தான் வரையாது கொடுக்கின்றானோ என்று மோசியார் அயர்த்தார். ஐயம் தீரும் வகையில் அவன் சொல்லையும், செயலையும் சீர்தூக்கி ஆராய்ந்தார். மறுமையைப் பற்றிய எண்ணமே அவன் சீரிய சிந்தையில் சிறிதளவும் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும் அறவிலை வணிகன் ஆய் அலன்" என்பது அவர் கருத்திற்பட்டது. சான்றோர்கள் சென்ற நெறிவழியே செல்லுவதுதான் சீரிய வாழ்க்கை நடத்துவதற்கு அறிகுறியாகும். ஆயின் காலத்திலும், அவனுக்கு முன்னேயும் வாழ்ந்த சான்றோர்கள் அனைவரும் இருப்பதைக் கரவாது பிறருக்கு ஈந்து எஞ்சியதை உண்டு வாழ்ந்தனர். அதன் பயனாய் அவர்தம் புகழ் இந்நிலவுலகின்கண்ணே நின்று நிலைத்துவிட்டது. தன்னுடைய கடமையும் அதுவே யெனக்கொண்டே ஆய் அறம்பல செய்கின்றானே யல்லாது மறுமை இன்பத்தை அவன் மனம் நாடியதில்லை என்பதை



உறையூர் ஏணிச்சேரி மோசியார் ஐயந்திரிபறத் தெளிந்தார். இங்ஙனம் தன்னல மற்றுப் பிறர்க்குரியாளனாய் வாழ்ந்த அவனுடன் நட்புக்கொள்ள நேர்ந்த தம்பேற்றை எண்ணி எண்ணி இறும்பூதெய்தினார்.

இருங்கடல் சூழ்ந்த இவ்வுலகின்கண் ஈவார்க்கும், ஈயாதார்க்கும் இடையே சுண்ணாம்பிற்கும் வெண்ணெய்க்குமிடையே உள்ள வேறுபாடு உண்டு. ஈத்தளிக்கும் செல்வர்கள் தாம் உடம்பும், உயிரும் ஒரு சேரப் பெற்றவர்கள். ஈயாத செல்வர்களின் உடல் அழகாக இருக்கலாம்; ஒளி படைத்துமிருக்கலாம். இருப்பினும் அவர்கள் உயிருடையவர்கள் என்று அறிஞர்களால் கருதப்படமாட்டார்கள். கைதேர்ந்த சிற்பி ஒருவன் மண்ணால் அழகான பாவை ஒன்றைச் செய்கிறான். காண்பவரின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே ஈர்க்கும் கவினுடையதாக அது விளங்குகிறது. உயிர் உள்ள மக்களினும் அழகுடையதாகவும் அது இலங்கலாம். எனினும் மாந்தரைவிட அப்பாவை உயர்வுடையதென்று யாவர் சொல்வார்? ஈயாத செல்வர்கள் இந்தப் புனையப்பட்ட பாவையைப் போன்றவர்களே. உயிர் இல்லாத ஒளிபடைத்த உடம்பு உடையவர்களே அவர்கள்.

இம்மெய்யுரையை செவ்வனமறிந்த மோசியார் ஒரு நாள் வைகறைப் பொழுதில் துயில் நீத்து ஊர் மன்றத்தின் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தார். அப்போது பின்பனிக் காலமாதலால் பனி பெய்துகொண்டிருந்தது. பொழுது இன்னும் நன்கு புலரவில்லை. அவ்வேளையில் பொருநர் சிலர் மன்றத்தின் கண்ணே வளர்ந்து பரந்திருக்கும் பலா மரத்தை நோக்கிச் சென்றனர். புல்வாய் என்னும் மானின் தலைமயிர் படியாது நீண்டிருப்பதைப் போன்று தூக்கத்தில்

கலைந்த அவர்களின் தலையும் அலங்கோலமாக முதலிற் காட்சியளித்தது. ஆனால் பனியில் நடந்த அவர்களின் தலை சிறிது நேரத்தில் படிந்து காணப்பட்டது. அதற்குள் அவர்களும் பரந்த அடியினையுடைய மன்றப் பலாமரத்தை அடைந்தனர். இருள் விலகும் அவ்விளங் காலைப்போதில் தங்களுடைய கிணைப்பறையை நன்கு ஒலிக்குமாறு கொட்டி, குறிஞ்சி மரங்கள் செறிந்து வானுற வளர்ந்திருக்கும் ஆயின் மலைப் பக்கத்தைப் பாடினர்.

அப்போதுதான் உறக்கத்தினின்றும் எழுந்த கலைமான்கள் பொருநர்கள் கொட்டிய கிணைப்பறையின் தெள்ளிய ஓசையைச் செவிசாய்த்துக் கேட்டன. மன்றத்தின் கண்ணே எழுந்த இனிய பாடலைக் கேட்ட மலைவாணர்களோ உடனே வரிப்புலியின் தோலைப் பரப்பி, அதிலே முள்ளம் பன்றியின் கொழுவிய ஊனையும், மணங்கமழும் சந்தனக் கட்டைகளையும் யானைத் தந்தத்தையும் குவித்து விருந்திறையாக அப்பொருநர்க்கு நல்கினர். இக்காட்சியைக் கண்ணுற்று மோசியார் வியந்து நின்றுகொண்டிருந்த பொழுது கீழ்த்திசைக் கண்ணே கதிரவன் தோன்றினான். செக்கச் சிவந்த ஒளியோடு அவன் எழுந்த தோற்றத்தையும் கண்டார். அவருடைய கற்பனை உள்ளம் பச்சைக்கிளியைப் போல் பறக்கத் தொடங்கியது.

மேனியெலாம் பொன்னைப் பரப்பிக்கொண்டு இம்மண்ணின்மேல் எழும் கதிரவனுக்கும், பொன்னைப் பிறருக்கு வாரியிறைக்கும் இம் மண்ணுள் வேந்தன் ஆய்க்கும் இடையே ஏதாவது வேறுபாடு உண்டா என நினைத்தார். பொருநரின் இன்னிசையைக் கேட்ட மாத்திரத்தே அவர்தம் குறை உணர்ந்து ஆயின் குடிகள் கொடை வழங்கும்



கொள்கையினராய் உள்ளனர். “மன்னன் எவ்வழி மன்னுயிரவ்வழி என்பதை முற்றிலும் மெய்ப்பிக்கும் மன்பதையாயுள்ளனர். வேள் ஆய் அவர்களின் புறவாழ்வுக்கு மட்டும் வேந்தனாய் அமையாது அருங்கொடையிலும் அவர்களுக்கு அரசனாய் விளங்கி, இசையொளியோடு இவ்வுலகோர் ஏத்தும் வண்ணம் வாழ்கின்றான். ஆதவனுக்குத் தன்மேனியொளி ஒன்றைத் தவிர வேறு ஒளி ஏது? புகழ் ஒளியில் ஆய்க்கு நிகராக அவனைக் கூறமுடியுமா? விசும்பில் விளங்கும் விரிகதிர் ஞாயிறே! கழல்தொடி ஆய் அண்டிரன்போல நீ வண்மையு முடையையோ?” என்று வினவினார்.

கீழ்த்திசைச் செல்வனையும் தன்னொளியால் விஞ்சிய ஆயின் அரிய செயலிலே அகமகிழ்ந்த அவர், அருகே உள்ள காடுவரைக்கும் நடந்து சென்றார். அக்காட்டைக் கண்டதும் அவருடைய வியப்புப் பன்மடங்கு பெருகியது. விந்தை நிறைந்த சிந்தையொடு அக்காட்டை நன்கு நோக்கினார். குன்றுகளை நிறைத்தாற் போன்ற களிறுகள் அக்கானமெங்கும் நிறைந்திருந்தன. “இக்காட்டில் எங்ஙனம் இவ்வளவு களிறுகள் வந்தன. இயல்பாகக் காட்டிற்காணும் யானைகளை விடப் பெரிய எண்ணிக்கையை உடையதா யிருக்கின்றதே. ஒருகால் இந்தக் கவின்பெறு காடும் சுரபுன்னை மாலையைச் சூடும் வாய் வாள்ஆய் அண்டிரனைப் பாடிக் களிற்றை மிகுதியாகப் பெற்றதோ?” என்று தம் வேந்தனின் கொடையைப் புகழ்ந்தார்.

“மழைக்கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப் பூங்கண்ணி வாய்வா ளண்டிரன்

குன்றம் பாடின கொல்லோ
களிறு மிகவுடைய இக்கவின் பெறுகாடே ''

என்னும் எளிய இப் பாடலால் ஆயின் பெருங்கொடைப் புகழை எவ்வளவு உயர்வாகப் புகழ்ந்துவிட்டார்! இதனினும் அவனுடைய வள்ளன்மையை எவரால் புகழமுடியும்? கற்ற புலவர் தம்நுண்ணறிவால் புல்லியரும் ஆயின்பெருமையை உணரும் வண்ணம் பாடிப் பெருமைப்படுத்தினர்.

பெருங் களிப்பால் உந்தப்பட்ட அவர் உள்ளம் அக் காட்டையும் தாண்டிச் சிறிது சேய்மையின் கண்ணே சென்றது. அப்போது மெல்லிய இயல்பினையுடைய விறலி ஒருத்தி ஆயின் பெரும் புகழைப் பாடிய வண்ணமே வந்துகொண்டிருந்தாள். மோசியார் அவளைக் கண்டு, ''விறலியே, நீ ஆயின் நல்லிசையைச் செவியாற் கேட்டல் அல்லது அவனை நேரிற் கண்டறியாய் அல்லையே? அவனைக் காண்டல் வேண்டினையாயின், மணங்கமழும் நின்னுடைய கூந்தலை அவன் மாமலைக் காற்று அசைக்கும் வண்ணம் மாயிரும்பீலி மஞ்ஞைபோல் நடந்துசென்று மழைபோன்ற வண்மையையுடைய தேர்வேள் ஆயைக் காண்பதற்குச் செல்வாயாக'' என அவளை ஆற்றுப்படுத்தினர். மாரியைக் கண்ட மயிலுக்குக் களிப்பைத் தவிர வேறொன்றும் தெரியாது. அதுபோல் மாவேள் ஆயைக் கண்டவர்க்கு அவர் மனம் மகிழும் வண்ணம் அவன் வாரிக்கொடுப்பான் என்பதை அவளுக்குப் புலப்படுத்தினர்.

ஆயின் பரந்த புகழ் கேட்டுத் தமிழகமெங்கணுமிருந்த வறிய புலவரும் பாணரும் அவன் நாளோலக்கம் நண்ணினர். அந்நாளில் துறையூரிலே ஓடைகிழார் என்னும்



ஒப்பரும் புலவர் தப்பரிய வறுமையிற் சிக்கித் தவித்து வாடினர். தம் ஒக்கலின் பசியைப் போக்கும் தக்கோர் யாரென ஏங்கினர். அக்காலையில் ஆயின் திறங்கேட்டு அவனே தம் மிடியைத் தீர்ப்பான் என எண்ணி விரைந்து வந்தார். புலவர் சூழப் பொலிந்திருக்கும் அவன் நாளவைக் கண்ணே நண்ணி தம் வறுமைத் துன்பத்தைச் செப்பினர்.

''பெருமானே, என்னுடை வறுமைப் பகையை யான் எங்ஙனம் நினக்கு எடுத்துரைப்பேன்? யாழ்ப்பத்தரினது புறத்தை ஒப்ப இழை சூழ்ந்த தையலினது இடைக்கண் உள்ள புரையைப் பற்றி ஈரினது திரளோடு தங்கி என்னை அரிக்கும் பேனின் பகையை ஒரு பகை என்பேனோ? அன்றி உண்ணாமையால் உடம்பு மிக மெலிந்து, துன்பக் கண்ணீர் நிறைந்து இரக்கமுற்ற என் பல கிளைஞரோடு பசிநோய் வருத்தும் பகையை ஒரு பகையென்பேனோ? இவையல்லாது என் எவ்வநிலையை அறியாராய், நின் கைப்பொருளைத் தாவென்று சொல்லி எம்முடைய நிலைகள் தவறும் வண்ணம் குரங்குபோலப் பறித்துக்கொள்ளும் ஆறலைகள்வர் பரந்து வந்து அலைக்கும் பகையை ஒரு பகையென்பேனோ? இவ்வெல்லாப் பகைமையையும் அறிவான் ஆயேயெனக் கருதி நின்னை வாழ்த்தி, நின்புகழையே நம்பி, ஞாயிறு சுடுகின்ற சுரத்தின்கண்ணே நடந்து பெருநசையோடு இவண் வந்தோம். எங்களுக்கு ஒன்றைக் கொடுப்பார் பயன்கருதாது பிறருக்குக் கொடுப்பவராவர். எங்களை ஒழிந்த பிறருக்குக் கொடுப்பவர் பயன்கருதித் தமக்குத் தாமே கொடுத்துக்கொள்பவராவார். நினக்குப் பொருந்திய வண்ணம் எமக்குப் பரிசில் கொடுத்து விடுவாயாக. நாள்தோறும் குளிர்ந்த நீர் ஓடும் துறையூரின்கண் உள்ள

துறைமுன்னர், நுண்ணிய பல மணலினும் பலநாள் நீ வாழ்வாயாக என உன்னை வாழ்த்தி நீ தந்த செல்வத்தை நாங்கள் உண்போம்" என்றார்.

அல்லற்பட்டு ஆற்றாது அழுது புலம்பிய புலவரின் சொல்லைக் கேட்ட ஆய் கண்ணீர் விட்டான். அவரின் வறுமை முற்றும் தீரும் வண்ணம் பெரும்பொருள் நல்கி ஏந்து கோட்டு யானை பலவற்றையும் ஈந்தான். புலவரும் மிடி தீர்ந்து களிப்பு நிறைந்த முகத்தோடு தம் ஊரடைந்து வாழ்ந்தார்.

"வறியார்க் கொன்று ஈவதே ஈகை" எனத் தெளிந்த ஆய் இரவலரைக் கண்ட அளவிலேயே பெரும் பொருள் ஈந்தான். "இடிந்து நிலைதளர்ந்து, ஊன்றுகால் பலவற்றையுடைய மன்றத்தின் ஒருபக்கத்திலே தங்கி, வாரால் பிணிக்கப்படாது, பனைநாராலும் அதன் குருத்தாலும், சுருக்கப்பட்டு, நாள்தோறும் உழவர்களைப் பாடி இரந்துண்ணும் பெருந்துன்பத்தையுடைய பாணர்கள் இரவாமல் வாழும் வாழ்க்கையை ஆய் அளித்தான்". இவ்வாறாக ஆயின் பல் புகழையும் நல்ல வண்ணம் அறிந்த செந்நாப் புலவர், ஆயை நோக்கி, "நன்னாட்டுப் பொருந! பொய்யா ஈகைக் கழல்தொடி ஆய், புலவர்க்குப் புகலிடமாகி நீ இவ்வுலகில் நிலைபெற்று வாழ்வாயாக. நீ இல்லாது வறிதாகும் இவ்வுலகின்கண் புலவர்களும் இல்லாது ஒழிவாராக. அங்ஙனம் புலவர்கள் ஒழியாது நிலவினால் அவர்கள், பெரிய ஓதினும் சிறிய வுணராப் பீடின்று பெருகிய திருவுடையோரைப் பாடாது விடுவாராக" எனத் தம் நன்றி உணர்வை அவனுக்கு வெளிப்படுத்தினார்.



இருகரையும் புரண்டோடும் இன்பக் காவிரிக்கும் வறண்ட வாழ்வு வந்தெய்துமாறு போல் வரையாது அளித்த ஆயின் பெருமனையிலும் செல்வம் குன்றத் தொடங்கியது. செல்வக்காலையிலும், அது சுருங்கிய வேளையிலும் உடனிருந்து பார்த்த பெரும்புலவராகிய மோசியார் அவனுடைய வளஞ்சுருங்கிய கோவிலையும் பாடியுள்ளார்.

"களங்கனியன்ன கருங்கோட்டை உடைய சிறிய யாழை ஏந்திய பாணர்கள் பரிசில் பெற்றுச் சென்றதனால் களிறுகள் நிறைந்திருந்த தறிகள் புல்லென்னும் காட்சியையுடையனவாய் உள்ளன. அவ்விடத்திலே காட்டு மயில்கள் தத்தம் இனத்தோடு தங்கி உள்ளன. இரவலர்க்கு அருகாது அருங்கலன்களை வீசிய அவனுடைய உரிமை மகளிர் இப்போது மங்கல அணியைத் தவிர வேறு அணியை அணியாது உள்ளனர். இங்ஙனம் ஆயின் கோயில் பொலிவழிந்து போயது என்று பிறர் சொல்லுவர். இனிய அடிசிலைப் பிறர்க்குதவாது தம் வயிற்றை நிறைத்து மேம்பட்ட புகழை நீங்கிய செல்வர்களின் கோயில் பொலிவுடையனபோல் பார்வைக்குத் தோன்றினும் அவை பொலிவுடையன அல்ல. ஆயின்கோயில் வறிதெனினும் புகழமைந்த வாய்மையால் அதுவே பொலிவு பெரிதும் உடையதென்னும் கருத்துப்பட அவர் பாடி ஆயைப் பெரிதும் மகிழ்வித்தார்.

"களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின் பனுவற் பாண ருய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
ஈகை யரிய இழையணி மகளிரொடு

சாயின் றென்ப ஆஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை அடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசா லோங்குபுக ழொரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே"*

இப்பாடலால் கொடுப்போரின் தளர்நிலை கொடாத மாக்களின் செல்வநிலையைவிட எல்லாவற்றானும் உயர்ந்தது என்பதை மோசியார் அறிவுறுத்தி,

ஒப்புரவி னல்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.†

என்னுங் கொள்கையை அரண்செய்தார். ஆயும் அந்நிலையிலும் தளராது என்றும்போல் புலவருடனிருந்து அவருடன் அளவளாவி மகிழ்ந்தும் பாணரின் இசைகேட்டுக் களிப்புற்றும் அறத்திற் குறையாத பெருவாழ்க்கையை நடத்தி வந்தான்.

பரம்பிற் கோமானாகிய பாரி நெடுந்தேரை முல்லைக் கொடிக்கு அளித்ததைப் போன்றும் வள்ளல் பேகன் கான மயிலுக்குப் போர்வை போர்த்த திறம் போன்றும் அதியன் அமிழ்துவிளைகனியை ஔவைக்கு ஈந்தவாறு போன்றும் ஆயும் நாகம் நல்கிய கலிங்கத்தை ஆலமர் செல்வனுக்கு அளித்துத் தனிப் புகழ் கொண்டான். இதைச் சிறுபாணாற்றுப்படை ஆசிரியராகிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் விளக்கிப் போந்துள்ளார்.

*புறம் : 127. †குறள் : 220.



இங்ஙனம் பாவலர் பலரால் பாராட்டப்பட்டு யாழுடைப் பாணரால் பாடப்பெற்ற ஆயின் வாழ்நாளும் முடிவடைந்தது. அதுகண்ட ஆர்வலர் பலரும் அழுது புலம்பினர். மக்கள் செய்தியறிந்து இளங்குழந்தைகள்போல் இனைந்து வருந்தினர். அவனுடன் நெடுநாள் பழகிய மோசியார் நெஞ்சம் உருகத் துன்புற்றார். ஆறாத் துயரடைந்து உள்ளம் பெரிதழிந்தார். இருகண்ணும் பொத்தி நெடிது நினைந்தழுதார். அவருடைய மனக்கண் முன்னே அரிய காட்சி ஒன்று தோன்றியது. அவருடைய செவியிலே முரசொலி எதிரொலித்தது. "திண்ணிய தேரை இரவலர்க்கீத்த அண்டிரன் வருகிறான் என்பதை உணர்ந்து அவனை எதிர்கொண்டு வரவேற்பதற்காக இந்திரன் கோயிலிலுள்ள முரசம் முழங்க விசும்பின்கண் ஆர்ப்பெழுந்ததைப்" போன்று அவர் உணர்ந்தார்:

"திண்டேர் இரவலர்க் கீத்த தண்டார்
அண்டிரன் வருஉ மென்ன வொண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே"*

என்ற பாடலால் ஆய் அடைந்த மேனிலையை அவர் உணர்ந்து ஒருவாறு மனந்தேறினார்.

ஈகையிற் சிறந்த அவனது இறந்த உடலை ஈமத்தின்கண்ணே வைக்க வேண்டுவன செய்தனர். ஆயின் உரிமை மகளிரும் "காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி

*புறம் : 211.

ARCHIVES LIBRARY 109/54
V211,1'C
N52

ஊதுலைக் குருகின் உயிர்த்தகத்து அடங்காது இன்னுயிர் ஈயும் " பெண்ணியல்பு வாய்ந்தவராதலால் எரியும் அவன் ஈமத்தின் கண்ணே பாய்ந்து தாங்களும் உயிரை விட்டனர்.

இக்கொடுஞ் செயலைப் பார்த்து நின்ற புலவரும் பிறரும் நொந்து வருந்தினர். அக்காலையில் அவணிருந்த குட்டுவன் கீரனுர் என்னும் பெரும் புலவர் மறைந்த அம்மன்னனின் பெருவாழ்வு மாயமாய்ப் போனதை எண்ணி மனம் மடிந்தார். ஈமச்சடங்கு முடிந்த பின்னர் அவனைச் சூழ்ந்திருந்த அருந்தமிழ்ப் புலவர்கள் வேறு நாடு தேடிச் சென்றனர். அக்காட்சியைக் கண்ட கீரனுர் ; " ஆடுநடைப் புரவியும் களிறும் தேரும் வாடாயாணர் நாடும் ஊரும் பாடுநர்க்கு அருகா ஆய் அண்டிரன் தன்னுடைய உரிமை மகளிரொடு காலன் என்னும் கண்ணில்லாதவன் கொண்டு செல்ல மேலோர் உலகமெய்தினன். ஆந்தை அலறும் கள்ளியை யுடைய இடுகாட்டின் ஒருபுறத்திலே அவனுடைய உடலை ஒள்ளெரியும் உண்டுவிட்டது. புலவர்கள் பொலிவழிந்த கண்ணையுடையராய்த் தம் கல்லென் சுற்றம் கையழிந்து வருந்த வாடிய பசியராகிப் பிறருடைய நாட்டின்கண் செல்லும் போக்கையுடைய ராயினுர் " என்னும் பொருள் பொதிந்த கீழ்வரும் பாடலைப் பாடி நெஞ்சம் உருகினுர் :

" ஆடுநடைப் புரவியுங் களிறுந் தேரும்
வாடா யாணர் நாடு மூரும்
பாடுநர்க் கருகா வாஅ யண்டிரன்
..................குறுந்தொடி மகளிரொடு
கால னென்னும் கண்ணிலி யுய்ப்ப
மேலோர் உலகம் எய்தினன் எனுஅப்



பொத்த வறையுட் போழ்வாய்க் கூகை
சுட்டுக் குவியெனச் செத்தோர்ப் பயிரும்
கள்ளியம் பறந்தலை ஒருசிறை யல்கி
ஒள்ளெரி நைப்ப உடம்பு மாய்ந்தது
புல்லென் கண்ணர் புரவலர்க் காணது
கல்லென் சுற்றமொடு கையழிந்து புலவர்
வாடிய பசிய ராகிப்பிறர்
நாடுபடு செலவின ராயினர் இனியே "*

இப்பாடலின் வாயிலாகக் குட்டுவன்கீரனுரின் ஆழ்ந்த வருத்தம் நன்கு புலனுகும். அருகாது வழங்கிய ஆயின் பிரிவுத் துயரம் பொறுக்க முடியாததாக இருந்தது. அதனை அடுத்து அவனுடைய உரிமைமகளிர் அவனில்லாத வாழ்வை வெறுத்து அனலிற்பாய்ந்து ஆவியைப் போக்கிக்கொண்டது பின்னும் கொடுமையை எடுத்துக் காட்டியது. ஆயால் அளிக்கப்பட்டு அவன் கோயிலின்கண்ணே உறைந்த தண்டமிழ்ப் புலவர்கள் அவன் மறைந்ததும் ஆதரிப்பாரைப் பெருமல் அரும்பசி உடற்றும் துன்பம் களைவதற்காகத் தம் சுற்றமுடன் வேறு நாடு நோக்கிச் செல்லும் அவலக் காட்சி, ஆருத் துயரத்தை அவருக்களித்தது. இங்ஙனம் கொடுமைக்குமேல் கொடுமை செய்யும் காலனை அவரது மனம் ஏசியது.

அறக்கடவுள் என்று காலனுக்கு ஒருநற்பெயர் உண்டு. அது ஒருகால் உண்மையோ, பொய்யோ என்பதை அறிய வகையில்லை. ஆனல் அவனுக்குக் கண்ணில்லை யென்பதை மட்டும் அவர் உணர்ந்தார். " கண்ணுடையனுயின் சிறிதும் கண்ணேட்டமின்றி அடுக்கடுக்காய் இத்துணைத் துன்பத்

*புறம் : 240.

தைச் செய்ய அவனால் எங்ஙனம் முடியும்? கண்ணில்லாக் குறையால்தான் அவன் ஆயின் பெருமையையும் அவன் ஆற்றிவந்த அறச் செயல்களையும் உணரவில்லை. ஆய் அண்டிரனை அணுகி வாழ்ந்தவரின் பெருந்தொகையை அவன் காணவில்லை. எனவேதான் ஆயை இவ்வுலகத்திலிருந்து மேலுலகம் கொண்டு போயினன். அதன் பயனாய் அவன் ஆவியன்ன மகளிர் தீப் பாய்ந்தனர். அவன் உள்ளமன்ன உயர்ந்த புலவர்கள் வாட்டும் பசிக்கிரங்கி வேறு நாடு செல்லத் துவங்கினர்'' என்று இரங்கி அழுதார். ஆயோ, உடல் செய்த உயர்செயலை இவ்வுலகில் அழியா வண்ணம் நிறுத்திவிட்டு அழியும் உடலை இயற்கையோடு சேர்த்து விட்டு மறைந்தான்.

# கொல்லிப் பொருநன்

தேங்கமழ் பாதிரி, விரிபூங்கோங்கம், பல்லிணர்க் குரவம், நரந்தம், நாகம், வேங்கை, அகலிலைக் காந்தள், கல்லிவர் முல்லை முதலிய நறும் பூக்களின் மணங் கலந்த இளங்காற்று மெல்ல வீசினால், பாணர்கள், ஆதன் ஓரியின் கொல்லிமலையை அணுகிவிட்டோமென அகமலர்ச்சியுடன் விரைய நடப்பார்கள். சிவந்த வேரினையுடைய பலாவும், தேர்போன்று பூக்கும் மாவும் நிறைந்து பயன் கொடுக்கும் இயல்புடையது அவன்மலை. மரங்களின் உச்சியிலும் மலையின் விடரிலும் தேன்கூடுகள் பொற்குடம் போல் தொங்கிக்கொண்டிருக்கும். பளிங்கை உருக்கி வார்த்ததுபோல் அம்மலையினின்றும் வெள்ளிய அருவிகள் முழவென முழங்கி இழியும். கலித்த தோகையினையுடைய மயில்கள் மலைமீது தவழும் கொண்டலின் இனங்கண்டு களிப்பு மிகுதியால் கவின்பெற ஆடும்.

இயற்கை விளையாடும் இன்பமலையாக அது திகழ்ந்த தோடன்றி மற்றுமொரு வகையிலும் அது தன்னிகரற்று விளங்கியது. காண்பாரின் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே பிணிக்கும் அருந்திறல் வாய்ந்த அழகுப் பாவை ஒன்று அம்மலையை அணிசெய்தது. வனப்பிற் சிறந்த

மாதர்களுக்கு உவமையாகப் புலவர்கள் அக்கொல்லி மலையின் மீதுள்ள பாவையையே கூறுவர். "தெய்வம் எழுதிய வினைமாண் பாவை" என்று புலவர்கள் அதை வருணிப்பர். இயற்கையின் சீற்றத்தையும் எதிர்ப்பையும் வென்று விளங்கக்கூடியதாக உறுதியுடன் அது ஆக்கப்பட்டிருந்தது.

> கால்பொருது இடிப்பினுங் கதழுறை கடுகினும்
> உருமுடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்
> பெருநிலங் கிளரினுந் திருநல உருவின்
> மாயா வியற்கைப் பாவை*

என்று அதன் இயல்பைப் பரணர் என்னும் நல்லிசைப் புலவர் பாடியுள்ளார். எங்ஙனம் பூவென்றால் தாமரைப் பூவும் பட்டினம் என்றால் காவிரிப்பூம்பட்டினமும் குறிக்கப்பட்டு வந்தனவோ அவை போன்று பாவையென்றால் அது கொல்லிப்பாவையையே குறித்தது. வனப்பும் வடிவு மிகுந்த வனிதையரை "பாவையன்ன குறுந்தொடி மகளிர்" என்றும் அந்நல்லாரின் நறுமணம் கமழும் கூந்தலை "கொல்லிக் கலிமயிற் கலாவத் தன்ன இவள் ஒலிமென் கூந்தல்" எனவும் செந்நாப்புலவர்கள் அவன்மலைக்கண் இலங்கிய பாவையையும், இயங்கிய மயிலையும் சிறப்பித்துள்ளனர்.

இவ்வண்ணம் பல்லாற்றானும் சிறப்புற்று விளங்கிய கொல்லிமலையையும் அதனை அடுத்துள்ள நாட்டையும் அறநெறி பிறழாது ஓரி என்னும் வள்ளல் ஆண்டு வந்தான். தன்னுடைய வள்ளன்மையின் உயர்வால்

*நற். 201.



சிறந்த வள்ளல்களுள் ஒருவனாகிப் பாடல்சான்ற புலவர்களால் பாராட்டப்பட்டான். ஆண்மையும் ஆற்றலும் மிக்குத் தன்னிகரில்லாத் தலைவனாக இசைவிளங்கினான். வில்வன்மையில் இணையற்று இலங்கினான். ஒரே அம்பால் பலவற்றையும் ஊடுருவிச் செல்லும் வண்ணம் எய்யும் வன்மை வாய்ந்தவனாக இருந்தான். உயர்ந்த இலக்கணங்கள் அனைத்தும் பொருந்திய ஓரி என்னும் குதிரையை யுடையவனாக இருந்தான். "ஓரிக்குதிரை ஓரி" என்றே இவனைப் புலவர்கள் அழைத்தனர். இவனுடைய வில்லாண்மையை மிக அழகுற விளக்கிப்போந்தவர் வன்பரணர் என்னும் வயங்கு புகழ்ப் புலவராவர்.

கொல்லிமலையை அடுத்துள்ள காட்டின் வழியே ஒரு நாள் பாணன் ஒருவன் விறலியரும் மற்றுமுள்ள தன் சுற்றத்தாரும் ஒருங்குவர நடந்துவந்தான். அவன் வழி நடந்து வந்த நெறியின்கண்ணே, குமிழமரங்கள் செறிந்து நிறைந்திருந்தன. வளைந்த மூக்கினையுடைய முற்றிய குமிழின் கனிகள் தரையெங்கும் உதிர்ந்து பரந்திருந்தன. அக் கனிகளை மானினம் அங்கும் இங்கும் குதித்தவாறே தின்று கொண்டிருந்தன. அக்காட்சியைப் பார்த்துக்கொண்டே வந்த பாணர்கூட்டத்தின் பார்வை வேறுபுறம் திரும்பியது. வியப்புடன் அனைவரும் அக்காட்சியினையே நோக்கினர்.

ஒரு புற்றின் கண்ணே அம்பு செறிக்கப்பட்ட ஓர் உடும்பு ஆவியிழந்து கிடந்தது. அம்பை எறிந்தவன் ஏனோ அதனை எடுக்காது அங்கேயே விட்டுப் போயினன் என்ற ஐயம் அவர்கள் சிந்தையிலே நிற்கச் சிறிது தொலைவு சென்றனர். அங்கே உரல் போன்ற தலையையுடைய

கேழற் பன்றியொன்று அம்பால் ஊடுருவப்பட்டு உயிரிழந்து கிடந்தது. அதையும் கண்டு அப்பால் சென்றனர். கள்ளமற்ற புள்ளிமான் ஒன்று மீளாத துயிலில் ஆழ்ந்து விட்டதைப் போன்று நிலத்திடைக் கிடந்தது. அதையும் நன்கு பார்த்துவிட்டுச் சிந்தையிலே விந்தை மேலிட்டவராய்ப் பின்னும் சிறிது தொலைவு சென்றனர். இன்னும் என்ன காட்சியைக் காண்போமோ என அவர்கள் நெஞ்சம் பலவற்றை எண்ணியது. பெரிய வாயையுடைய புலி ஒன்று தன் கொடுமையெலாம் மறந்து நெடுந் தூக்கமாகிய சாவிலே கலந்திருந்தது. அதையும் தாண்டி அப்பாற் சென்றவுடனே, அவர்கள் கண்ட காட்சி பெரிதும் வியப்பும் மலைப்பும் உடையதாயிருந்தது. நீண்டு நின்ற கருங்குன்று நெடுந்தரையில் சாய்ந்து கிடந்த கோலம்போன்று கரிய யானையொன்று இறந்து கிடந்தது. அவர்கள் பெரிதும் வியப்புற்றவராய் ஒரே கூரிய அம்பால் இவ்விதம் பல உயிரையும் ஊடுருவிச் செல்லும் வண்ணம் விரைய எய்தவன் யாரென எண்ணினர்.

வேழம் வீழ்த்து விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயலது
ஆழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்கும்
கொலைவன் யார்கொலோ*

என்று தமக்குள் வினவிக்கொண்டனர்.

*புறம் : 152.



ஐந்து உயிர்களையும் தன் ஒரே அம்பால் கொலை செய்தவன் யாராக இருக்கலாம் என்று எண்ணமிட்டு நின்ற அவர்களின் கண்கள் வலிய வில்லை யேந்தி நின்ற ஒரு வேடனைக் கண்டன. விலையின் பொருட்டாக இவ்விலங்குகளை அவன் கொல்லவில்லை யென்பது அவனது தோற்றத்திலிருந்தும் நன்கு தெரிந்தது. செல்வச் செம்மலைப் போன்று அவன் விளங்கினான். அவனுடைய அழகிய பரந்த மார்பிலே அவன் பூசியிருந்த சந்தனம் புலர்ந்து காணப்பட்டது. பாணர்களுக்கு அவன் யாராயிருக்கலாம் என்ற ஐயம் சிறிது தெளிவாகியது.

“ சார லருவிப் பயமலைக் கிழவன்
ஓரி கொல்லோ அல்லன் கொல்லோ ”*

எனத் தெளிவும் ஐயமும் உடன் கொண்டனர். ஓரியை முன்னர்க் கண்ணுற் காணாது அவனது இசையை மட்டுமே கேட்டவர்கள் அப் பாணர்கள். அவனுடைய இசையுடனே, அவனது ஒப்புயர்வற்ற வில்லாண்மையையும் அவர்கள் அறிவார்கள். அதனால் அவர்களுக்கு அத்தகைய ஐயம் விளைந்தது. “ இவன் ஓரியோ, அல்லனோ ” என மயங்கிய அவர்களின் உள்ளம், ஒரு முடிவிற்கு வந்தது. இவனைப் பாடினால் அதன் உண்மை வெளியாய் விடுமென்று எண்ணிப் பாடுவதற்கு ஏற்ற ஆயத்தங்களைச் செய்தனர்.

வண்ணமொன்று பாட விறலி துவங்கினாள். முழவின் கண்ணே மார்ச்சனையை யிட்டு யாழிலே பண்ணை நிறுத்தி, பெருவங்கியை இசைத்து, சல்லரியை வாசித்துச்

*புறம் : 152.

சிறுபறையை முழக்கினார்கள். ஒரு கண்மாக்கிணையையும் மெல்லக் கொட்டினர். பாணன் மதலைக் கோலைத் தாங்கி அவ்வேடனை அணுகி, இருபத்தொரு பாடற்றுறையையும் முறையாகப் பாடி முடித்துப் பின்னர், கோவேயென்று அவன் பெயர் கூறினான். பாணன் அழைத்த பெயர் தன் பெயராகலின் அது கேட்டு அவன் நாணினான். அதனால் அவன் ஓரியே என்பதை முற்றத்தெளிந்த அப் பாணர், "நாங்கள் நாடெங்கும் சுற்றி வருபவர்கள். நின்னை யொத்த ஒரு வேட்டுவனை யாங்கள் கண்டதில்லை" எனப் புகழ்ந்து தாம் வேண்டுவனவற்றைத் தெரிவிக்கத் துவங்கினர். ஆனால் அவனோ அவர்களை மேலே பாடவிடாது மான்தசையின் புழுக்குடனே ஆவின் நெய்யை உருக்கினாற் போன்ற மதுவையும் தந்து தனது மலையின்கண் பிறந்த மாசறு பொன்னையும் மணிக்குவியலையும் கலந்து இதைக் கொண்மின் என அவர்களுக்குக் கொடுத்தான்.

வேட்டது மொழியவும் விடாஅன் வேட்டத்திற்
றானுயிர் செகுத்த மானிணப் புழுக்கோடு
ஆனுருக் கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரந்திடை நல்கி யோனே விடர்ச்சிமை
ஓங்கிருங் கொல்லிப் பொருநன்
ஓம்பா வீகை விறல்வெய் யோனே.*

தன்னேரிலாத் தனி வில்லியாக விளங்கிய கொல்லி மலைக்கிழவன் அருளுடைமையிலும் பெரும் புகழ் பெற்று

*புறம் : 152.



விளங்கினான். அவனுடைய நல்ல செல்வத்தை விரும்பி நாள்தோறும் இரவலர் பலர் வந்தனர்.

ஆதன் ஓரியின் செல்வம் அளவற்று இருந்தது என்பதை நப்பாலத்தனார் என்னும் புலவர் நற்றிணையிலே பாடியுள்ள ஒரு பாடலால் அறியலாம். பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன், தலைவியைப் பிரிந்து செல்வதற்கு உள்ளம் எழாதவனாய்த் தன் நெஞ்சிற்குக் கூறும் முறையில் ஓரியின் திரண்ட நிதியம் விளக்கப்பட்டுள்ளது. "நெஞ்சே, நீ உட்கொண்டு ஈட்டும் பொருள் யாது? வெய்ய போர் செய்யவல்ல போர்வீரர்தலைவனாகிய சிறந்த கொடையையுடைய ஓரி யென்பவனது கைவண்மைக்குப் பொருந்திய செல்வமே நீ ஈட்டும் பொருளாக நினக்குக் கிடைக்கப்பெறினும் அப்பொருள் இவளினும் சிறந்ததன்று. அதனால் அப்பொருள் வேண்டுமெனில் நீயே ஏகுவாய்; யாம் வாரகில்லோம்" எனக் கூறித் தலைவன் செலவழுங்குகின்றான்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் தம்முடைய பட்டினப் பாலையில் திருமாவளவனின் பட்டினத்தைச் சிறப்பித்ததைப் போன்று நப்பாலத்தனாரும் ஓரியின் பெருஞ்செல்வச் சிறப்பை உவமைக்குரிய பொருளாகக் கூறிப் பெருமைப்படுத்தியுள்ளார். அத்துடன் அவர் அவனுடைய செல்வம் பிறருக்கே பயன்பட்டது என்பதையும் விளக்கிப் போந்தார். பாடல் சான்ற செல்வத்தையும் பல பக்க மலைகளையுமுடைய நாட்டையும் அவன் தன்னைப் பாடி வரும் பாவலர்க்கும் கோடியர்க்கும் குறைவறக் கொடுத்தான் என்பதை,

நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த

என்னும் சிறுபாணாற்றுப்படை அடிகள் நன்கு விளக்கும்.

ஒருநாள், ஓரியின் கைவளத்தைக் காதாரக் கேட்ட கூத்தர்கள், அதை நேரிற்காணும் பெருவிருப்புடன் அவனது கொல்லிமலையை நோக்கிப் பெருநசையுடன் வந்தனர். வழியெங்கணும் அவனிடம் பரிசில்பெற்ற இரவலர்கள் அவனை வாழ்த்தியவண்ணமே சென்றுகொண்டிருந்தனர். காந்தள் வேலியையுடைய ஓரியின் சிறுகுடியிலே உள்ளவர்கள் யானையின் கோட்டை விற்றுத் தம் உணவைப் பெறும் காட்சியினையும் கண்டு கொல்லிமலையின் மீதேறினர். மலைமேற் செல்லும் நெறி சிறியதாயிருப்பினும் ஏறுவதற்கு எளிதாக இருந்தது. பாணர்கள் பரிசில் பெற்று ஏறிவந்த இவுளிகளின் கவிந்த குளம்பு பொருத காரணத்தால் அக் கல்லுடைய சிறுநெறியும் செந்நெறியாகத் திகழ்ந்தது.

பரிசில் பெற்றுத் திரும்பிவரும் பாணர்களைக் கண்டு மிகவும் விம்மிதயடைந்த கூத்தர்கள், தாங்களும் அவ்வண்ணமே பொருள் முகந்துகொண்டு பரிமாவின்மீது ஏறிவரலாம் என்னும் ஆசைமீதூரப் பெற்றவராய்ச் சென்று மிகுபுகழ் ஓரியைக் கண்டு தம்முடைய திறங்களைக் காட்டினர். கூத்தரின் ஆடலையும், பாடற் பகுதியையும், பண்ணின் நயங்களையும் பருகிக் களித்த ஓரி அவர்களுக்குப் பரிசிலாக இழையணி யானையும் அருங்கல வெறுக்கையும் அளவிலாது அள்ளிக் கொடுத்தான். விறலியர்க்குப் பொன்னாற்செய்த குவளைப் பூக்களை வெள்ளிநாரால் தொடுத்து அழகுறத் திகழும் பொன்னரிமாலையினையும் அரிய



அணிகளையும் நிறையக் கொடுத்தான். பெரும் பொருளைப் பரிசிலாகப் பெற்ற அவர்களோ, இனித் தம் வாழ்நாளில் எவரையும் சென்று அணுகவேண்டுவதில்லையென இறுமாந்து பல நாளாகக் கற்ற தம் ஆடலையும் பாடலையும் மறந்தவராயினர். ஓரியின் பெருங்கொடைத் திறனையும் பாணரின் விம்மித வாழ்வையும் கீழ்வரும் பாடல் நன்கு விளக்கிச் சொல்லும் :

மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்
இழையணி யானை இரப்போர்க் கீயும்
சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை
அடுபோ ரானா வாத னோரி
மாரி வண்கொடை காணிய நன்றும்
சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியம் கறங்க
ஆடலு மொல்லார்தம் பாடலு மறந்தே*

வன்பரணர் பாடிய இப்பாடல் ஓரியின் மாரியன்ன கொடையைக் காணவேண்டும் எனச் சென்ற மாக்கள், கானை மறந்த களிமயிலென எங்ஙனம் தம் குலத்தொழிலையும் மறந்து வாழ முயன்றனரென்பதைத் தெள்ளிதின் தெரிவிக்கும்.

---

*புறம் : 153.

நட்டவரின் குடியுயர்த்துச் செற்றவரின் குடியழித்துச் செம்மாந்து விளங்கிய இவ்வள்ளல்களிடம் ஆன்ற தமிழ்ப் புலவர் மட்டும் நெருங்கிய தொடர்புடையவர்களாய் விளங்கிவந்தனர். வள்ளல்களிடம் அணுப்போன்ற சிறு குறை காணப்படினும் அஞ்சாது அவர்கண்முன்னின்று அவற்றைக் கண்டிப்பர். இரப்பவர்க்கு அருகாது கொடுத்த இப் புரவலர்கள் புலவரைக் காணச் சிறிது காலம் நீட்டிப்பினும் புலவர்களால் அது பொறுக்க முடியாததாக இருந்தது. அதற்குக் காரணம் புலவரின் ஆழ்ந்த புலமையும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் முதலான தீய பண்புகள் இல்லாத சான்றாண்மையுமே யாகும். சிறந்த கொள்கையையே அவர்கள் தம்மினும் உயர்வாகக் கருதினர்.

ஒருகால் கழைதின்யானையார் என்னும் புலவர் ஓரியைக் காண வேட்கை மீதூர்ந்து வந்தார். பரிசில் துறைப் பொருளிலே அவர் பாடிய பாட்டு இரவலரும் புரவலரும் எங்ஙனம் தத்தம் செய்கைகளால் உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கமுடியு மென்பதை எடுத்துக்காட்டும் நிலையிலுள்ளது.

" ஈயெனச் சொல்லி இரத்தல் இழிந்தது. அவ்வாறு இரந்தோன்முன் ஈயேன் என்று சொல்லி மறுத்தல் அதனினும் இழிந்தது. ஒருவன் இரப்பதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து இதனைக் கொள்வாயாக என்று சொல்லி அவனிடம் தாழ்ந்து கொடுத்தல் ஒருவர்க்கு உயர்ந்தது. அங்ஙனம் கொடுத்ததைப் பெறாது, கொள்ளேன் என மறுத்தல் அக்கொடையினும் மிகஉயர்ந்தது. நீர்வேட்கை



யுடையோர் ஒலிக்கும் திரையையுடைய பெரிய கடல் நீரை உண்ணார். ஆவும் மாவும் சென்று நீரை உண்ணுதலால் கலங்கிச் சேற்றொடு கூடிய சிறுமைத்தாயினும் உண்ணும் நீரையுடைய தாழ்ந்தவிடத்துச் செல்லும் வழி பலவாகும். தாம் புறப்பட்ட போதில் நிகழ்ந்த புள் நிமித்தத்தையும் முழுத்தத்தையும் பழித்தல் அல்லது, தாம் பரிசில் கருதிச் செல்லப்பட்டோரை அவர் ஈந்திலராயினும் பரிசிலர் பழியார். விசும்பின்கண் மின்முதலிய தொகுதியையுடைய மழைபோல யாவர்க்கும் எப்பொருளையும் வரையாது வழங்கும் வண்மையை யுடையோய்! எவ்வாறாயினும் நின்னை நான் வெறேன்; வாழ்வாயாக" எனும் கருத்தமையப் பாடினார்.

இப்பாட்டின்கண், ஓரி எங்ஙனம் உண்ணும் நீர்போல் விளங்கிவருகின்றான் என்பதையும், அவனைத் தேடிப் பரிசில் பெறக் கருதிப் பலர் நாளும் வருவதையும் விளக்கி, "உவர்க்கடலன்ன செல்வரை" அணுகாத புலவரின் திறத்தையும் செவ்வனம் எடுத்துக் காட்டியுள்ளார். ஈயேன் என்ற இழிபினும், கொள்ளெனக் கொடுக்கும் உயர்வினும் நினைக்கத் தக்கது அறிந்து செய்வாயாக எனக் கூறினார். இதன் மூலம் புலவர்களின் பீடுநடையும், அதை வள்ளல்கள் மதித்த மாண்பும் இனிது புலனாகும்.

இயற்கை வளத்தாலும் புலவரின் பாட்டாலும் பாணர்களின் பண்ணாலும் புகழ்பெற்ற கொல்லிமலை அக்கால முடிமன்னன் ஒருவனின் ஆசைக்கு இலக்காயிற்று. பெருஞ் சேரலிரும்பொறை என்னும் சேரவேந்தன் எங்ஙனமேனும் கொல்லிமலையைக் கைப்பற்ற வேண்டுமென

எண்ணினான். ஓரியின் அருளாட்சியையும் அவனுடைய பெரும் பண்பையும் அவன் ஒரு சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை. அவனுடைய ஆசையை அறிந்த மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளல் அதை நிறைவேற்றக் கருதிப் பெரும் படையுடன் ஓரியின் நாடு நோக்கிப் போந்தான்.

வில்லாற்றல் மிக்க ஆதன்ஓரி இச் செய்தியை அறிந்தான். சினம் மீதூரப் பெற்றவனாய் இளைய போர்வீரர்கள் அணிவகுத்து நிற்பத் தலைமை தாங்கி தன் குதிரையாகிய ஓரியின் மீதேறி அடுகளஞ் சென்றான். சேரனின் படை பலத்தோடு வந்த காரியை எதிர்த்துப் பெரும்போர் செய்தான். தன் வில்லின் வன்மையை எதிரிகள் அறிந்து நடு நடுங்கும் வண்ணம் கணைமாரி பொழிந்தான். பரந்து நின்ற படைக்கெதிரே பகழிப்போர் செய்த ஓரியின் மார்பிலே கூரம்பு ஒன்று பாய்ந்து அவனை துஞ்சச் செய்தது. தலைவன் விழுப்புண்பட்டுத் துறந்த செய்தி யறிந்து அவன் படையினர் சிதறினர். காரியும் வெற்றி முழக்குடன் மக்கள் அலற அவனுடைய நாட்டிற்குள் புகுந்தான்.

கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் கீந்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி*

என்னும் அடிகளால் ஓரியின் கொல்லிமலையை, காரி பெருஞ்சேரல்இரும்பொறைக்குக் கொடுத்த வரலாறு விளங்குகிறது.

* அகம் : 209.



வையகத்துப் பேரிருளைப் போக்கும் வானக் கதிரவன் இங்ஙனம் பெரும்போரிலே வீரங் குன்றாது போரிட்டுப் பொன்றாப் புகழ் எய்தினான். அவனுடைய பிரிவால் கூத்தரும் பாணரும் குழறி அழுதனர். பாவலரோ அப் பண்புமிக்க மேலோனின் மறைவு குறித்து தனிமிக வருந்தி நமனை வைதனர். அவனுடைய மக்களோ மணி இழந்த நாகம் போன்றும் உயிர் இழந்த உடல் போன்றும் பொலிவற்று ஆறாத்துயரில் மூழ்கிக் கையற்று வருந்தினர்.

# நளிமலை நாடன்

பாணன் ஒருவன் தன் பசியின் கொடுமையைப் பொறுக்க முடியாது பல ஊர்களையும் சுற்றிக்கொண்டு வந்தான். அவனுடைய சுற்றமும் அவனைப் போன்றே மிக்க வருத்தத்துடன் அவனைப் பின்பற்றி வந்தது. யாழும், முழவும் அவர்களுடைய தோளிலே தொங்கிக்கொண்டிருந்தன. காடும் மலையும் கடந்துவந்த காரணத்தால் அவர்கள் மிகவும் களைத்துப் போயிருந்தனர். அவர்களுடைய சோர்ந்த முகங்கள் அவர்களின் எளிய நிலையை எடுத்துக் காட்டின. நோவெடுத்த கால்கள், குழந்தைகளின் மெல்லடியைப் போன்று மெல்ல அடி எடுத்துத் தள்ளாடி நடந்தன. எங்காவது சிறிது நேரம் அமர்ந்து ஓய்வெடுத்த பின் மேலுஞ் செல்லலாம் என்ற எண்ணத்துடன், அவ்வேழைப் பாணன் தலையைச் சிறிது உயர்த்திப், பசியால் பாதி மூடியிருந்த தன் கண்களைச் சற்று அகல விரித்து நோக்கினான். அண்மையிலே தண்ணிய நிழலைத் தந்த ஒரு பலாமரம் அவன் கண்களுக்குத் தெரிந்தது. தள்ளாடி நடந்த வண்ணமே, தன்னுடைய ஒக்கலும் உடன்வர அம்மரத்தடியிலே சென்று அமர்ந்தான். ''ஆறு செல் வருத்தத்தால்'' அவன் அடைந்திருந்த களைப்பும், சோர்வும் சிறிது நேரம் அவனையும் மறக்கும் வண்ணம் செய்தன.



அவ்வேளையில் அப்பலவின் அருகே அழகும் வலியுமுடைய ஒரு வேடன் வந்து பொருந்தினான். அவனுடைய கழல் அமைந்த கால்களிலே இரத்தக்கறை படிந்திருந்தது. வலிய வில்லை யேந்திநின்ற கைகளிலே கடயம் மின்னின. குருதி தோய்ந்த அம்புகள் தூணியிலே மிக்கிருந்தன. வேட்டையிற் கொன்ற காட்டுமான்களின் கொழுவிய தசையையும் அவன் சுமந்திருந்தான். அவனுடைய மார்பிலே தண்ணிலவுபோல் மின்னி விளங்கும் முத்தாரம் நிழல் செய்தது. முடியிலே நீலமணியின் கதிர் ஒளிவிட்டு விளங்கியது.

தனியனாய் அங்கு வந்து நின்ற அவ்வேடனின் தோழர்கள் வேட்டையாடும்பொழுது பலவழியிலும் பிரிந்துசென்றவர்கள் இன்னும் அவனை வந்து அடையவில்லை. சுற்றுமுற்றும் வட்டமிட்ட அவனுடைய கண்கள் தன் இளையரைத் தேடும் வகையிலே காணப்பட்டன. கட்புலனுக்கு எட்டியவரைக்கும் ஒருவரையும் காணாததால் அவ்வேடனும் அடர்ந்து பரந்து நிழல் செய்த அப் பலாவின் அடியை நண்ணினான்.

தன்னை மறந்து தன் இளையருடன் அயர்ந்திருந்த பாணன் வேடனைக் கண்டான். வேடனும் பாணனின் நலிவை ஒரு நொடிக்குள் உணர்ந்தான். வேடனைத் தொழும் குறிப்போடு பாணன் தன் இருப்பினின்றும் எழுந்தான். அது கண்டு அவ் வேடன் தன் கையைக் கவித்து அவனை எழாது இருக்கச் செய்தான். அவனுடைய வறுமைக் கோலத்தை ஒருகணம் கூர்ந்து நோக்கினான். கூதிர்காலத்துப்

பருந்தின் கரிய சிறகு போன்ற பாறிய துணி அவனுடைய வறுமையை நன்கு விளக்கியது.

உடனே அவ் வேடன் வில்லையும் தன் சுமையையும் இறக்கித் தரையினில் வைத்தான். விரைந்து தீக்கடைகோலால் தீயை மூட்டினான். அருகிலே அங்குமிங்கும் கிடந்த காய்ந்த சுள்ளிகளால் நெருப்பை உண்டாக்கினான். தன்னிடமிருந்த கொழுவிய ஊனை அந் நெருப்பிலே வாட்டிப் பக்குவம் செய்தான். வாடிக் களைத்திருந்த அப் பாணனிடம், தான் அனலில் வாட்டிய ஊனை எடுத்துச் சென்று "நீயும் நின் சுற்றமும் இதைத் தின்பீராக" எனத் தந்தான். ஏங்கிக் கிடந்த பாணனின் இருகையும் அதை ஏந்தி வாங்கின. வியப்பால் அகல விரிந்த கண்கள் அவ் வேடனுக்குச் செலுத்த வேண்டிய நன்றியை அமைதியாகச் செலுத்தின.

அரும்பெறல் அமுதம் கிடைத்த மாந்தரைப் போல் அக் கொழுவிய ஊனைப் பாணனும் அவன் சுற்றமும் அயின்றனர். வருத்திய பசியும் தணிந்தது. அப்பால் மலை உச்சியினின்றும் வீழ்ந்த அருவிநீரைத் தம் வயிறு குளிரும் வண்ணம் பருகினர். வாட்டமெல்லாம் தீரப்பெற்றனர். மேலும் வழி நடப்பதற்கு வேண்டிய புதிய ஊக்கமும் மொய்ம்பும் அவர்களின் அகத்திலும் உடலிலும் உண்டாயின. செல்வனைப் போல் விளங்கிய அவ் வேடச் செம்மலை நோக்கினர். தம் வழியிற் செல்ல அவனிடம் விடை வேண்டினர்.

அதுகண்ட அவன் அவர்களிடம் நெருங்கி வந்தான். தன்னுடைய கழுத்திலே அணிந்திருந்த அணி திகழும் முத்து மாலையையும் தடக்கையிலே செறிந்து விளங்கிய கடகத்தை



யும் கழற்றி அப் பாணன் கையிலே ஈந்து சிலசொல் கூறினான். "அன்புடைப் பாண! நீ பெறுதற்குரிய வேறு அருங்கலன் ஒன்றும் எம்பால் ஈங்கில்லை. யாம் காட்டிலே உள்ளோம். ஆதலின் இவைகளைப் பெற்றுச் செல்வாயாக" என்று அன்பும் ஆர்வமும் ததும்பக் கூறினான்.

அவனுடைய செய்கை பாணனுக்கு விந்தையிலும் அரிய விந்தையாக இருந்தது. தன்னுடைய காய்பசியின் கடுமையை உணர்ந்து, பச்சையூனைத் தன்னிடம் அவன் கொடுத்து எம்மையே தீயிடை வாட்டி உண்ணச் சொல்லியிருக்கலாம். அவ்வாறு செய்யாது தானே தீக்கடைகோலைக் கடைந்து தீ யுண்டாக்கி, விறகும் சேகரித்து, பச்சையூனையும் பசிக்கருந்தும்வண்ணம் பக்குவப் படுத்தி ஈந்தனனே என எண்ணினான். பின்னர் விடை வேண்டிய உடனே வல்லே விரைந்து வந்து ஆரமும் கடகமும் கொடுத்ததோடு அமையாது, "வேட்டையாட வந்து காட்டகத்துள்ளே மாதலால், கையிருப்பன இவையேயன்றி வேறு பெறற்கரும் பொற்கலன்கள் இல்லை"யென உள்ளமும் வருந்திய அவன் செய்கை, பாணனை மட்டிலடங்கா வியப்பில் ஆழ்த்தியது. இங்ஙனம் பிறர்உள்ளம் அறிந்து உவகையுடன் ஈந்த இவ் வுயர்ந்த பெருமகன் யாரோ என எண்ணினான். அவனுடைய நாட்டையும் பெயரையும் அறிய விழைந்து, "அருளோய்! நின் நாடு யாது" எனக் கேட்டான். அதுகேட்டு அவ் விந்தை வேடன் ஏதும் மாற்றஞ் சொல்லாது வறிதே இருந்தான். நாட்டைத்தான் சொல்லவில்லை, பெயரையேனும் அறியலாம் என நினைந்து அவன் பெயரைக் கேட்டான். அதுகேட்ட அவ்வீரன் தன்

வில்லையும் பிற பொருளையும் எடுத்துக்கொண்டு வாய்மூடிய வண்ணமே அவ்விடம் விட்டகன்றான்.

பெருவியப்படைந்த அப்பாணன் அவ்வழியில் சென்றவர்களிடம் அப் பெரியோனைப் பற்றி நெருங்கிக் கேட்டான். அவர்கள் அவனுடைய பெயரையும் அவனது மலையையும் அவனுக்கு விளங்க உரைத்தார்கள். அழகிய பக்க மலையினையும் இனிய நீரையுமுடைய தோட்டி எனும் மலைக்கும் அதைச் சார்ந்த நாட்டுக்கும் காவலன் அவன் என்றும், அவனது திருப்பெயர் நள்ளி என்றும் சொல்லக்கேட்ட அப் பாணன் அலைகடலினும் அளவிலா மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தான். தான் நேரிற் கண்டவன் வள்ளற் பெருமகனாகிய நள்ளி என்பதை அறிந்து அப் பெருமானை வாயாரப் புகழ்ந்தான். தம்முடைய நாட்டையும் மலையையும் பாடிப் புகழ்ந்த பாணர்களுக்கே பரிசில் ஈவது பெரும்பான்மை வள்ளல்களின் இயல்பு. இசையெனின் உயிரையும் கொடுத்துப்பெற இசைவர் வள்ளல்கள். ஆனால் இந் நளிமலை நாடன் நள்ளியோ இசையையும் கருதவில்லை. "வலது கை கொடுத்ததை இடது கை அறியக்கூடாது" என்னும் செம்மொழிக் கிணங்கக் கொடுத்த வள்ளல் எவ்வளவு உயர்ந்தவன்! தான் கொடுத்ததை ஏற்றவனும் அறியாவண்ணம் அமைதியாகச் சென்ற அப்பெருமகனின் இவ்வரலாற்றை வன்பரணர் என்னும் தண்டமிழ்ப் புலவர் கீழ்வரும் பாட்டில் நன்கு விளக்கியுள்ளார்:

கூதிர்ப் பருந்தி னிருஞ்சிற கன்ன
பாறிய சிதாரேன் பலவுமுதற் பொருந்தித்
தன்னு முள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தவென்
உயங்குபடர் வருத்தமு முலைவு நோக்கி



மான்கணந் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்குஞ் சென்னிச்
செல்வத் தோன்றலோர் வல்வில் வேட்டுவன்
தொழுதனெ னெழுவேற் கைகவித் திரீஇ
இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய விளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
இரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து காய்பசி நீங்கி
நன்மர னளிய நறுந்தண் சாரற்
கன்மிசை யருவி தண்ணெனப் பருகி
விடுத்தல் தொடங்கினே னாக வல்லே
பெறுதற் கரிய வீறுசால் நன்கலம்
பிறிதொன் றில்லைக் காட்டுநாட் டேமென
மார்பிற் பூண்ட வயங்குகா ழாரம்
மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்
எந்நா டோவென நாடுஞ் சொல்லான்
யாரீ ரோவெனப் பேருஞ் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
இரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளியவ னெனவே.*

இவ்வண்ணம் நள்ளியின் வாழ்க்கை பேரிலக்கியமாக இலங்கியது. தன்னைத் தேடிவந்த புலவர்க்கும் பாணர்க்கும்

*புறம் : 150.

கூத்தர்க்கும் வரையாது கொடுத்து அவர்களை வாழ்வித்தான். இவனுடைய மலையையும் கானத்தையும் நாட்டையும் பாவலர் பலர் வாழ்த்திப் பாடியுள்ளனர். புறத்திலே இவனைச் சிறப்பித்தவர் வன்பரணர். கபிலரும் பரணரும் காக்கைபாடினியாரும் தாம் பாடியுள்ள அகப்பொருள் துறையமைந்த பாடல்களிலே இவனைப் போற்றியுள்ளனர்.

குன்று சூழ்ந்த இவனது கானம் மிக்க வளம் சிறந்தது. பரந்த புல்வெளிகள் மரகதப் போர்வை போர்த்ததுபோல் கண்ணுக்கு இனிய காட்சி நல்கும். அப் புல்வெளிகளிலே " வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள் " கூட்டம் கூட்டமாகத் தம் கழுத்தில் பிணித்துள்ள மணி இனிய ஓசையைச் செய்யப் புல்லார்ந்து பக்கத்திலே உள்ள படிகச் சுனைகளில் நீரருந்தி மரநிழலில் படுத்து அசை போடும். ஆநிரை மிருந்த இவ் வள்ளலின் கானம் நெய் மிகப் பயக்குமென்பதைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார், " திண்தேர் நள்ளி கானத் தண்டர், பல்லா பயந்த நெய்யில் " என்னும் அடிகளால் குறித்துப் போந்துள்ளார்.

அருவி முழங்கும் இவனுடைய மலைச்சாரல் பெருமணம் உடையது. மரங்களும் கொடிகளும் பூத்துப் பெருவனப்புடனும் நறுமணத்துடனும் நனிமிக விளங்கும். கரிய கொண்டல்கள் மலையுச்சியின்மீது அழகாகத் தவழ்ந்து செல்லும். பனைமரங்களின் அடியிலுள்ள காந்தள் முகை அவிழ்ந்து தண்மணம் வீசும். கபிலர் என்னும் பெரும் புலவர் ஒரு தலைவியின் நறுநுதலுக்கு உவமையாக, நள்ளியின் அடுக்கத்திலே காந்தள் அரும்பவிழ்ந்து அலர்ந்து புதுமணம் பரப்பும் புதுமலரைக் கூறியுள்ளார்.



அப் புலவரே இந் நள்ளியின் பெருங்கருணைச் செயலையும் தெள்ளிய நடையில் சிறப்பித்துள்ளார். " இரப்போர்க்கு இழையணி நெடுந்தேர் களிறொடு என்றும், மழைசுரந் தன்ன ஈகை வண்மகிழ்க் கழல்தொடித் தடக்கைக் கலிமான் நள்ளி " என்னும் அடிகள் அவருடைய பொருள் பொதிந்த சொற்களாகும்.

அதியமான் நெடுமானஞ்சி, மழவர் என்னும் ஒருவகை வீரர்களுக்குத் தலைவனாயிருந்ததுபோல நள்ளியும் வில்லையுடைய இளையர்க்குத் தலைவனாக இருந்தான். " வல்வில் இளையர் பெருமகன் நள்ளி " என்றே இவனைப் பரணர் என்னும் சங்கச் சான்றோர் குறித்துள்ளார். வேட்டை மேற்செல்லும் இவர்கள் மிகத் தொலைவு சென்று வேட்டையாடுவர். திரும்பி இல்லம் வந்து சேர சில நாட்களாகும். அந் நாட்களில் நள்ளியை நாடிவரும் புலவர்கள் அவனது நெடுமனைக்கண் இல்லாக் காரணத்தால் ஏமாந்து திரும்பவேண்டியதில்லை. விருந்தினரான புலவர்களை வரவேற்று, அவனுடைய மகளிரே வேண்டும் பரிசில்களைத் தந்து விடைகொடுத்து அனுப்புவர். அவர் தரும் பரிசில் எவ்வகையிலும் குறைவுடைத்தாயிராது. பிடியும் பிற அணிகலன்களும் தங்களின் வரிசையாகப் பெற்ற இரவலர்கள் நள்ளியின் நவிலரும் பண்பை நாவால் வாழ்த்திப் புகழ்ந்தவாறே தம் அகம் நோக்கிச் செல்வர்.

இவ்வாறு நள்ளியின் நல்லாரும் நல்லாற்றில் நின்று நல்லறம் செய்தனர். தன் இயல்பிற்கேற்றவாறு இல்லாளும் அமைந்திருப்பதைவிட ஒருவன் அடையக்கூடிய பேறு என்ன இருக்கிறது? நள்ளியின் புகழ் இதனால்

யாண்டும் கதிரவன் ஒளியேபோல் பரந்து, இரவலர்களின் வறுமை இருளை ஓட்டியது. புலமை மிக்க சான்றோர்கள் தம் அறிவு நலத்தைக் காட்டியோ அல்லது பாணர்கள் தம் மிடற்றுப்பாடலை இசைத்தோ, யாழின் திறத்தை விளக்கியோ அவனிடம் பரிசில் பெறச் செல்லவேண்டியதில்லை. இரவலரின் தோற்றத்திலிருந்தே அவர்தம் குறிப்பறிந்து இழையணியும் நெடுந்தேரும் இனமாவும் வரிசையுடன் தந்து அவர்களைப் பெருமகிழ்வில் ஆழ்த்தி அவர்களின் துன்பம் களைந்தான்.

சங்ககாலத்தில் தமிழிசை எல்லாவகையானும் சிறப்புற்றிருந்தது. பாணர்கள் நிலத்திற்கும் பொழுதிற்கும் ஏற்ற பண்ணையும் இசையையும் இசைத்துத் தமிழ்நாட்டை இசையால் உயர்ந்த நாடாக்கினர். அரசர்களாலும் குறுநிலக் கிழவர்களாலும் இவர்கள் அன்புடன் பேணப்பட்டு வந்தனர். இவர்கள் நள்ளென்னும் ஓசையையுடைய மாலைக் காலத்தில் மருதம் என்னும் பண்ணை இன்பமுற வாசிப்பர். காலைப் பொழுதிலே தங்கள் கையிலுள்ள யாழால் செவ்வழிப்பண்ணை இசைப்பர். இது இவர்களின் இயற்கை. வழிவழியாக வரலாற்று முறைப்படி இவர்கள் பாடி இசையைப் பரப்புவர். ஆனால் நள்ளியின் காலத்திலே இப் பழக்கம் அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட்டது. அழிபசியைப் பொறாது, அது தீர்க்கும் பெருவள்ளலைத் தேடிச் சென்று தம் திறமையைக் காட்டவேண்டிய நிலை அவர்களை விட்டு நீங்கும்படி செய்தான் நள்ளி. பாணர்களுக்கு வேண்டும் பொருள் கொடுத்து அவர்களைப் பேணி வந்ததன் விளைவால் அப் பாண்மக்கள் தாங்கள் வழிவழியாகச் செய்துவந்த தம் குலத்தொழிலையும் மறக்கலாயினர் :



நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் அதுநீ
புரவுக் கடன்பூண்ட வண்மை யானே*

இவ் வின்பப் பாடலின்மூலம் வன்பரணர், நள்ளியின் நாட்டை நண்ணிய பாணர்கள் எவ்வாறு தம் வறுமை முற்றிலும் தீரப்பெற்று வாழ்நாள் முழுவதும் சிறிதும் கவலையற்ற இன்பவாழ்வு நடாத்திவந்தனர் என்பதை நன்கு அறிவிக்கின்றார். வந்த இரவலர் என்றும் இரவாது வாழும் வண்ணம் உயரிய கொடையைச் செய்த காரணத்தால் அவனிடம் நட்புக்கொண்ட பண்புடைச் சான்றோர்கள் என்றும் அவனைப் பிரியாது வாழ்வாராயினர். தம்மைச் சார்ந்தாரைப் பிணிக்கும் தூய அன்பும், அவர் மனங் குளிரப் பேசும் ஆர்வ மொழியும், அவர்தம் வாழ்வு ஒளியுடன் இன்பமாகத் திகழ்வதற்கு அருங்கொடையும் ஈந்து மக்களிற் சிறந்தோனாக விளங்கினான்.

சோலையின்கண்ணே உள்ள மலர்மணத்தை எங்கும் உலாவித்திரியும் காற்று அள்ளிச் சென்று பரப்புவதுபோல் புலவரும் பாணரும் நள்ளியின் நல்லிசையைத் தமிழகமெங்கும் பரப்பினர். அதை அறிந்த வன்பரணர் அப் பெருவள்ளியோனைக் காணப் பேரவாக்கொண்டு வந்தார். உடனிருந்து அவனுடைய உரைத்தற்கரும் பண்பினை அறிந்தார். அவனுடன் பிரியமுடியா பெரு நட்புக்கொண்டார்.

*புறம் : 149.

அக்காலத்தில் வாழ்ந்த முடியுடைய வேந்தர்களைக் காண வேண்டும் என்னும் பெருநசையும் அவர்தம் மனத்தைவிட்டு அகன்றது. நள்ளியின் பீடுநிறைந்த பெருவாழ்வு ஈடில்லாத ஒரு வாழ்வு என எண்ணி இறும்பூதெய்தினார். மகிழ்ச்சியால் பொங்கிய அவருடைய உள்ளம் ஒருநாள் நள்ளியைக் கண்ணுற்றபோது தனது உணர்வை அடக்க முடியாது வெளிப்படையாகவே அதை அவனிடம் எடுத்துரைத்தது.

"அருவி முழங்கும் அழகிய மலைக்குத் தலைவனாகிய நள்ளியே! என்றும் தளர்ச்சியில்லாது வலிய முயற்சியானாக்கிய நின் செல்வத்தை விரும்பி நாள்தோறும் உன்னை வாழ்த்திப் பரிசிலர் பலர் வருவர். அவ்வாறு வந்தவர்க்கெல்லாம் நீயும் நாள்தவறாது நன்கலமும், களிறும் பரிசிலாக முற்றக் கொடுப்பாய். உன்னிடம் வரிசையைப் பெற்ற புலவர்களோ தங்களைச் சூழ்ந்திருந்த மற்றைய பரிசிலர்க்கும் நிறையக் கொடுத்து, மிகுந்திருந்த திரண்ட நிதியுடன் தம் மனைக்குச் செல்வர். இங்ஙனம் நீ 'நட்டோர் உவப்ப நடைப்பரிகாரம் முட்டாது கொடுக்கும்' இயல்பினனாயிருப்பதால் எம்முடைய செவ்விய நா, பரிசிலை விரும்பிப் பெருமையில்லாத அரசர்களைப் புகழுவதை அறியாதாயிற்று" என்னும் பொருள் நிறைந்த பாடலைப் பாடினார்:

கறங்குமிசை யருவிப் பிறங்குமலை நள்ளிநின்
அசைவில் நோன்தாள் நசைவள னேத்தி
நாடொறு நன்கலங் களிற்றொடு கொணர்ந்து
கூடுவிளங்கு வியனகர்ப் பரிசின் முற்றளிப்பப்
பீடின் மன்னர் புகழ்ச்சி வேண்டிச்



செய்யா கூறிக் கிளத்தல்
எய்யா தாகின்றெஞ் சிறுசெந் நாவே.*

என்று பாடி நள்ளியின் செயலால் எங்ஙனம் நாட்டில் நல்லொழுக்கம் நிலைபெற்றது என்பதையும் எடுத்துரைத்தார். நள்ளியின் செல்வம் புலவர்க்கில்லை யெனில், அவர் தம் புன்பசியைப் போக்குவான் வேண்டிப் புல்லிய மன்னரிடம் செல்லல் நேரிடும். அவர் செய்யாதனவற்றையும் செய்ததாகக் கூறிப் பாடினால்தான் அவர் பொருள் கொடுப்பர். இல்லெனிற் கொடார். இதனால் புலவரின் செந்நா பொய்நாவாகவே கருதப்படும். சான்றோராகிய புலவரும் தம் நலன் பொருட்டுப் பொய்யுரைக்கின் பின் சான்றாண்மை என்னவாகும்?

கண்டீரக் கோப்பெருநள்ளியின் ஈரநெஞ்சத்தாலும், மாரியன்ன வண்மையாலும் சான்றோரும் தம் ஒழுக்கத்திற் சிறிதும் வழுவாது விழுப்பமுடன் வாழ்ந்தனர். நாட்டிலும் பொய்யும் வழுவும் சூதும் வஞ்சமுமற்று அறமும் அன்பும் இன்பமும் களிநடம் புரிந்தன. அம்மேலோனின் கையசைவால் அவன் நாட்டில் அன்பு பாட அறம் ஆடல் புரிந்தது. அறத்திற்கும் அன்பிற்கும் தலைவனாக நள்ளி இங்ஙனம் விளங்கி தனது நாட்டை நாவலர் போற்ற நல்ல வண்ணம் ஆண்டான்.

* புறம் : 148.

# முல்லைவேலி நல்லூரன்

“பழுமரம் தேடிச் செல்லும் பறவைபோல்” வரையாது கொடுக்கும் வள்ளல்கள் வாழ்ந்த வளமனையை நாடிச் செல்வது பாணர் புலவர் முதலியோரின் பண்டை இயல்பு. தார் வேந்தரும், “பாணர் தாமரை மலையவும், புலவர் பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்” வேண்டுவன ஈந்து விடைகொடுத்து அனுப்புவர். பைந்தமிழ் நாடு இங்ஙனம் பழுமரமாய், ஊருண்கேணியாய், மருந்து ஆகித் தப்பா மரமாய், நிழலில் நீளிடைத் தனி மரம்போல உயர்ந்த புகழுடன் நின்று விளங்கியது.

வறுமை வழிகாட்டப் பாணன் ஒருவன், பரிசில் பல நல்கும் குரிசில் ஒருவனைத் தேடிச் சுரத்தின் வழியே நடந்து கொண்டிருந்தான். “களங்கனியன்ன கருங்கோட்டையும் பொன்வார்ந்தன்ன புரியடங்கு நரம்பையுமுடைய இன்குரற் சிறிய யாழை அவனுடைய இடது தோள் தாங்கியிருந்தது. புல்லென்ற தோற்றத்துடனும் பொருந்திய பசியுடனும் அவனுடைய சுற்றம் அவன் பின்னே வந்துகொண்டிருந்தது. சோர்ந்து வழி நடந்து செல்லும் இவர்களுக்கு எதிரே அச்சுரத்தின்கண்ணே ஒரு சிறு கூட்டம் இளைப்பாறிய வண்ணமிருந்தது. அக் கூட்டத்தின் தோற்றமே அது மிக்க பொருளுடையோர் கூட்டமென்பதைத் தெரிவித்தது. நெடிய தேரை ஈர்த்துவந்த கடும்பரிகள் பூட்டினின்றும் அவிழ்த்து விடப்பட்டு இளைப்பாறிக்கொண்டிருந்தன. அருஞ்சுரத்திடைச் செல்வோரின் வழிநடை வருத்தம் ஒன்றையும் அறியாதவராய் ஊரிடைத் தங்கியிருப்போர் போன்று அவர்கள் மகிழ்ச்சியுடனும் பொலிவுடனும் தோன்றினர்.

இங்ஙனம் ஆற்றினிடை அமைதி நிலவத் திகழ்ந்த கூட்டம் பாணர் குழுவே என்பது அவர்களது தோற்றத்தினின்றும் ஐயமறத் தெரிந்தது. பாணர் பொற்றாமரைப் பூவைச் சூடி இருந்தனர். விறலியர் பொன்னரிமாலையை அணிந்திருந்தனர். எனினும் அவர்களின் செல்வச் செருக்கைக் கண்ட வறிய பாணன் அவர்களை “நீவிர் யாவிர், பாணரோ” என வினவாது இருந்தான். அவன் தாழ் நிலையைத் தெள்ளிதின் உணர்ந்த அப் பெரும்பாணன் அவனிடம் சில சொல் கூறி அவனை ஆற்றுப்படுத்தினான்.

“புல்லென்ற சுற்றத்தையும் மிக்க பசியையுமுடைய இரவலனே! வெற்றி பொருந்திய வேலையுடைய தலைவனைக் காண்பதன் முன்னே யாம் நும்மினும் வறியராய் இருந்தோம். இப்பொழுதோ அவ் வறுமை முற்றும் நீங்கப் பெற்று இத் தன்மையராயினோம். நீயும் அவன்பாற் சென்று வேண்டுவன முகந்து திரும்புவாயாக. மறுமை இன்பத்தை நோக்கி வறியார்க்கு ஒன்று ஈயும் குறியெதிர்ப்பைக் கொண்டவன் அல்லன் அவன். பிறரது மிடியை நோக்கி அதைப் போக்குவதே அவன் கருத்தாகும். அவன் யாரெனில் மதமிக்க யானையினையும் மனஞ் செருக்கிய

குதிரையினையு முடைய பேகன் என்னும் பெருவள்ளல் ஆவன் " என்றான்.

இவ் வண்ணம் வறிய பாணரின் தோற்றத்தையும் அன்னவரின் சூழ் நிலையையும் மாற்றி,

எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின்றுஅவன் கைவண் மையே.*

என அவர்களால் உணரப்பட்டுப் பாராட்டிப் புகழும் மேம்பட்டவன் வையாவிக்கோப்பெரும்பேகன். தூய அறுவைபோல் இழியும் அருவி பல உடைய மலையையும், காரெதிரும் கானத்தையும் உடையவன். நல்லூர் என்னும் ஊருக்குத் தலைவன். படை மடத்தைக் கனவினும் அறியாத காவலன். கண்ணகி என்னும் அரும்பெறற் பாவைக்குக் கணவன். பாணரையும் புலவரையும் மிக விரும்பி அவர்தம் நட்பைப் பெற்றவன். கொடைவள்ளல் எழுவருள் ஒருவன் என நல்லாசிரியர் பலரால் பிற்றை நாளில் புகழப்பட்டவன்.

வரையா வள்ளன்மைக்கு உவமையாகப் புலவர்கள் மாரியைக் கூறுவர். அம் மாரி, நீரற்ற குளத்தின் கண்ணே பெய்தும் அகன்ற விளைநிலத்தின் கண்ணே சொரிந்தும் பயன்படாத களர்நிலத்தை நிறைத்தும் தன் கடமையைச் செய்யும். அதுபோலவே பேகனும் கொடையிடத்து அறியாமைப் படுவதல்லது, பிறர் படையுடன் பொர நேரிடின் அப் படை யிடத்துத் தான் அறியாமை

*புறம் : 141.



யைப் படான் " என்று பேகனின் கொடைத்திறனையும் வெற்றி முழக்கும் வீரப் பண்பையும் பரணர் வருணித்துள்ளார்.

கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே*

என்று அவன் கொடைத் தன்மையைப் பழிப்பதே போன்று அதனைப் புகழுந் திறம் வியந்து பாராட்டற் குரியது.

கொடைமடம் என்பது வரையாது கொடுத்தலாகும். இதனைப் பிற்காலத்துப் புலவராகிய வில்லிபுத்தூரார் கன்னனைப் போற்றுவதன் வாயிலாக விளக்கியுள்ளார் :

வல்லார் வல்லகலை ஒருக்கும்
மறைநூ லவர்க்கும் கடவுளர்க்கும்
இல்லா தவர்க்கும் உள்ளவர்க்கும்
இரந்தோர் தமக்கும் துறந்தவர்க்கும்
சொல்லா தவர்க்கும் சொல்பவர்க்கும்
சூழும் சமயா திபர்களுக்கும்
அல்லா தவர்க்கும் இரவிமகன்
அரிய தானம் அளிக்கின்றான்.†

படைமடம் என்பது வீரர் அல்லாதார் மேலும் முது
கிட்டார் மேலும் மூத்தோர் இளையோர் மேலும் அம்பைச்
செலுத்துதல். இது பெருவீரர்களிடம் காணப்படாததோர்
பண்பு. படைமடம் படாமையைக் கம்பர் மிக அழகாகத்
தமது காவியத்தில் நன்கு வருணித்துள்ளார்.

*புறம் : 142 †வி. பா. கிருட்டினன் தூது : 235.

இராவணன் தனது சுற்றத்தார்களையும் படைவீரர்களையும் இழந்தபின்பு தானே போர்க்களம் புகுகின்றான். அவனுக்கெதிரே இராமன் எதிர் நின்று போர் செய்கின்றான். விண்ணையும் மண்ணையும் கட்டியாண்ட இராவணனின் தோள்வலிமை இராமனிடம் வெற்றி பெறவில்லை. ஏறிநின்று போர் புரிந்த தேரும் ஒடிந்து, கையிற் பிடித்த வில்லும் முறிந்து தனியனாய் நிற்கின்றான் இலங்கை வேந்தன். இதுதான் தக்க வாய்ப்பென்று அஞ்சனவண்ணன் அதைக் கருதவில்லை. அவனுடன் மேலும் போர் செய்யாது அவன் தன் பகைவனுக்கு அருளினான் :

ஆளயா வுனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளையாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளைவாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளைதாவுறு கோசலை நாடுடை வள்ளல்.*

இங்ஙனம் இராமன் போர்க்களத்தில் நடந்து கொண்டதைப் போன்று அருளுடன் நடந்துகொள்ளுவதுதான் படைமடம் படாத செயல் எனப்படும்.

பேகனின் அருள்உள்ளம் எல்லையற்றுப் பரந்திருந்தது. அவனுடைய ஈர உள்ளம் தன்னையொத்த மாந்தர் தம்மாட்டு மட்டுஞ் செல்லாது பறவைகளின் பாலும் சென்றது. உணர்வு மிகும்பொழுது அறிவு இயங்குவதில்லை. ஆராய்வதுமில்லை. உணர்வு குறைந்த பின்னரே, நாம் எத்தகைய செயலைச் செய்துள்ளோம், அது போற்றற்குரியதா அன்றித் தூற்றற்குரியதா என்பன விளங்கும். அருள் நிறைந்த பேகனின் உள்ளப் பெருக்கை உலகோர்

*க. ரா. யுத்த காண்டம் முதற்போர்புரி படலம் : 256,



அனைவரும் உணரும் வண்ணம் அரிய செயல் ஒன்று நடந்தது.

கார்காலத்தில் ஒருநாள் மேகம் தன் பொறையைத் தாங்கமாட்டாது மழையைப் பெய்து மாநிலம் வளஞ் சுரக்கும் வண்ணம் அருளியது. அவனுடைய மலையகமெல்லாம் முரசுபோல் அருவி முழங்கியது. கானமெங்கும் முல்லைக் கொடிகள் முகையவிழ்ந்து மணம் வீசின. கானத்தின் கவின் நிறைந்த காட்சியையும் காற்றில் மிதந்து வந்த மலர்மணத்தையும் நுகர்ந்த வண்ணமே பேகன் சென்று கொண்டிருந்தான். அப்போது கொண்டலைக் கண்ட தோகைமயில் ஒன்று தன் மாயிரும் பீலியிலுள்ள மழைத் துளிகள் சிதறும் வண்ணம் தோகை விரித்துநின்றது. அது கண்டான் பேகன். அவனது கருணைமிகு உள்ளம் மணிநிற மஞ்ஞையின் செயலை மாறுபடக் கருதியது. மாரிக் காலத்து மழையைத் தாங்காதுதான் அது நடுங்குகிறது என்று நினைத்தான். உடனே அதன் துன்பம் கெடும்வண்ணம் தான் தோள்மீது போர்த்திருந்த பொன்னாடையை எடுத்து அதன் மீது போர்த்தான். கானமயிலின் கடுங்குளிரைப் போக்கியதாகக் களிப்பு மிக அடைந்து தன் கோயில் புகுந்தான்.

இவ் வருஞ் செயலைப் போற்றிப் புகழ்ந்து தண்டமிழ்ப் புலவர்பலர் பாடியுள்ளனர். பரணர் என்னும் பெரும்புலவர்,

மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக *

என்றும்,

*புறம் : 145.

உடாஅ போரா வாகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக் கீந்த எங்கோ *

எனவும் அவனைப் பலபடியாகப் பாராட்டியுள்ளார்.

மாமயில் உடாது, போர்த்துக் கொள்ளாது என்பதை பேகன் அறியாதவனல்லன். எனினும் ஆர்வ மிகுதியால் அவன் அதற்கு ஆடை அளித்து அதன் குளிரைப் போக்கக் கருதினன். யானையையும் குதிரையையும் அன்பாக வளர்ப்பவர்கள் அவற்றிற்கு ஆடை தைத்துப் போடுவதை நாம் இன்றும் காண்கின்றோமாதலால் பேகனின் அருஞ்செயலும் நடக்கக் கூடாத ஒன்று அன்று. அதன் மூலம் அவனது அருள் நெஞ்சம் எவ்வளவு பரந்து உயர்ந்தது என்பதே விளங்குகிறது.

இப் பெருமை மிக்க சீரிய செயலால் பேகனின் இசை இந் நிலவுலகின்கண் எங்ஙணும் பரந்தது. அவன் கொடைமன்றம் நோக்கிப் பரிசிலர் பலர் வந்த வண்ணமே இருந்தனர். பாவலர் பலர் அவன் ஊரையும் மலையையும் கானத்தையும் வாழ்த்தி அவனுடன் பலநாள் உறைந்து அளவளாவினர். அக்காலங்களில் அவனுடைய பெருமையினையும் அவன் துணைவியாகிய கண்ணகியின் மாண்பினையும் அவள் விருந்தோம்பும் சிறப்பினையும் நன்கு உணர்ந்தனர்.

வளர்பிறைபோல் வள்ளல் பேகனின் நல்லிசை நாளும் வளர்வதே போன்று நாட்கள் பல நீண்டன. முழுமதியின் இடையேதோன்றும் மறுப்போன்று அவன் வாழ்விலும் ஒரு மாசேற்பட்டது. தன்னுடைய மனைக்கிழத்தியாகிய

* புறம் : 141.



கண்ணகியைத் துறந்து காதற் கிழத்தி ஒருத்தியுடன், ''விடுதல் அறியா விருப்பினனாகித் தன் வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்து'' ஒழுகிவந்தான். கணவனைப் பிரிந்த கண்ணகி மாற்றருந்துன்பம் வருத்த உடல் மெலிந்து வாடினள்.

இளங்கோவடிகள் தீட்டிய சிலப்பதிகாரத்தில் கோவலனைப் பிரிந்த கண்ணகியே போன்று இவளும் தன் தலைவனால் துறக்கப்பட்டாள். அவள் தன் கணவனை எண்ணியே கரைந்ததைப் போன்று இவளும் உள்ளம் வெம்பினாள். கோவலனைப் பிரிந்த கண்ணகி அணிகலன்களைத் துறந்து ஒப்பனை ஏதும் செய்துகொள்ளாததைப் போன்றே இவளும் மாசுண்ட திங்களெனத் தோன்றினாள். சிலம்புச் செல்வியாகிய கண்ணகி,

மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்*

தினளாய் வருந்தியதாக இளங்கோவடிகள் படம் பிடித்துக்

*சிலம்பு : அந்திமாலை சிறப்புச் செய்காதை : 50—57.

காட்டியதைப்போன்று பேகனின் கண்ணகியும் புனையா ஓவியம்போன்று பொலிவற்றிருந்தாள்.

பொற்பின் செல்வியாகிய சிலம்புக் கண்ணகிக்குக் கிட்டாத ஓர் அரிய வாய்ப்பு, பேகனின் மனைக்கிழத்திக்குக் கிடைத்தது. காதற்கொழுநனைப் பிரிந்த கண்ணகியின் துயரை நீக்கக் கோவலனிடம் யாரும் சென்று அறிவுரை கூறவில்லை. கண்ணகியின் துன்பத்தை உணர்ந்த அவளின் மாமனும் மாமியும் உளம் மிக வருந்தினர் என்பதையே நாம் அறிகிறோம். நோயையும் துன்பத்தையும் தன்னகத்து அடக்கிக்கொள்வதே தன் கடமை யென அவள் உணர்ந்து நடந்தாள்; துன்பத்தைப் பொறுத்துவந்தாள்.

ஆனால் பேகனின் செயல் சீரியதன்று என்பதை அவனுக்கு நயமாக எடுத்துக்கூறி அவனை நன்னெறிப்படுத்த நாநலம் வாய்ந்த பாவலர் பலர் முயன்றனர். பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் முதலிய புலவர்கள் பேகனின் ஒழுகலாற்றை நெறிப்படுத்த அறவுரை கூறினர். இப்புலவர் பெருமக்களின் பாடல்களால் கண்ணகியின் மேம்பாடும் கற்பின் திறனும் உயர்வும் நன்கு விளங்கும். தனிமைத் துயரால் எப்பொழுதும் அவளுடைய கண்கள் மாறாது நீரை வடித்தவண்ணமே இருந்தன என்பதைப் புலவர் அனைவரும் கூறியுள்ளனர். இங்ஙனம் நல்லூர்க் கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்துக் கண்ணகியினும் சிறிதளவு நற்பேறு பெற்றவளாகத் தோன்றுகின்றாள். கண்ணகி என்னும் பெயரைத் தாங்கிய இவ்விரு மாதரும் பெண்களின் உயர்ந்த பண்புகளை யெல்லாம்



கொண்டிருந்தும் தத்தம் கணவரால் புறக்கணிக்கப்பட்டது சாலவும் வருந்தத்தக்கது.

"நீ அருளாமலிருத்தல் மிகக் கொடிது. மாலையும் மயங்கி இருள் சூழும் வேளையிலே, சிறிய யாழை இரங்கற் பண்ணாகிய செவ்வழி யென்னும் பண்ணிலே வாசிக்கும்படி பண்ணி நினது காட்டைப் பாடினோம். அக்காலை நெய்தல் மலர்போன்ற கரிய கண்கள் கலங்கிச் சிந்திய நீர்த்துளிகள் அணிகலையுடைய மார்பை நனைக்கும்வண்ணம் வருந்தினள். அங்ஙனம் வருந்தியவளை 'இளையோய்! எங்களின் நட்பை விரும்புபவனுக்கு நீ எவ்விதத்திலும் உறவை யுடையையோ' எனக் கேட்டோம். உடனே அவள்தோழியர் காந்தள்முகை போன்ற கைவிரலால் அவள்கண்ணீரைத் துடைத்து, 'நாங்கள் அவனுடைய கிளைஞரல்லேம். இப்பொழுது நீ கேட்பாயாக. முல்லைக்கொடியை வேலியாக உடைய நல்லூருக்குத் தலைவனான பேகன் தன் ஒல்லென முழங்கும் தேருடனே எம்போலொருத்தியை நயந்து நாளும் வருவான்' என்று சொல்லுவர்" என்ற கருத்தமைந்த பாடலின் வாயிலாகப் பரணர் கண்ணகியின் துன்பத்தைப் பேகனுக்கு நன்கு எடுத்துக்காட்டுகிறார். இம்முறை அவனைத் தேடிவந்ததற்குக் காரணம் பொருளைப் பரிசிலாகப் பெறும் நோக்கமன்றென்றும் கூறித் தம் கருத்தைத் தெரிவிக்கிறார்.

"மாமயில் பனிக்குமென்று படாம் கொடுத்த நல்ல புகழையுடைய கலிமான் பேக! யாம் பசித்து இவண் வரவில்லை. எம்மாற் பேணப்படும் சுற்றமும் எமக்கு இல்லை. அருளை விரும்புவோனே! அறத்தைச் செய்வாயாக என நும்மை இரக்கவே யாம் வந்தேம். யாம் விரும்பும் பரிசில்

அதுவேயாகும். இன்றை இரவே நின் நெடுந்தேரேறி இன்றாதாக உறைநின்றவளின் பொறுத்தற்கரிய நோயைத் தீர்ப்பாயாக" என்னும் கருத்தமைந்த கீழ்வரும் பாடலைப் பரணர் பாடினர்:

மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கொடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமு மிலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய் யோயென
இஃதியா மிரந்த பரிசிலஃ திருளின்
இனமணி நெடுந்தே ரேறி
இன்னா துறைவி யரும்படர் களைமே*

இப்பாடலின் மூலம் பேகனின்செயல் அறத்தொடு பொருந்திய தன்று என்பதைக் கூறி, "மடத்தகை மயில் குளிரால் நடுங்குமென்று அருள் செய்த நீ உன்னுடைய துணைவியின் வருத்தங் கண்டும் அதனைக் களையாமலிருத்தல் தகாத தொன்றாகும். நின்னையல்லாது பிறிது கதி இலளாகிய அவளுக்கு அருளாதிருத்தல் அறஞ் செய்யாமலிருத்தலை நிகர்க்கும். எனவே அருளை விரும்புவோனே! அறத்தைச் செய்க" என்று கூறுவது எவ்வளவு நயமாகவும் கேட்டார்ப் பிணிக்குந் தகையதாயு மிருக்கிறது! இனிய கூறித் தெருட்டும் பரணரின் இயல்பு வியந்து பாராட்டற் குரியதாகும்.

*புறம் : 145.



அரிசில்கிழார் எனும் புலத்துறை முற்றிய புலவரும் பேகனை வந்தடைந்தார். அவனது நல்ல நாட்டை அழகுறப் பாடினர். அதனை மிக விரும்பிய அக் காவலன் அப் புலவர்க்குப் பரிசிலாகப் பெறுதற்கரிய அணிகலன் முதலிய பொருள்களைக் கொடுத்தான். அது கண்ட அரிசில்கிழார், "அடு போர்ப் பேக! அருங்கல வெறுக்கையைப் பெற நாங்கள் விரும்பவில்லை. நின் நன்னாட்டைப் பாடியதற்காக நயந்து பரிசில் கொடுக்க விழைவையாயின், குரிசிலே! நீ நல்காக் குறையால் நனி வருந்தும் நின் ஆயிழையரிவையின் கூந்தல், புகைகொண்டு மணம் பரக்கவும் கோதை சூடி நலஞ் சிறக்கவும் நீ இன்னே செல்வாயாக! உயர்ந்த தேரை நின் குதிரைகள் பூண்பனவாக" என்று அவனிடம் வேண்டினர்.

பெருங்குன்றூர்கிழார் என்னும் பெரும் புலவரும் பேகனை அவன்மனைவி காரணமாகவே பாடியுள்ளார். இதன் பொருட்டு அவர் நீண்ட பெருவழியைக் கடந்து வந்தார். பேகனைக் கண்டார். "ஆவியர் கோவே! அருவியுடைய பல மலைகளையும் அரிதிற் கழித்துச் சிறிய யாழின் கண்ணே செவ்வழிப் பண்ணை நிறைத்து வந்ததற்காக நீ ஒன்று தரல் வேண்டும். கார்காலத்து மழைத்துளியின் ஓசையைத் தனியளாய்க் கேட்டுத் துன்புற்றிருப்பவளின் கருங் கூந்தல் நெய்யைத் துறந்து மாசுபடிந்துளது. அது மாசு நீங்கி நீலமணியினும் சிறம்பெற்று ஒளிரும்வண்ணம் செய்து அக் குழல் புதுமலரையும் சூடும்வண்ணம் இன்றே நீ வரல் வேண்டும். இதுவே எம் பரிசிலுமாகும்" எனப் பொருள்படும் விழுமிய பாடல் ஒன்றைப் பாடினர்:

கன்முழை அருவிப் பன்மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார்வான் நின்னுறை நமியள் கேளா
நெருநல் ஒருசிறைப் புலம்புகொண்டு உறையும்
அரிமதர் மழைக்கண் ணம்மா அரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமன் எம்பரிசில் ஆவியர் கோவே*

இவ்வண்ணம் பெரும் புலவர்கள் மூவர் பேகனைக் கண்டு வரையாது வழங்கும் வள்ளன்மை வாய்ந்த அவன் அறத்தொடு பொருந்தி மனைக் கிழத்தியுடன் வாழவேண்டுவதே தாம் விரும்பும் பரிசில் எனக் கூறியது அக்காலப் புலவர்கள் அறத்தின் மாட்டும் தூயநெறியின் பாலும் கொண்டிருந்த உயர்ந்த குறிக்கோளை நன்கு காட்டுவதாகும். தங்களின் நலமொன்றனையே கருதி அவர்கள் வாழவில்லை. பிறர் நலங் கண்டு களிப்படையும் பேருள்ளம் பொருந்தி இருந்தனர். பிறர் வாழத் தாமும் வாழலாம் என்ற பெருங் கொள்கையினராய் இருந்தனர். அருங்கல வெறுக்கையை விட அறமே பெரிதென மதித்தனர். பிறருடைய துன்பத்திலே பங்குகொள்ளும் பெருந்தகையராய் விளங்கித் தாம் நட்புச் செய்தோரின் இன்ப துன்பங்களைக் குளத்தின் ஆம்பலைப் போல் உடன் இருந்து பகிர்ந்து நுகர்ந்தனர்.

பேகனின் பிழையொழுக்கத்தைத் திருத்தி நல்வழிப் படுத்தும் முறைமையில் கபிலரும் தம் பங்கைச் செய்துள்

*புறம் : 147



ளார். பேகனை அணுகி அவனை இவர் திருத்தும் முறை சாலச் சிறந்ததாக உள்ளது. அவனுடைய பிழையை இவர் அறிந்ததாகவே காட்டிக்கொள்ள வில்லை. இவருடைய பாட்டிலே பண்டைத் தமிழரின் சில வழக்கங்களை அறிய முடிகிறது. மழை வேண்டுங்காலை, மலைக்குறவர்கள் மிக்க பலியைத் தூவி வேண்டுவர். மழை நன்கு பெய்த உடனே "முகில் மேலே போவதாக" என்று மீண்டும் தெய்வத்தை வேண்டி அது மாற, அதனால் மிக்க மகிழ்ச்சி கொள் வாராம். பின்னர் மலைச் சாரலின்கண்ணே புதுத் தினையை உண்பார்களாம். "இவ்வாறான மலைச் சாரலையுடைய நாட! சினப்போர் வல்லவனே! கைவண்மை நிறைந்தோனே! விரைந்த குதிரையையுடைய பேக!" என்று அவன் மலைச் சாரலையும் அவன் பெருமையையும் முதலில் வாழ்த்துகின் றார் கபிலர். பின்னர் தான் கருதியதைத் தெரிவிக்கின்றார்.

"நேற்று வழிநடந்து வருந்திய என் சுற்றம் பசித்த தால், உயர்ந்த மலையிடத்துள்ள சிறிய ஊரில் நினது மனை யின் வாயிற்கண்ணே நின்று நின்னையும் நினது மலையையும் வாழ்த்திப் பாடி நின்றேன். அப்போது துன்பம் தாங் காது சொரிந்த கண்ணீரையுடையளாய் அக் கண்ணீர் மார் பகம் நனையும்படி பொருமி, குழல் வருந்துவதுபோல ஒருத்தி அழுதாள். மிக இரங்கத் தக்கவள். யார் கொலோ அவள்" எனக் கபிலர் கடுமான்பேகனைக் கேட் டார்.

நல்லிசைப் பேகன் தன் மனைவிக்கு இழைத்த பொல் லாங்கை உணராதவர் போன்றும், அவன்மனைவியைத் தாம் அறியாதவர் போன்றும், அவர் பேகனுக்கு நல்லறிவு கொளுத்தும் முறை மிக நாகரிகம் வாய்ந்ததாக உள்ளது.

கணவன் மனைவியர்க் கிடையே பிறர் நின்று பேசுவது எளி தன்று. அன்னவர்க்குள் பூசல் நிகழினும் அதைத் தீர்க்க வேண்டுமாயின் நுண்ணிய அச்செயலைப் பன்முறை எண் ணிப் பார்த்துச் செயல் வேண்டும். இல்லெனில் நலன் விளைக் கச் சென்ற இடத்திலே தீதுதான் அறுவடை யாகும்.

"யார் எது கேட்பினும் அவர்க்கு இல்லையென்னாது வழங்குபவன் நீ. உன்னுடைய வீட்டில் உள்ளவருக்கு நீ என்ன குறை வைக்கமுடியும்? நின்னையும் நின்மலையையும் பாடிய உடனே ஒருத்தி ஏன் அழவேண்டும்? அவள் அழுகை எம்மையே இரங்கும்படி செய்து விட்டதே! பெருவள்ளலாகிய நீ அவள் குறையை இன்னும் அறிய வில்லையா! அவள் யார்? என்ன குறை செய்துவிட்டாள்" எனக் கேட்கப் பெற்ற பேகன் என்ன செய்வான்?

கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொல் அளியள் தானே நெருநல்
சுரனுழந்து வருந்திய வொக்கல் பசித்தெனக்
குணில்பாய் முரசி னிரங்கும் அருவி
நளியிரும் சிலம்பிற் சீறூ ராங்கண்
வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னுநின் மலையும் பாட வின்னா
திகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
... ... ... ... ...
குழலினை வதுபோல் அழுதனள் பெரிதே*

என்ற பாடலால் பேகனின் பொல்லா ஒழுங்கை எல்லோ ரும் போற்றும் அறநெறியில் திருப்ப விழைந்தார். நின்

*புறம் : 143.



மலைவாணர் தாம் வேண்டும்பொழுது மழையை அடைந்தும் வேண்டாதபோது ஒழித்தும் இன்புறுவது போன்று கண்ணகியும் நின் அருள் பெற்று இன்பம் உறுவாளாக என்றநயமும் அவர் பாடலில் கலந்து கருத்து மிக ஒளிர்ந்தது.

புலவர் பலர் அவன் செயலை மெல்லக் கடிந்து நல்லாற் றின் நிறுத்த அரும்பாடு பட்டனர். இவர்களின் வேண்டு கோள் என்னவாயிற்று என்பதை அறியப் பாடல் ஒன் றும் இப்போது கிடைத்திலது. எனினும் புலவர்பெருமக் களை மதியாது தன் மதிவழியே பேகன் சென்றிருக்க மாட்டானென்பது திண்ணம். அருளுடைய அவன்நெஞ் சம் நாவலர் மொழிப்படி நடந்து உலகின்பம் துய்க்கவே ஒருப்பட்டிருக்கும். பிரிவுத் துயரால் வாடிய கண்ணகியின் மெலிந்த தோள்கள் பேகனின் கூட்டுறவால் மீண்டும் பூரித்திருக்கும். துன்பக் கண்ணீர் சிந்திய அவள் மையுண்ட மதர்க்கண்கள் இன்பக் கண்ணீரால் ஒளிமிகுந்து விளங்கி இருக்கும். நெய்யும் பூவும் மறந்த கூந்தலிலே அகிற்புகை யும் கலவையும் புது மலரும் மணம் பரப்பி இருக்கும். இவ் வனைத்திற்கு மேலாக அறம் வென்று தீமை தோல்வி யடைந்திருக்கும். இவ் வரிய செயலைச் செய்து முடித்த அரும்புலவோரே அறச் செம்மல்களாவர்.

# முள்ளூர் மன்னன்

பெண்ணையம்பேர்யாற்றங் கரையிலே அமைந்த கோவலூர் என்னும் நகரம் அக்காலத்தில் எண்ணருஞ் சிறப்புடன் விளங்கியது. இவ் வணிநகரைத் தன் தலைநகராகக் கொண்டு மலையமான் திருமுடிக்காரி என்னும் மாவள்ளல் அருள் நிரம்பிய நெஞ்சினனாய் ஆண்டுவந்தான். முள்ளூர் மலையையுடையனாதலின் காரியை முள்ளூர் மன்னன் என்று புலவர்கள் அழைத்தனர். மலாடு என்ற அவன் ஆண்ட பகுதி, மலையும் மலைசார்ந்த குறிஞ்சியாதலின் இயற்கைக் காட்சியுடன் இனிது விளங்கியது. அவனுடைய கானத்திலே யானைக் கூட்டங்கள் நிறைந்திருந்தன. வேடர்கள் யானைவேட்டம் ஆடுவதிலே மிக வல்லவர்களாக இருந்தனர்.

வேடுவர்களின் முன்றிலின்கண்ணே பழந்தூங்கும் பலா மரங்கள் செழித்துப் பரந்திருக்கும். அம்மரங்களின் மீது முன்னைக் கொடியும் முசுண்டைக் கொடியும் தாவிப் படர்ந்து பந்தர் இட்டதுபோல் பார்வைக்குத் தோன்றும். குறப்பெண்கள் மான்தோலில் தினையைப் பரப்பி உலர வைப்பார்கள். கானக்கோழியும் இதற்பறவையும் உலரும் தினையைக் கவர்ந்துண்ண அற்றம் நோக்கியிருக்கும். முன்றிலின் மற்றொரு புறத்திலே கலைமான்கள் தம் துணையோடு



விளையாடிக்கொண்டிருக்கும். இவ்வாறான எழிற்காட்சிகளை அவனுடைய நாட்டகத்தே எங்கும் காணலாம். கானவர்கள் தம்முடைய விருந்தினர்க்குக் கானக்கோழி, மான் முதலியவற்றின் இறைச்சியையும் ஆரல்மீனின் கறியையும் சந்தன விறகிற் சுட்டு அளித்து விருந்தோம்பும் இயல்புடையவர்களாயிருந்தனர்.

நல்லியல்பு மிக்க இம்மக்களின் தலைவனான காரி வீரத்திலும் நெஞ்சின் ஈரத்திலும் சிறந்து விளங்கினான். மிக்க நன்றியுணர்வும், அறிவுமுடையதாக அவன் இவர்ந்து செல்லும் குதிரை இருந்தது. மக்கள் அதனையும் காரி என்றே அழைத்தனர். "காரி ஊர்ந்த காரி" என்று புலவரும் திருமுடிக்காரியை அவனது குதிரையுடன் இணைத்துப் பாடியுள்ளனர். கரை இடிக்கும் கடல் ஒன்றே, களிப்பான காலத்தில் காசினியைக் காத்துக் காய்வு மிக்க போதில் அதனை அழிப்பதையும் போன்று, காரி பகைவரிடத்திலே கனலைப் போன்றும் கேளிர் திறத்திலே தண்ணீர் போன்றும் விளங்கிவந்தான். அவனுடைய அருந்திறலை அக்கால முடிமன்னர் மூவரும் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் மலையமான் திருமுடிக்காரியின் துப்புத்துணை வேண்டி ஒவ்வொருவரும் சிறந்த பரிசுப்பொருள்களுடன் அவனை அணுகி வேண்டினர். ஒவ்வோர் அமயத்தும் ஒவ்வோர் அரசர்க்குத் துணை சென்று அவன் வெற்றி அளித்துள்ளான். காரி யார் பக்கத்தில் நின்று போர் செய்தானோ அவர்திறத்து வெற்றி கிட்டுவது உறுதியாக இருந்தது. தோற்றவரும் வென்றவரும் காரியின் வலிமையையே வியந்து பேசினர். போர்க்களத்தில் மலையன் இல்லாதிருப்பின் போரை வெல்லுதல் நமக்கு எளிதெனத் தோற்

றவர்கள் அவன் பெயரைச் செப்பினர். வென்றவர்களும் மலைபோலும் யானையை எதிர்நின்று கொன்று நமக்கு நல்ல வெற்றியைக் கொடுத்தோன் காரியே என்று அவனைப் புகழ்ந்து கூறினர். அவனை நட்பாகவும், பகையாகவும் பெற்றவர்க்கு அவன் சேயோனைப் போன்று விளங்கியதாக வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் என்னும் புலவர் புகழ்ந்துள்ளார்.

முடியுடை வேந்தரிடம் பெற்ற அளப்பருஞ் செல்வத்தையும், தன்னுடைய தாள்வலியால் ஈட்டிய குன்றனைய நிதிக்குவியலையும் மலையமான் தன் இன்பம் கருதித் துய்க்கவில்லை. தக்க வள்ளல்களை எதிர்பார்த்து வாழ்க்கையை நடத்தும் புலவர்க்கும் பாணர்க்கும் கூத்தர்க்கும் வரையாது உவந்தளித்தான் அவன். அவனுடைய கொடைத் தன்மை செயற்கையாக அவனுக்குண்டானதன்று. இயற்கையிலேயே அவன் பேரருள் படைத்த நெஞ்சினனாக இருந்தான். வைகறைப் போதிலே தெள்ளிய தேறலை மாந்தி நாளோலக்கத்தில் மகிழ்சிறந்து இருக்கும்போது, இரவலர்க்குத் தேரை அருகாது வீசுதல் யார்க்கும் எளிமையானதே. ஆனால் மலையமானோ நாட்காலையிலே நறவமாந்திக் களிக்காமல் தன்னை நாடிவந்த இரவலர்க்கு இழையணி நெடுந்தேரை நிறையக் கொடுத்தானென்றும் அவ்வாறு அவன் கொடுத்த தொகை அவனுடைய முள்ளூர் மலையுச்சியின்கண் உண்டான மழைத் துளியினும் பலவாக இருந்தன என்றும் கபிலர் என்னும் செந்நாப்புலவர் பாடிச் சிறப்பித்துள்ளார்.

கற்ற புலவரும் பாணரும் கல்லாத பேதையரும் அவனது நெடுங்கடைக்கண் வந்து நின்றனர். அங்ஙனம் வந்



தவர்களின் தரத்தையும் சீர்தூக்கிப்பாராது அனைவருக்கும் வேண்டுவன அளித்தான். அவன்கண்முன்னர்க் கற்றுத் துறைபோகிய புலவரும் ஒன்றை நன்கு சொல்லத் தெரியாத மடவோரும் ஒரு தன்மையராகவே தோன்றினர். இருவர்க்கும் ஒப்பவே பரிசும் கொடுத்தான். இந்நிலையை நேரிற் கண்ட கபிலர் அவன்செயல் குறையுடைத்தா யிருப்பதை அறிந்தார். பரிசை வழங்குதல் பெரிதன்று. அதை எவரும் செய்வர். ஆனால் ஒருவரின் வரிசையறிதலே அரிய செயல். தரமறிந்து பரிசில் நல்குவதே பண்புடைய செயல் எனத் தெளிந்த அவர், மலையனைப் பார்த்து,

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே*

என்ற அறிவுரையைக் கூறினார். " மாவண் தோன்றலே! நின் நாள்மகிழ் இருக்கைக்கண் புலவரையும் புல்லிய அறிவுடையாரையும் ஒப்பக் கருதி ஒப்பப் பரிசில் நல்கும் திறனைக் கைவிடுவாயாக. வரிசையை அறிந்து செய். அதுவே செயற்கருஞ் செயல் " எனக் கூறி அவனைத் தெருட்டிய திறம் மிகவும் பாராட்டற் குரியது.

மலையமானிடம் பரிசில் பெறக் கருதியவர்கள் நல்ல நாளையும் புள்நிமித்தத்தையும் பற்றிக் கவலைப்பட வேண்டுவதில்லை. அவையிரண்டும் குறுக்கே நின்று தடுப்பினும் அவன்

*புறம் : 121.

முன்னர் வந்து முனியும் வார்த்தைகளைக் கூறினும் அவர்கள் வறிதே பெயர்குவர் அல்லர். இவ்வாறு அனைவருக்கும் இல்லையென்னாது ஈவதற்காக அடையார்முனையகம் செல்வதும், ஆநிரைகளைக் கவரும்போது எதிர்நின்று தடுத்த பகைவர்களை வெட்டி வீழ்த்தி அவைகளை ஓட்டிக்கொண்டு வருவதும் அவனுடைய பழக்கமாயிருந்தன என்பதை,

முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன்*

என்னும் பரணர் வாக்காலும்,

மாயிரு முள்ளூர் மன்னன் மாவூர்ந்து
எல்லித் தரீஇய இனநிரை†

என்னும் கபிலர் வாக்காலும் நன்கு அறியலாம்.

வயலிலே உழுத எருதுகள் எங்ஙனம் வைக்கோலைத் தின்று வாழுமோ அங்ஙனமே தேர்வண்மலையனும் தன்னுடைய தாளாற்றலால் வந்த செல்வத்தை யெல்லாம் இரப்பவர் சுற்றம் மகிழும் வண்ணம் கொடுத்துப் பின் எஞ்சியதைத் தானும் தன் சுற்றமும் உண்டு மகிழ்ந்தான். அவனுடைய அரும் பண்புகளை நன்கு அறிந்த கபிலர் அவனைப் புலவர்களும் வியப்படையும் வண்ணம் புகழ்ந்து பாடியுள்ளார். அவன் உயிர் வாழும் நாளில் பெரிதெனக் கருதியவை இரண்டே இரண்டு செயல்கள்தாம். ஒன்று பகைவரின் மாறுபாடு மிக்க மறக்களத்தின்முன்னே நின்று அவர்தம் களம்கொள்ள அஞ்சாது எதிர்த்துப் போரிட்டு

*நற் : 100. †நற் : 291.



வெல்வது. மற்றொன்று, தன்னிடம் யார் எதைக் கேட்டாலும் அவர்க்கு இல்லையென மொழியாது அவர் எவ்வம் தீரும்வகையில் வேண்டிய வேண்டியாங்குக் கொடுத்து அவரை விடுவித்தல். இவ்விரண்டு உயரிய கொள்கைகளுக்காகவே அவன் மன்னனெனத் தன் நாட்டை ஆண்டு வந்தான்.

மீக்கூறும் இம்மன்னனின் நல்லிசையைக் கேட்ட மாறோகத்து நப்பசலையார் என்னும் புலவர் அவனை ஒரு நாள் காணவந்தார். அவனுடைய பெருமையை மிக இனிதாகப் புகழ்ந்தார். "பெரியோனே! நீ பகைவரது யானையின் ஓடைப் பொன் கொண்டு அதைப் பாணரது தலை பொலியும் வண்ணம் பொற்றாமரைப் பூவாகச் செய்து சூட்டி மகிழ்வாய். இரவு ஓரிடத்தே தங்கினாற்போன்ற நிழல்செறிந்த கானத்தையும் பறையொலி போலும் ஒலிமிக்க அருவியையுமுடைய முள்ளூர் மன்னனே! நின் கிளையொடும் நீ பொலிய, புலனழுக்கற்ற அந்தணாளனாகிய கபிலன், இரந்துசெல்மாக்கட்கு இனி இடனின்றிப் பரந்து இசை நிற்க நின் புகழைப் பாடிவிட்டான். அதனால் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் மேலைக்கடலின்கண்ணே நாவாயைச் செலுத்திய காலத்து வேறு மரக்கலம் செல்ல மாட்டாத தன்மைபோல யாம் ஆயினேம். ஒன்றைக் கற்றறிவேமாயினும், அறியேமாயினும் எமது மிடி துரக்க நின் புகழ்கொண்டுவர இவண் வந்து நின் புகழைச் சொல்லுவேமாயினேம். அண்ணல் யானையும் அரசும் அடுகளத்து அழிய வெட்டிப் பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றுப் பக்கத்தையுடைய நாட்டை யுடையோய்" என அவன் நாட்டுச் சிறப்பையும் வென்றிச் சிறப்பையும் கொடைச்

அழல்புறந் தரூஉ மந்தண ரதுவே
வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் துப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை,
நினதென விலைநீ பெருமிதத் தையே*

என வாழ்த்தப் பெற்ற கபிலரின் பாடலால் மலையமான் திருமுடிக்காரி, "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற கொள்கைக்கு எங்ஙனம் எடுத்துக்காட்டாய் வாழ்ந்தான் என்பது நன்கு போதரும். அவனுடைய வென்றி மிக்க நாடு, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அறவோருடையதா யிருந்தது. அவனுடைய நிதியின் பெருக்கோ பரிசிலரின் வெறுக்கையா யிருந்தது. உரிய மனைவியைத் தவிர வேறொன்றையும் அவன் தனக்கு உரிமையாகக் கொள்ளவில்லை.

இவ்வாறான வானினும் சிறந்த வாழ்வை அவன் நடாத்தி வந்தபோதினும், போர் அவனை அமைதியாய் வாழ விடவில்லை.

கொற்றத்தின்மீது வைத்த பெருநசையால் அக்கால அரசர்கள் ஒருவரோ டொருவர் மாறுபாடு கொண்டு மறப் போர் செய்தனர். அதியமான் நெடுமானஞ்சிக்கும், மலையமான் திருமுடிக்காரிக்கும் யாது காரணத்தாலோ பூசல் ஏற்பட்டது. பூசல் முற்றிப் பெரும் போரில் முடிந்தது.

*புறம் : 122.



இருவரும் பெருவீர முடையவர்கள். இருவரின் வெற்றியும் புகழும் நாவலந் தீவு முழுவதும் பரவியிருந்தன. இருதிறத்து வேந்தரும், அவர்தம் வீரமிக்க மறவர்களும் காற்றெனத் திரிந்து, கனலென உடன்று, காலனெனப் போரிட்டனர். இருவர் காட்டிய வீரமும் எடுத்து இயம்பற்கரியதாயிருந்தது. போர்க்களம் பாடும் பாணரின் நா அவர்களின் வீரத்தை வாழ்த்த வகையறியாது மயங்கி நின்றன. வெம்போர் பலநாள் நடந்தது. இறுதியில் அரவக் கடல் தானை அதியன் வெற்றி பெற்றான். வெற்றி முரசம் ஒலிக்க அவனது அழகிய கோவலூரின் கண்ணே புகுந்தான். அதைத் தன் சீற்றத்துக்கு இரையாக்கினான். வானுலாவிய மாடமாளிகைகள் தகர்ந்து பொடியாயின. பாணர் இருந்து யாழ் எழுப்பிய மன்றம் பாழ்பட்டு அங்கே கூகைகளின் ஒலி கேட்டது. மக்கள் அலறி அங்குமிங்கும் ஓடினர். தன்னுடைய சீற்றம் தணிந்த பின்னரே நெடுமானஞ்சியும் தன் கொடுஞ் செயல்களை நிறுத்தினான்.

ஆண்மையுடன் போர் செய்தும் அஞ்சியிடம் தோற்ற காரி சேரமன்னனாகிய பெருஞ்சேரலிரும்பொறையை அடைந்தான். மாற்றார் தன் நாட்டை அழித்த செயல் அவனைப் பெரிதும் அலைத்தது. அடிபட்ட அரவம் தப்பியோடித் தனக்கு ஊறு செய்தாரைக் கொல்வதற்கு ஏற்ற வாய்ப்பை எதிர்நோக்கியிருப்பதுபோல், அஞ்சியை அழிக்கும் காலத்தை எதிர்நோக்கியிருந்தான். மலையமானுக்கு உடனே துணைக்கு வரப் பெரும்சேரலிரும்பொறையால் இயலவில்லை. பெரும் போருக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்த பின்னரே, இவன் அஞ்சியின்மீது படையெடுக்க எண்ணினான். இதற்கிடையில் சேரன் ஓரி ஆண்ட

கொல்லிமலையைத் தன் நாட்டுடன் பிணைத்துக்கொள்ளப் பெரிதும் விரும்பினான்.

சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையின் விருப்பத்தை உணர்ந்த மலையமான் திருமுடிக்காரி, தக்க படையுடன் சென்று வல்வில் ஓரியுடன் பெரும்போர் செய்து, அவனைப் போரில் மடித்து அவனுடைய ஊர்மக்கள் அலறும்வண்ணம் அவனுடைய நகருக்குள் புகுந்தான்.

பழவிறல்
ஓரிக் கொன்ற ஒருபெருந் தெருவிற்
காரி புக்க நேரார் புலம்போற்
கல்லென் றன்றால் ஊரே*

என்று பாடிய கபிலரின் அடிகளால் காரியின் வெற்றிச் செய்தியை நன்கு அறியலாம். வள்ளியோனாகிய அவ்வோரியைக் கொன்று அவனது மக்கள் அலறும்வண்ணம் அவனது நாட்டைக் கைப்பற்றி மலையமான் அதைச் சேரலனிடம் சேர்ப்பித்தான்.

கொல்லி மலையை அடையப்பெற்ற பெருஞ்சேரலிரும்பொறை பெருமகிழ்ச்சி யடைந்தான். தனக்குக் கொற்றத்தையும், கொல்லிமலையையும் தேடித் தந்த மலையமான் திருமுடிக்காரிக்கும் ஆங்ஙனமே வென்றியும் அவனுக்குரிய நாடும் தேடும் வகையிலே தன் காலத்தைக் கழித்தான். உரிய நாள் வந்ததும் பெருஞ்சேரல் பெரும்படையுடன் நெடுமான் அஞ்சியின் கடிய காவலையுடைய தகடூர்

*நற் : 320.



நோக்கிப் பயணமானான். அவனது ஆரவாரிக்கும் பெரும்படை தகடூரை முற்றுகையிட்டது.

முற்றுகைக்கு உள்ளே இருப்பதால் பயனேதும் விளையாது என்பதை முற்ற உணர்ந்த அதியமான் மலைமுழையிலிருந்து வெளிவரும் சிங்கத்தைப் போன்று வெளியே வந்தான். மதயானையைக் கண்ட கொடுவரி போன்று பெருஞ்சேரலின்மீது பாய்ந்தான். இருவரும் பலநாள் போர் செய்தனர். முடிவில் சேரலன் எறிந்த கூர்வேல் அதியனின் அகலத்திலே ஆழப் பாய்ந்து அவன் ஆவியை நீக்கியது. அதியனின் அரும் பிரிவால் அவனைச் சார்ந்தவர்கள் ஏங்கி ஒருபுறம் அழ, மற்றொரு பக்கம் கருதியது முடித்தோம் என்ற களிப்புடன் பெருஞ்சேரலிரும்பொறை அஞ்சியின் தகடூருக்குள்ளே வெற்றி முழக்குடனும் பாணரின் வாழ்த்தொலியுடனும் புகுந்தான். பின்னர் மலையமானின் நாட்டை அவனே ஆளுமாறு செய்து மீண்டனன் என்பர் அறிஞர்.

வானவனின் பெருவலியாலும் துணையாலும் தான் இழந்த நாட்டை மலையமான் மீண்டும் பெற்றுப் பண்டு போல் பாவலர்க்கும் பாணர்க்கும் நீங்காச் சுற்றமானான். "கறங்குமணி வாலுளைப் புரவியொடு வையகம் மருள ஈர நன்மொழி இரவலர்க் கீந்து" அருளொடு கலந்த ஆட்சி புரிந்தான்.

# முதிரத்துக் கிழவன்

"தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாட்டின்" பொற்காலம் சங்ககாலம் எனப்படும். அக்காலத்தில் அறத்தின் ஆட்சியும் அன்பின் அமைச்சும் ஒன்றாக இணைந்து பைந்தமிழ் நாட்டைப் "பாருக்குள்ளே நல்ல நாடு" என்று வேற்று நாட்டினர் போற்றும் வண்ணம் செய்தது. நாட்டின் காவலர்கள், "மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்பமல்லது தொழுதகவு இல்"லென எண்ணிக் கோல் கோடாது நாடாண்டனர். பெருங்குடி மக்களும் "ஈத்துவக்கும் இன்பமே" பெரிதென நினைந்து இல்லறம் நடத்தினர். கசடறக் கற்றுக் கற்பனை மிக்க புலவர்கள் தம் நுண்ணிய அறிவாலும் ஆழ்ந்த புலமையாலும் மன்னர்கள் தவறும் பொழுதெல்லாம் அவர்களுக்கு நன்னெறியை எடுத்துரைத்து நல்வழிப்படுத்தினர். யாழிசையில் கற்றுத் துறை போகிய பாணர்கள் தம் இன்னிசையால் தமிழகமெங்கும் தேனையும் அமுதையும் பாய்ச்சினர். மழைகண்ட மாமயில்போல் ஆடும் விறலியர் அரங்கமெங்கும், மின்னலும் வானவில்லும் மயிற் குலமும் நாணும் வண்ணம் நனிமிக ஆடினர். யாழும், இசையும், பாட்டும், குழலும் பால்வாய்ப் பசுந்தமிழின் இனிமையொத்து இயங்கின. முத்தமிழும் முக்கனியின் சுவையொத்து நாளும்



வளரும் நல்லறிவுபோல் ஒளிர்ந்தன. "வான் பொய்ப்பி
னும் தான் பொய்யாக் காவிரியும்", "வையை என்னும்
பொய்யாக் குலக் கொடியும்" தண் ஆன்பொருநையும், பஃ
றுளியாறும் தண்டமிழ் நாட்டைப் பைந்தமிழ் நாடாக்கின.
"மழை தொழில் உதவ மாதிரம் கொழுத்தது. தொடுப்
பின் ஆயிரம் வித்தியது விளைய, மக்கள் நோயிகந்து
நோக்கு விளங்கினர்." இவ் வண்ணம் நாடு இயற்கை வள
னும், செயற்கை வளனும் ஒருங்கே அடையப் பெற்றுக்
கண்கொள்ளாக் காட்சி ஈந்தது. மக்களும் ஒப்புரவு மிக்கவ
ராய்ப் பண்பும் நாகரிகமும் முதிர்ந்தவராய்த் திகழ்ந்தனர்.
கடவுட் கற்புடைய பெண்டிரோ, மனைவிளக்காய் மாசு
மறுவற்ற ஒளிக்கதிராய் இல்லறம் நடாத்திவந்தனர்.

ஈகையறத்தில் இணையற்ற ஏந்தல்களாய் அந் நாளில் வள்ளல்கள் பலர் வாழ்ந்து வந்தனர்.

"ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன் முல்லைக்
கீத்த செல்லா நல்லிசைப், படுமணியானைப் பறம்பிற்
கோமான் நெடுமாப் பாரியும், பருவமழையைத் தவறாது
பெறும் வளமலையை அடுத்த கானிலே, மஞ்ஞைக்குக் கலிங்
கம் நல்கிய அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகனாகிய
பேகனும், கறங்குமணி வாலுளைப் புரவியொடு வையகம்
மருள ஈரநன்மொழி இரவலர்க்கீந்த கழல்தொடித் தடக்கை
காரியும், நீல நாகம் நல்கிய கலிங்கம் ஆலமர் செல்வர்க்கு
அமர்ந்தனன் கொடுத்த ஆர்வ நன்மொழி ஆயும், அமிழ்து
விளை தீங்கனி ஒளவைக்கீந்த அரவக் கடல்தானை அதிக
னும், கரவாது நட்டோர் உவப்ப நடைப்பரிகாரம் முட்
டாது கொடுத்த நளிமலை நாடன் நள்ளியும், குறும்பொறை
நன்னாடு கோடியர்க் கீந்த ஓரிக்குதிரை ஓரியும்" ஆகிய ஏழு

வள்ளல்களும் தண்டமிழ்ப் புலவர்கள் தமிழ்நலம் சொட்டப் புகழும் வண்ணம் ஈகை அறத்தினைச் செய்து வள்ளல்களுள் முடிமணிபோல் விளங்கினர். ஆனால் அந்தோ! இப்பெருவள்ளல்கள் எழுவரும் காலப் பெருவெளியில் ஒருவர் பின் ஒருவராய்க் கலந்து மறைந்தனர். கற்ற புலவரும் வல்ல பாணரும் பாடினியும் அங்கங் கரைய அழுது புலம்பினர். இனிப் பற்றுக்கோடாக யாரைச் சென்றடைவோம் என ஏங்கிக் கதறினர். அலைமோதும் கடல் நடுவே கலம் உடைந்த கங்குற் போதில் கதறியழும் மக்களைப் போன்று கலைஞர்கள் உளம் நொந்து வருந்தினர்.

பாநலம் மிக்க பாவலரும், பாடல் வல்ல பாணரும் பாடினியும், ஆடல் வல்ல விறலியரும் கூத்தரும் வள்ளல் எழுவரின் மறைவை எண்ணி வருந்தும்பொழுதில் விடிவெள்ளியாய், கலங்கரை விளக்கமாய் முதிரமலையின் கண்ணே முழுமணி ஒன்று தோன்றியது. நற்றமிழ் வரப்பெற்று நாவலர் போற்றும் வண்ணம் குமணன் எனப் பெயர் பெற்ற அப் பெருவள்ளல் உரிய நாளில் அரியணை ஏறி ஆண்டனன். ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்ட சின்னாட்களுக் கெல்லாம் அவன் "பாத்தரும் பண்பு" தமிழக மெங்கணும் தென்றல்போல் பரவியது. மன்னன் குமணனுக்கு இளங்குமணன் எனப் பேர்கொண்ட தம்பியும் ஒருவன் இருந்தான். தன் அண்ணனின் ஆட்சியையும் அவன் அடையும் செல்வாக்கையும் மிக்க விழிப்புடனிருந்து நோக்கிவந்தான்.

குமணன் வீற்றிருந்து ஆண்ட முதிரமலை இயற்கை வளன் மிக உடையது. புதுப்புது வருவாயை யுடையது. அங்கே மூங்கில் வானுற ஓங்கி வளர்ந்திருக்கும். அவைகளை



யடுத்துச் சுரபுன்னை மரங்கள் பூ மணம் பொலிய நீண்டிருக்கும். ஆசினியும் அழகிய பலாவும் முள்ளைப் புறத்தே உடைய முழவுபோலும் பழங்களைத் தாங்கிக் கொண் டிருக்கும். அத் தீஞ்சுவைப் பழத்தை உண்ண ஆசைப்பட்ட கடுவன் ஆசையார உண்டு பஞ்சி போன்ற மயிரைத் தலையிலே கொண்ட தன் மந்தியைக் கைகாட்டி அழைக்கும். இவ்விதம் விந்தைக்குரிய காட்சிகள் பலவற் றைக் கொண்டு அவனுடைய மலை, விலங்கின் ஆசையையும் தணித்து வந்ததெனில், இரவலர் ஆசையை எவ்வண்ணம் அது நிறைவேற்றி யிருக்கு மென்பது சொல்லாமலே போதரும். கலங்கரையைக் கண்ட கலங்கள் விரைந்து கரையை வந்தடைவது போன்று பரிசிலர் குமணனின் முதிரமலையை நோக்கி வந்தனர்.

ஞாயிற்றின் வெய்ய கதிர்கள் காய்வதால் புல்லும் கரிந்து காட்சி நல்கும் கானத்தில் "கல்"லெனும் ஓசை யுடன் இடித்து முழக்கிப் பெருமழை பொழிந்து வாடிய கானம் பொலிவுறச் செய்வதைப் போன்று வறுமையால் அவிழ்பதம் காணாது வருந்திவரும் இரவலர்களின் வயிறு குளிரும் வண்ணம், தாளிப்புப் பொருந்திய, கொழுவிய துவையொடும் கலந்த, நெய்யுடை அடிசிலை விண்மீனென விளங்கும் பொன் கலங்களில் பரப்பி அவர்களுடன் தானும் இருந்து உண்ணும் பான்மையோனாகக் குமணன் விளங் கினன். பாடுவாரது சுற்றமே தன் சுற்றமெனக் கருதிப் பொன்னணிகளை அவர்களுக்கு எளிதாக வழங்கி மகிழ் வுடன் இருந்தான். தம்மிடம் நட்டோரினும் இரவலரிடம் பேரன்பு காட்டும் இவ் வள்ளலின் பெருங் குணம் அக்காலத் தமிழகமெங்கணும் பரந்தது.

வறுமையெனும் பேரலைகளால் அங்கும் இங்கும் அலைக்கப் பட்டு வள்ளல் எனும் கரை காணாது பெருஞ்சித்திரனார் என்னும் நல்லிசைப் புலவர் மிகவும் அலமந்தார். அவருடைய வறுமையைக் கேட்டால் கல்லும் உருகிக் கண்ணீர் விடும். ஆயினும் அப்புலவர் சான்றாண்மைக்கு இழுக்கு நேரும் வண்ணம் சிறிதும் வழுவாது வாழ்ந்துவந்தார். வறுமையிற் செம்மையான வாழ்க்கை நடாத்த அரும்பாடு பட்டார். பெருமிதமும் மிடுக்கும் அவருடைய சிறப்புப் பண்புகளாக மிளிர்ந்தன. புரவலர் அவரைச் சிறிது தாழ்க்க வைப்பினும் அன்னார் சிறிது கொடுப்பினும் அவருடைய உள்ளம் மிகவும் வருந்தியது. காலம் தாழ்த்திய காவலனையும் சிறிது கொடுத்துக் கொள்க எனக் கூறும் சிற்றரசனையும் அவர் துச்சமென எண்ணி நீங்கினார். அவர்களிடம் பரிசில் பெற்று வாழ்வதைவிட வறுமையே சிறந்ததென எண்ணினார்.

நுண் உணர்வுகளால் ஆளப்பட்ட புலவரின் சீரிய உள்ளம் நிரயம் ஒத்த வறுமையைப் போக்கத் தக்க வள்ளலை நாடிச் சென்றது. இல்லத்தின் கண்ணே அரிநடம் செய்த வறுமையின் கொடுமையை நொந்தவராய், அக் காலத்துப் பெரும்புகழுடன் விளங்கிய "கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினியை" அடைந்தார். புலவரின் வரவறிந்த அப்பெருவள்ளல் அவருக்குரிய பரிசில்களைத் தன் உழையர் வாயிலாக அனுப்பினான். பெருஞ்சித்திரனாரின் உள்ளம் அது கண்டு மிக்க வருந்தியது. தம்மைக் காணாமலே அனுப்பிய அப்பொருளைப் பெற அவருடைய உள்ளம் விரும்பவில்லை. தம்முடைய கருத்தைப் பரிசில் கொணர்ந்தவனின்



மூலமாகவே அரசனுக்குத் தெரிவித்துவிட்டு அவ்விடம் விட்டகன்று வேறு வள்ளியோனை நாடிச் சென்றார்.

"துன்பம் தொடர்ந்துவரும்" என்னும் தொன்மொழிக் கிணங்க அவருடைய கெட்டகாலம் அவரை விட்டு நீங்கவில்லை. வெளிமான் என்னும் குறுநில மன்னனைத் தேடிச் சென்ற அவர், அவனை நல்லுடலோடு காணும் பேறு பெறவில்லை. வெளிமானின் வாழ்நாள் தன் இறுதிக் காலத்தை எதிர்நோக்கியவண்ணமிருந்தது. அவனுடைய ஆவி அவன் பொன்னுடலை விட்டு நீங்கும் தருவாயிலிருந்தது. துன்பம் தரத்தக்க அவ் வேளையிலும் அவன் புலவரின் வரவறிந்து இன்பம் மிகக் கொண்டான். புலவரைக் கண்டு அகமகிழ்ந்தான். அருகில் நின்ற தன் இளவலை நோக்கிப் புலவர்க்குப் பரிசில் பல ஈந்து விடை நல்குமாறு சொல்லியவண்ணமே ஆவி துறந்தான். புலவரின் மனம் இடியேற்றால் தாக்குண்டது போன்று மருண்டது. கானல் நீரை நீரென எண்ணி நீட்டிய தன் வாய்க்கு ஏதும் கிடைக்காது போகவே வருந்தி அலறும் இளமானைப் போன்று பெருஞ்சித்திரனார் இவ்வுலகை நீத்த வெளிமானை எண்ணி வருந்தினார் ; இரங்கிப் பாடினார்.

தன் தலைவனின் உள்ளத்தையும் அவனுடைய சொல்லின் பொருளையும் நன்குணராத இளவெளிமான் புலவரை அவணின்றும் அனுப்பக் கருதி அவர்க்குச் சிறிது பொருள் கொடுத்தான். பெரும் புலமை வாய்ந்த தமக்கு ஏதோ பிச்சையிடுவதைப் போன்று அவன் அளித்த பரிசிலை மறுத்து அவ்விடம் விட்டகன்றார் புலவர்.

இங்ஙனம் பசுஞ்சோலை என்று எண்ணிய இடமெல்லாம் பாலையாக வெதும்பியது கண்டு புலவர் உளம் நைந்தார். இனி எங்குச் செல்வது, யாரைக் காண்பது என்ற எண்ணம் அவர் உள்ளத்தை அலைத்தது. அவ் வேளையில் தான் முதிரமலை மன்னன் குமணனின் கொடைத்திறம் பற்றிய செய்திகளை அவர் அறிந்தார். விரைந்து சென்றார். அப் பெருவள்ளலைக் கண்டார். இடும்பை பலவற்றை இடையறாது அனுபவித்த அவர் உள்ளம் அவனைக் கண்ட அளவிலே அன்பின் பெருக்கெடுத்தது. தம் வறுமையின் கொடிய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதைப் போன்று அச் செம்மலிடம் செப்பினார்.

"அதிரா யாணர் முதிரத்துக் கிழவ! இயற்றேர்க் குமண! ஈகைச் செந்நுகத்தைத் தாங்கி வந்த எழுவள்ளல் களும் மாய்ந்த பின்னர்க் கண்டோர் கழிவிரக்கங் கொள்ளும் வண்ணம் பாடிவரும் பாணரும் பிறருமாய் இரந்தோரது துன்பத்தைத் தீர்க்கக் கடவோன் யான் என நீ இருப்பதை அறிந்து விரைந்து உன்னிடம் வருகின்றனர். யானும் அவ் வண்ணமே என் வறுமை தீர நின்னையே உள்ளி வந்தனன். உலகம் முழுவதும் விளங்கும் தலைமையினை உடைய ஏந்தலே! புகழ் மேம்பட்ட வண்மையுடனே நின் வேலும் பகையிடத்தே மேம்படுவதாக."

"கூர்வேற்குமண! இன்னும் எனது உயிர் கழிய வில்லையே என்று சொல்லிக்கொண்டு வாழும்நாளை வெறுத்துத் தான் பிடித்த கோலே காலாகக் கொண்டு குறுகப் பல அடியிட்டு நடந்து, நூலை விரித்தாற் போன்ற மயிரை யுடையவளாய்க் கண்ணொளியையும் இழந்து முற்றத் திடத்துப் போகமாட்டாத மூத்த என் அன்புடைத்



தெய்வத் தாயும், பசந்த மேனியுடனே வறுமை எண்ணம் பலகாலும் வருத்த வருந்தி, இடையில் தாங்கிய சிறு பிள்ளை கள் பாலில்லாத மார்பை வருத்த அது தாங்காது குப்பையின் கண்ணே முன்னே கொய்யப்பட்ட கீரையின்கண் சிறிது கிளைத்து எழுந்த இளைய தளிரைப் பறித்து உப்பின்றி வேகவைத்துச் சோறும் மோருமின்றி அப் பசுங் கறியை உணவாகப் பிறருக்கு அருத்துவித்துத் தான் உண்ணாளாய் மாசுடைய குறை ஆடையை அணிந்து அறக் கடவுளை மிகப் பழித்து என்னை விரும்பியவளாகிய என் துணைவியும் சுற்றமும் மகிழும் வண்ணம், ஈனும் பருவத்து ஐவன நெற் பயிர் மழை காணாது வருந்தும்போதில் மழையை அடைந்து மகிழ்ந்ததைப் போன்று, இரவலர்க்குத் தந்த நின் பரிசில் திறம் எண்ணி வந்தேன். பசியால் உண்ணப்பட்டு உருக் குலைந்த என் சுற்றம் மகிழ நீ மனம் மாறுபட்டு மதக் களிற்றை அளித்தாலும் அதை வேண்டேன். நீ மகிழ்ந்து விரைந்து குன்றிபோல் சிறிது கொடுத்தாலும் அதைக் கொள்வேன்" என்று தம் இல்லின்கண் உள்ள வறுமையை யும் தம் உள்ளத்தின்கண் வாழும் பெருமித எண்ணத்தை யும் அவனுக்கு எடுத்தோதினார்:

வாழு நாளோடு யாண்டுபல உண்மையிற்
தீர்தல்செல் லாதுஎன் உயிரெனப் பலபுலந்து
கோல்கா லாகக் குறும்பல ஒதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பெரிதழிந்து
... ... ...

குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த
முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீருலையாக ஏற்றி மோரின்று
அவிழ்ப்பதம் மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள் அறம்பழியாத்
துவ்வா ளாகிய என்வெய் யோளும்
என்றாங்கு, இருவர் நெஞ்சமும் உவப்ப ...
... ... ... ... ...
உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண*

எனப் பாடக் கேட்ட குமணனின் நெஞ்சம் அனலிடை மெழுகென உருகியது. அவனுடைய நெஞ்சப் பாங்கை ஓர்ந்த பெருஞ்சித்திரனார் தாயைக் கண்ட சேய்போல் மேலும் தம் வறுமையை விளக்கித் தம் நெஞ்சை ஆற்றிக் கொள்ளலானார்.

“பாடுவாரின் பண்புடைய நண்பனே! நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன், மட்டார் மறுகின் முதிரத் தோன், அவனிடம் செல்குவையாயின் நல்குவன் பெரிதென நின்புகழைப் பலர் கூறக்கேட்டு வல்லே விரைந்து வந்தேன். இல்லின்கண் உணவின்மையால் அதனை வெறுத்துத் திரியும் புதல்வன், தாயிடமும் பால் பெறாததால் கூழையும் சோற்றையும் விரும்பி உள்ளே ஒன்றுமில்லா வறிய அடுகலன்களைத் திறந்து திறந்து பார்த்து ஆங்கு ஒன்றுங் காணாது அழ அதனைக் கண்ட தாய் ஆற்றொணாத் துயரத்துடன்

*புறம்: 159.



அவனை எடுத்துப் ‘புலி வருகிறது, புலி வருகிறது’ என அச்சமூட்டியும் ‘அம்புலியே வா வா’ என ஆசை காட்டியும் ‘நின் அப்பாவின் முகம் எவ்வாறுளது? காட்டு’ என அவனிடம் விளையாடியும் நனவின் கண்ணும் துயர முறுவோளின் துன்பம் தொலையப் பரிசில் தந்துவிடுவாயாக” எனப் பாடித் தாம் விரும்பிய பரிசில் முறையையும் விளக்கினார்.

“பெருமானே! யான் சில சொல்ல அறிவேனாயினும் அறியேனாயினும் என் கல்வியளவை நோக்காது நின்னளவை அறிவாயாக. துன்பமுறும் என் துணைவி நீ கொடுத்த செல்வத்தைக் கண்டு மருள, முத்துப்பட முற்றிய கொம்பினையும் ஒளிவிளங்கும் பட்டத்தினையும் இருமருங்கும் ஒன்றற்கொன்று மாறியொலிக்கும் மணியினையு முடைய அண்ணல் யானையின் மீதமர்ந்து போதலை விரும்பினேன். நான் பெற்ற பெருஞ்செல்வங் கண்டு அரசர் பிறர் நாணும் வண்ணம் பெயர்தல் வேண்டும்” எனப் பொருள்படும் பாடலைப் பாடினார்.

நாள்படு செல்வங் காண்டொறு மருளப்
பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப் பேந்திய வரைமருள் நோன்பகடு
ஒளிதிகழ் ஓடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து
செலனசைஇ யுற்றனன் விறன்மிகு குரிசில்*

என்னும் அடிகளின் மூலம் செந்தமிழ்ப் புலவரின் சிந்தையறிந்தான் அச் செங்கோற் குமணன். ‘என்றும் வேந்தர் நாணப் பெயர்வேன்’ எனச் செப்பிய அப்புலவரின் அகத்தையும் நன்கு உணர்ந்தான். தான் கொடுக்கும் செல்வம்

*புறம் : 161.

இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் வென்று விளங்க வேண்டுமென அறிந்த அவன் பொன்னும் மணியும் பொலங்கலனும் பாய்மாவும் நெடுந்தேரும் ஈந்தான். தாம் பெற்ற செல்வங் கண்டு புலவரே மலைத்தார்.

வேண்டுமளவு நீரை முகந்து கடலினின்று மீளும் கார் மேகம் போன்று திகழ்குவியலுடன் தம் மனைவியைக் கண்டார். உடலும் உள்ளமும் மகிழ்ச்சியால் பொங்க அப் பெருமனைக்கிழத்தி கண்கள் விரியத் தம் கணவர் கொணர்ந்த கொழுநிதியை நோக்கினர். இல்லாளின் மருட்சியைக் கண்ட புலவர் களிசிறந்து "என் மனைக்குரியாய்! இவையெலாம் திருந்துவேற் குமணன் நல்கிய பரிசிலாகும். நின்னை விரும்புவார்க்கும் நீ விரும்புவார்க்கும் நின் சுற்றத்தார்க்கும் நெடுங்குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும் மற்றும் இன்ன தன்மையாரென்று கருதாது என்னொடுஞ் சூழாது வல்லாங்கு வாழ்தும் என்னாது எல்லோர்க்கும் கொடுப்பாயாக" என்று உரைத்தார்.

இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே *

என்ற அடிகளால், ஈயென இரந்து நின்ற புலவரை, ஈயும் புரவலனாக ஆக்கிய முதிரமலைக்கிழவனின் பெருமையை நன்கு உணரலாம்.

உலகத்து அரச குடும்பங்களின் வரலாற்றையும், பழந் தமிழ் நாட்டு வேந்தர்களின் குடும்ப வரலாற்றையும் ஒப்பு

* புறம் : 163.



நோக்கின், தமிழரசர் குடும்பங்கள் சீரும் சிறப்பும் வாய்ந்து தனித்து இலங்குகின்றன. தமிழரசர்கள் அறத் தொடு பொருந்திய ஆட்சி செய்தனர். குடிமக்களைத் தம் குழவிகளென எண்ணி அருள் செய்தனர். குடிகளும் அரசர் மாட்டு அன்புடையராய் அவர்க்காகத் தம் உயிரையும் ஈவதைப் பெரும்பேறாகக் கருதும்வண்ணம் தன்னலமற்ற ஆட்சி நடந்தது. அரசுரிமையைப் பெறுவதற்காகச் சூழ்ச்சிகள் நடந்ததில்லை. அண்ணனின் மனம் புண்ணுறாது அமைதியடையச் செய்வதற்காக அரச செல்வத்தைத் துறந்து அருந்துறவு பூண்ட இளங்கோவையும், நாட்டை ஆளும் உரிமையையும் புலவர்க்கு ஈந்து அரண்மனைப் புறத்தே நின்ற பெருஞ்சேரலிரும்பொறையையும் தமிழ்நாடு நன்கு அறியும்.

இவ்வித சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த குமணனின் தம்பிக்கு எவ்வாறோ மனத்தில் தீய எண்ணங்கள் உண்டாயின. தமிழரசர்களின் வரலாற்றிலும் தமிழர்தம் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் காணா வகையில் தமையனை எதிர்க்கத் தம்பியைத் தூண்டிவிட்டனர் சிலர். உறுதியான உள்ளம் பெற்றிராத இளங்குமணனும் சிறியர் விரித்த வலைக்குள் பட்டான்.

நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு*

என்னும் பொய்யாமொழியை விளக்கும் பெற்றியனாக விளங்கினான் இளங்குமணன். பொய்யர்தம் சூழ்ச்சி வலைப் பட்டு அண்ணனின் அருங்குணத்தையும் பார்புகழ ஆண்ட அவன் பெருமையினையும் கண்டு அழுக்காறு மிகக் கொண்டான். அரியணையினின்றும் குமணனைத் தூரத்தி அதில்

* குறள் : 452.

அமர அவன் உள்ளம் துடித்தது. எவ்வகையினும் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவது எனத் துணிந்தான்.

“அரசு கட்டிலை விரும்புகிறேன்” என்று இளங்குமணன் சொல்லியிருந்தால் குமணனே அதைத் தந்திருப்பான். தம்பியை அரியாசனத்தில் அமர்த்தித் தன் திருக்கைகளால் தானே முடிசூட்டி மகிழ்ந்திருப்பான். ஆனால் அழுக்காறுகொண்ட சிறியவன் சிந்தையிலே அண்ணனைப் பற்றிய சீரான எண்ணங்கள் எழவில்லை. “அழுக்காறு எனும் பாவி”யுடன் நட்புச் செய்தவர் எங்ஙனம் மேலான எண்ணங்களை எண்ணிப் பார்க்க முடியும்? இளங்குமணனும் தன்னைச் சார்ந்த புலையர்கூட்டத்துடன் சதிபல செய்து, ஆட்சியைக் கைப்பற்றினான். அத்துடன் அமையாது அருள் நிறைந்த தன் அண்ணன் அடவி சென்று வாழும் வகையிலே தீய பல செயல்களையும் செய்துவிட்டான். என்னே பறத்தின் வெற்றி! அறத் தலைவனுக்கு நேர்ந்த இரங்கத்தக்க வாழ்வுதான் என்னே!

மன்னன் குமணனோ “என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ” என எண்ணி எண்ணி அமைதி அடைந்தான். தண்டமிழ்க் காவியத் துறையில் மூழ்கிக் கவலையெலாம் மறந்து களிப்பில் திளைத்தான்.

கானமயில் தன் தோகை விரித்துக் கவினுற ஆடிய காவிலே வான்கோழி தன் பொல்லாச் சிறகை விரித்தாடியதுபோல, குமணன் இருந்து அணிசெய்த அரியணையில் இளங்குமணன் அமர்ந்திருந்தான். குயில் கூவிய மாஞ்சோலையில் ஆந்தைகள் அலறியதைப் போன்று புலவரும் பாணரும் இசையெழுப்பிய அவனது அவைக்களத்தில் புல்லர்கூட்டம் ஆரவாரம் செய்தது. நிலவில்லாத நீலவானம் போன்றும், நீரில்லாத தாமரைக்குளம் போன்றும்,



நிழலில்லாத வறுமரம் போன்றும், குமணனில்லாத முதிரமலை புல்லென்றிருந்தது. மாரி இல்லாத மாநிலம் என்ன பயனுடைத்து? குமணன் இல்லாத முதிரமலையும் பயன் பெற முடியாத பாறையாகக் காட்சியீந்தது.

பாணரும் கூத்தரும் குமணனைக் காணாது வறிதே திரும்பினர். பெருஞ்சித்திரனாரைப் பலவகையிலும் ஒத்த புலவராகிய பெருந்தலைச்சாத்தனார் தம் வறுமையைத் தீர்க்கும் வள்ளல் குமணனே என எண்ணி விரைந்து வந்தார். குமணன் தன் தம்பியின் கொடுமையால் நாடிழந்து காடுபற்றி வாழ்கின்றான் என்பதைப் பிறர்வாயிலாகக் கேட்டார். ஆயினும் அவருடைய ஏழை உள்ளம் அவனை மறந்து பிறரைத் தேடிப்போக ஒருப்படவில்லை. குமணன் எந்நிலையில் இருப்பினும் தம் மிடியின் கொடுமையைக் கேட்பின் அது தீர்க்கும்வகை செய்வன் எனப் பெரிதும் நம்பினாரெனில், குமணனின் கொடைப்புகழ் அக்காலம் எங்ஙனம் எவ்வண்ணம் பரவியிருந்தது என்பது நன்கு போதரும். குமணப் பெருந்தகை வாழ்வதாகக் கூறிய காட்டினை அறிந்து அதில் அவனைத் தேடத் தலைப்பட்டார். கார்முகிலிடையே கதிரவன் மறைந்திருப்பினும் அவன் இருப்பிடம் பார்த்ததும் பளிச்சென்று தெரிவதுபோல் அக்காட்டிலும் குமணனின் உறையுளை அறிந்து உவகை மீதூர நடந்தார்.

மூத்தோனின் அரியணையில் அமர்ந்ததோடு இளங்குமணனை அமைதி அடையுமாறு அவனைச் சூழ்ந்திருந்த கயவர்கள் விடவில்லை. தமையன் உயிரோடு இருக்கும் வரைக்கும் தம்பியின் ஆட்சியுரிமை நிலைக்காது எனவும், என்றைக்காவது ஒருநாள் குமணனால் அது கைக்கொள்ளப்படுமெனவும் அவனிடம் கழறினர். குமணனின் உடல் இவ்வுலகில் நிலவும்வரை இளங்குமணனின் உயிருக்கும்

உடைமைக்கும் உரிமைக்கும் ஆபத்து வருமெனப் பேசிக் குமணனின் தலையைக் கொய்ய முடிவு செய்தனர். இளையவனும் மதிமயங்கி அண்ணனின் தலைக்கு விலைவைத்தான். குமணனின் தலை கொணர்வார் செம்பொன் கோடி பெறுவார் எனப் பறை அறைந்தான்.

"உடன்பிறப்பில்லா உடம்பு பாழ்" என்னும் முதுமொழியை மெய்ப்பித்துக் காட்டினான் இளங்குமணன். தம்பி ஒருவன் பிறக்கவில்லையெனில், குமணனின் தலைக்கு விலையாக யார் கோடி செம்பொன் கொடுக்கத் துணிவார்? மண்ணோடு மண்ணாக மக்கிப் போகவேண்டிய உடம்பை இளங்குமணன் எவ்வளவு உயர்ந்த பொருளாக உலகுக்குக் காட்டினான். குமணனுக்கு முன்னே இசையுடன் வாழ்ந்து, இரப்பவர் சுற்றமாய் விளங்கிய ஏழுவள்ளல்களும் எவ்வளவு இயற்கையாக மடிந்து போயினர்! அவர்களின் தலையைப் பற்றிக் கவலைப் பட்டவர் யார்? விலை வைத்தவர் யார்? தரையிலே புதைக்கப்பட்டோ, அன்றித் தணலிலே எரிக்கப்பட்டோ அவர்களின் உடல்கள் மறைந்து போயின. ஆனால் அவ் வெழுவருக்கும் கிட்டாத ஓர் அரிய வாய்ப்பு முதிரமலைக் கிழவனுக்குக் கிட்டியது பெரு வியப்பே யாகும். அவ் வெழுவரின் ஈகைச் செயலைத் தான் ஒருவனே தனிநின்று நிறைவேற்றிய காரணத்தால் ஒருகால் அத்தகைய நிலை கிட்டியதோ என்னவோ?

இங்ஙனம் குமணனின் தலை மிகப் பெரு விலையுடைத்தாயிருந்த காலத்தில்தான் பெருந்தலைச்சாத்தனார் அவ் வள்ளலை அடைந்தார். வறுமையின் துன்பமே அவர்நெஞ்சமெங்கும் நிரம்பியிருந்த காரணத்தால், குமணனின் பெருந் துன்பத்தை அவரால் எண்ண முடியவில்லை. காட்டிடைக் குமணனைக் கண்ட அவர், தம் இல்லம் எங்ஙனம்



இன்மையால் பீடிக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்கத் துவங்கினார். மனைவியின் தேற்ற முடியாப் பெருந்துயரைக் குமணனிடம் வருணித்தார்.

"நற்போர்க் குமண! புடையோங்கிய அடுப்பு அடுதலை மறந்ததால், அதன்கண் காளாம்பி பூத்துள்ளது. பசியால் வருந்தி உடம்பும் மெலிந்ததால், மார்பைச் சுவைக்குந் தோறும் மதலை அழ, அதன் முகத்தைக் கண்டு ஆற்றாது நீரால் நிரம்பிய குளிர்ந்த கண்ணையுடைய என் மனைவியின் வருத்தத்தைப் பார்த்து, இந்த வருத்தத்தைத் தீர்த்தற்குரியவன் நீயேயென நினைந்து நின்பால் வந்தேன். நல்லயாழையும் முழவையுமுடைய கூத்தரது மிடியைக் கெடுக்கும் குடியின்கண் பிறந்தோயாதலால், இந்நிலையிலும் உன்னை வலித்தாயினும் பொருள்கொள்ளாது விடேன். என் வறுமைநிலை அத்தகைத்து" என்று பொருள்படும் பாடலைப் பாடினார்.

ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
... ... ... ... ...
... ... ... ... ...
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த விரிதழ் மழைக்கணென்
மனையோள் எவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
எந்நிலை அறிந்தனை யாயின் இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளாது அமையலென் அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே*

என்ற கனிவுடைக் கவியைக் கேட்டுக் கற்றறிந்த காவலன

*புறம் : 164.

உள்ளம் நனி மிக வருந்தியது. அவரது இன்மையைப் போக்கக் காட்டிலே உறையும் தன்னால் என்ன செய்ய முடியும் எனக் கவன்றது அவன் நெஞ்சம். நாடிழந்து காட்டிலே உறையும் தன் வாழ்வைவிடப் புலவரின் வறுமை அவனுக்கு இன்னாததாகப் புலப்பட்டது. இரப்பவர்க்கு இல்லையென்னாது மணியும் பொன்னும் வாரி வழங்கிய வளமுள்ள கைகள் காலத்தின் வேறுபாட்டால் பயவாக் களர் நிலம்போல் மாறிவிட்ட கொடுமையை எண்ணி எண்ணி மனம் உளைந்தான்.

உயிரினும் ஒருவருக்கு உயர்ந்த பொருள் வேறெதுவு மில்லை. அதனால் உயிரை இழப்பதைக் காட்டிலும் கொடுமையானது ஒருவருக்கு வேறொன்றும் இருக்கமுடியாது. ஆனால் இவ்வரிய உயிரையும் மகிழ்ச்சியாகப் பிரியுமாறு செய்யக்கூடிய இன்பச் செயல் உலகத்தில் ஒன்றுளது. தமிழ்மக்கள் அதைப் பொன்னெனப் போற்றி வளர்த்தனர். அவ்வின்பந்தான் "ஈத்துவக்கும் இன்பம்." இவ்வின்பச் செயலை என்று நிறைவேற்ற ஆற்றலில்லாது போகின்றதோ அன்றே அரிய உயிரையும் களிப்புடன் போக்கிக்கொள்ளலாம். பொய்யாமொழிப் புலவராகிய திருவள்ளுவர் இக் கருத்தினை,

> சாதலி னின்னாத தில்லை இனிததூஉ
> ஈதலியையாக் கடை.*

என்ற குறளடிகளால் மிக இனிதாக விளக்கிப் போந்தார். ஒப்புரவினால் மிக உயர்ந்த குமணனின் உள்ளம் புலவரின் மிடியைத் தீர்க்கும் வழியை ஒரு நொடியில் உணர்ந்தது.

தன்னுடைய தலை கோடி செம்பொன் பெறுமென்பதை அறிந்த வள்ளல் அளப்பரிய மகிழ்ச்சி கொண்டான். உடை-

*குறள் : 230.



வாளை உருவிப் புலவர் கையினில் கொடுத்தான். "புலவரே! ஒன்றுக்கும் பற்றாத என் அற்பத் தலைக்குக் கோடி பொன் கொடுப்பதாய் எம்பி சாற்றியுள்ளான். நீவிர் சற்றும் தயங்காது என் தலைதனைக் கொண்டுபோய்த் தம்பி கைக் கொடுத்து அதன் விலைதனைப் பெற்று நும் வறுமைநோய் களைமின்" என்றான்.

அவ்வுரை கேட்ட அளவில் பெருந்தலைச்சாத்தனாரின் உள்ளம் பாகாய் உருகியது. கண்கள் நீரைச் சிந்தின. உடல் புல்லரித்தது. அன்பின் குன்றை – அருளின் கடலை – தமிழின் அமுதைக் கண்டு விம்மினார். கண்முன்னே காண்பது குமணன் எனும் மனிதன் தானா, அன்றிச் செயற்கரிய செய்யவல்ல இறைவன் தானா எனும் ஐயங்கொண்டார். தெய்வத் தமிழ்ப்பாடல்களைக் கேட்டு, உளம்மகிழ்ந்து, நாட்டைக் கொடுத்த வேந்தர்களை அவர் அறிவார். அரியணையை ஈந்த அரசர்களையும் அவர் தெரிவார். ஆனால் தமிழுக்காகத் தலையையே கொடுத்த தாரணிவேந்தரை இதுவரை அவர் அறிந்தவரல்லர். இதோ! அவர் கண்முன்னர்க் காணும் முதிரமலையான் தலையைக் கொடுத்துள்ளான். என்னே அவன் வள்ளன்மை! என்னே அவன் தமிழ்ப் பற்று! என்னே அவன் புலவர்மாட்டு வைத்த பேரன்பு! கருணை வள்ளலாகிய அப் பெரியோனைக் கொன்று, அவன் தலையைக் கொண்டு சென்று, அதற்குரிய விலையினைப் பெற்றுப் புலவர் தம் வறுமையை ஓட்டுவரோ? அதைவிட அவரே செத்தொழிவார்.

பைந்தமிழ்ப் புலவரின் கருத்திலே ஓர் எண்ணம் மின்னல்போல் ஓடியது. அருள்வாரியாகிய இக் குமணனின் செயலை அவன் தம்பியிடம் சென்று உரைத்து, அவனை நல்வழிப் படுத்துவோம் என எண்ணினார். தம் வீட்டை மறந்தார். இன்பக் குழந்தையின் அழுகையொலி அவர்காது

களிலே ஒலிக்கவில்லை. அருமை மனைவியின் ஆற்றுந் துயர வடிவமும் அவர் கண்ணெதிரே நிற்கவில்லை. காத்தற் கடவுளெனத் தம் முன்னே நிற்கும் குமணன் கொடுத்த வாளைக் கையில் ஏந்தினார். காற்றினும் கடுகி அக் காட்டைக் கடந்தார். ஏந்திய வாளுடன் இளங்குமணன் அவைக்களம் நோக்கிப் பறந்தார்.

தாங்கிய வாளுடன் தமிழ்ப் புலவர் ஒருவர் வாயிலின் கண்ணே வந்து நிற்கின்றார் என உரைத்தான் வாயில் காப்போன். "வரவிடு" எனச்செப்பி, இளங்குமணன் நெட்டைக் கனவினிலே நீந்தலானான். வாளுடன் வந்த புலவர் திண்ணமாய் என் அண்ணன் உயிரைப் போக்கியவராகத் தான் இருத்தல்வேண்டும், இல்லெனில் ஏடும் எழுத்தாணியும் பற்றவேண்டிய கையிலே வாளை ஏன் ஏந்தவேண்டும் என நினைந்தான்.

வானை மறைத்த கார்மேகம் கலைந்தது. இருள் மறைந்தது. ஒளி பரந்தது. இளையனின் இயற்கையான உள்ளமும் விழித்தெழத் துவங்கியது. ஒருகால் அண்ணனின் ஆவியை அவர் நீக்கியிருப்பாரோஎன எண்ணினான். உடன்தோன்றிய குருதிஉறவை உணர்ந்த உள்ளம் நெகிழத் தலைப்பட்டது.

அவ் வேளையில் உருவிய வாளுடன், புலவர் உள்ளே வந்தார். அரசுரிமைக்கு ஆசைப்பட்டு, அருள்வடிவைக் கானகம் அனுப்பிய கடைத்தம்பியைக் கண்டார். ஒளியைத் துரத்திய இருளைப் போன்றல்லவா இளங்குமணன் செயல் உள்ளது! குமணன் தம்பியா இப் பாதகத்தைச் செய்தான் என அவர்மனம் சிறிது நேரம் மலைத்தது. இளையோனின் செவ்வியறிந்து சீரொழுகும் கருத்துக்களைக் கூறலானார் :

"எப்பொருளும் நிலையாத இந் நிலவுலகத்தின்கண்ணே நிலைபெறுதலைக் கருதியவர், தம் புகழை இப் பாரின் கண்ணே நிறுத்தித் தாம் மறைந்தனர். அணுகுதற்கரிய பெருஞ் செல்வர், வறுமையால் இரப்பவர்க்குக் கொடாமை



யால் வண்மையையுடைய மக்களைப்போன்று தம் பெயரை நிறுத்தி உலகோடு தொடர்ந்து போதலை அறியாதவராயினார். பாடி வருவார்க்கு யானையை மிகக் கொடுக்கும் வலிய குதிரையையுடைய தலைவனை யான் பாடி நின்றேன். பயனின்றியே பரிசிலன் பெயர்தல் நாட்டை இழந்த அதனினும் நனி இன்னாதென நினைந்து தன்னிற் சிறந்த பொருள் வேறொன்றின்மையால் தலையை எனக்குத் தருவதற்காக வாளைத் தந்தான். நின் தமையனைக் கண்டு வென்றி மிக்க உவகையால் வந்தேன்" என்று பொருள்தரும் அரிய பாடலைப் பாடினார் :

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க் கீஇயா மையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாள்தாழ் படுமணி யிரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
ஆடுமலி யுவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே*

என்ற துன்பப் பாடலைக் கேட்ட இளங்குமணன் இன்னது செய்வதெனத் தெரியாமல் திகைத்தான். புலவரின் பாடல் தன் அண்ணனின் தலைக்கொடையைக் கூறுகின்றதே ஒழிய அவர் இருப்பைக் கூறவில்லையே எனக் கவன்றான்.

*புறம் : 165.

“ வாள் தந்தனனே தலையெனக்கீயே ”, “ ஆடுமலி உவகை யொடு வருவல் ” என்ற அடிகள் அவன் நெஞ்சைப் பிளந்தன. வாள்தந்த தன் தமையனைப் புலவர் கொன்று வந்தார்? இளங்குமணன் அண்ணனை எண்ணிப் பதறினன். மயங்கி அரியணையினின்றும் விழுந்தான். மயக்கம் தெளிந்ததும் புலவரை நோக்கி வினவினன்.

தாம் எண்ணியது விளைந்தது கண்டு பெருந்தலைச் சாத்தனர் இன்புற்றார். குமணனின் தம்பியாகப் பிறந்தவன் இயல்பால் எங்ஙனம் தீயவனாக இருக்கமுடியும் என வியந்தார். தீய மனம் அழிந்து அவனுடைய நல்ல மனம் தளிர்ப்பதைக் கண்டு களிப்புற்ற புலவர், குமணனின் நிலையினைத் தெரிவித்து அவன் அகங்குழைந்து கரையும் வண்ணம் அரிய சில செப்பினர்.

விரைந்து செல்லும் பாய்மா பூட்டிய தேரின்மேல் புலவரை இருக்கச்செய்து காற்றெனப் பறந்தான் இளங்குமணன். கல்லும் முள்ளும் கலந்து கடத்தற்கரிய அருவழியினைக் கடந்து அடவி சென்றான். அண்ணனைக் கண்டு நாணி நின்றான். புலவர், இருவரையும் இன்புறச் செய்யும் மொழி பேசி இளையோனின் நெஞ்சநிலையை விளக்கினர். குமணன் நாடாள வேண்டுமெனத் தெரிவித்தார். புலவர்கையில் வாள்தந்த குமணன், அவர்சொற்படி நடப்பதைத் தவிர வேறு வழி இல்லெனத் தெளிந்து நாடு திரும்பினன். அதுகண்ட இளங்குமணன் இதயம் தாமரை போல் மலர்ந்தது. மக்கள் நாடெங்கும் விழா எடுத்துக் குமணனின் வருகையைக் கொண்டாடினர். பாணர் யாழிசைத்தனர். விறலியர் ஆடினர். புலவர் அவனது பெருமையைப் பாடினர். நாட்டினர் அனைவரும் பெருந்தலைச்சாத்தனாரின் அரிய செயலை வியந்து பாராட்டினர்.

V211,1'C
N52
109154
44370